ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2292/57 – 2022 අගෝස්තු මස 13 වැනි සෙනසුරාදා – 2022.08.13
*2292/57 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 7/2017

**2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம்**

*2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

**தவிசாளர்,**
இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான
முகவராண்மை.

கொழும்பு,
2020, பெப்புருவரி 17.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2022 ஆம் ஆண்டின் இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1A – PG 5822 – 36 (2022/05)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் பிரயோகம்**

2. இவ்விதிகள் பின்வருவோருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும் அம்சத்தில் சம்பந்தப்பட்டுள்ள, (இதனகத்துப்பின்னர் "இஊபபமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் சபையுறுப்பினர்கள், பணிப்பாளர்கள், அலுவலர்கள், குறித்துரைக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் கையளிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர்கள் அத்துடன் அவர்களின் ஊழியர்கள் என்போருட்பட, இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான முகவராண்மை;

(ஆ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும் அம்சத்தில் சம்பந்தப்பட்டுள்ள, இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் சபையுறுப்பினர்கள், பணிப்பாளர்கள், அலுவலர்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஊழியர்கள் அத்துடன் கையளிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர்கள், அவர்களின் ஊழியர்கள் என்போருட்பட, இலங்கையின் ஏதேனும் விளையாட்டு ஒழுங்கமைப்பு; அத்துடன்

(இ) பின்வரும் விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கு மற்றும் வேறு ஆட்களுக்கு, அத்தகைய ஆள் இலங்கையின் நாட்டினத்தவராகவிருப்பினுஞ்சரி அல்லது இலங்கையில் வதிபவராகவிருப்பினுஞ்சரி:

(i) ஏதேனும் களரி, ஆட்டக்குழு, கழகம் அல்லது ஒன்றியம் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் உறுப்பினராகவுள்ள அல்லது உரிமம் வைத்திருப்பவராகவுள்ள ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும், அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினருக்கும் அல்லது இணைந்த ஒழுங்கமைப்புக்கும்;

(ii) ஏதேனும் நிகழ்ச்சி, போட்டி அல்லது வேறு செயற்பாடு நடைபெறுகின்ற இடத்தைப் பொருட்படுத்தாது, ஏதேனும் களரி, ஆட்டக்குழு, கழகம் அல்லது ஒன்றியம் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினரினால் அல்லது இணைந்த ஒழுங்கமைப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, கூட்டப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நிகழ்ச்சியில், போட்டியில் அல்லது வேறு செயற்பாட்டில் அத்தகைய தன்மையில் பங்குபற்றுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும்;

(iii) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கத்துக்காக, ஏதேனும் களரி, ஆட்டக்குழு, கழகம் அல்லது ஒன்றியம் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டு ஒழுங்கமைப்பின் நியாயாதிக்கத்துக்கமைந்தவராகவுள்ள, ஏதேனும் அரசாங்க விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால், ஓர் உரிமத்தினால் அல்லது வேறு ஒப்பந்தமுறையிலான ஒழுங்கேற்பாட்டினால் அல்லது வேறு வகையாக அளிக்கப்பட்ட தராதர அங்கீகாரத்தின் பயனைக்கொண்டு எவரேனும் விளையாட்டு வீரருக்கும், அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும், அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினருக்கும் அல்லது இணைந்த ஒழுங்கமைப்புக்கும்;

(iv) ஒரு தேசிய நிகழ்ச்சியின் அல்லது ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்புடன் இணைந்திராத தேசிய ஒன்றியமொன்றின் எவரேனும் ஒழுங்குபடுத்துநரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, நடாத்தப்பட்ட, கூட்டப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் ஏதேனும் தன்மையில் பங்குபற்றுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும்;

(v) பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக விளையாட்டு அல்லது உடற்றகுதிச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அல்லது பங்குபற்றுகின்ற ஆனால் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளினால் அல்லது ஏதேனும் இணைந்த அல்லது இணைந்திராத கழகம், ஒழுங்கமைப்பு, களரி, ஆட்டக்குழு அல்லது ஒன்றியத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்றுநடாத்தப்பட்ட போட்டிகளில் அல்லது நிகழ்ச்சிகளில் போட்டியிடாதவரும் மற்றும் பரீட்சிப்புக்கான சர்வதேச நியமங்களுடன் ஒத்திருக்கின்ற வேறு தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிவதற்குமுன்னர் ஐந்தாண்டுகளினுள் சர்வதேசமட்ட விளையாட்டு வீரரொருவராக அல்லது தேசியமட்ட விளையாட்டு வீரரொருவராக இராதுள்ளவரும் அல்லது ஒரு திறந்த வகுதியில் அல்லது வேறேதேனும் சர்வதேசச் சம்மேளனத்தினால், இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் அல்லது வேறு தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் நடாத்தப்பட்டவொரு

சர்வதேச நிகழ்ச்சியில் இலங்கையை அல்லது வேறேதேனும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியிராதவருமான எவரேனுமாளுக்கும்;

(vi) இலங்கையின் நாட்டினத்தவரொருவராக அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள எவரேனும் விளையாட்டு வீரராகவுள்ளவரும் மற்றும் போட்டியிடுவதற்காகவாயினுஞ்சரி, பயிற்சியளிப்பதற்காகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி இலங்கையில் சமுகமளிக்கின்ற எந்த விளையாட்டு வீரருக்கு உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் சட்டக்கோவை இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்குள்ள நியாயாதிக்கத்தை அளிக்கின்றதோ அந்த ஒவ்வொரு விளையாட்டு வீரராகவுள்ளவரும் உட்பட, வேறெவரேனும் ஆளுக்கும்.

3. விதி 2 இன் நோக்கத்துக்காகத் தேசியமட்ட விளையாட்டு வீரர் என்பது பின்வருவோரை உள்ளடக்கும்:-

(அ) கழகங்கள், களரிகள், ஆட்டக்குழுக்கள் அல்லது ஒன்றியங்கள் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டு ஒழுங்கமைப்பின் அல்லது ஒரு விளையாட்டு ஒழுங்கமைப்புடன் இணைந்த வேறேதேனும் ஒழுங்கமைப்பின் உறுப்பினர் அல்லது உரிமம் வைத்திருப்பவர் ஒருவராகவுள்ள எவரேனும் விளையாட்டு வீரர்;

(ஆ) ஒரு விளையாட்டு ஒழுங்கமைப்பினால், ஏதேனும் இணைந்த கழகத்தினால், ஒழுங்கமைப்பினால், களரியினால், ஆட்டக்குழுக்களினால் அல்லது ஒன்றியங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்று நடாத்தப்பட்ட ஏதேனும் போட்டியில், நிகழ்ச்சியில் அல்லது செயற்பாட்டில் பங்குபற்றுகின்ற அல்லது போட்டியிடுகின்ற எவரேனும் விளையாட்டு வீரர்;

(இ) ஒரு தராதர அங்கீகாரம், ஓர் உரிமம் அல்லது வேறேதேனும் ஒப்பந்தஞ்சார் உடன்படிக்கையின் பயனைக்கொண்டு இலங்கையில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிராகப் போராடும் நோக்கத்துக்காக இலங்கையிலுள்ள ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் இணைந்த கழகம், ஒழுங்கமைப்பு, களரி, ஆட்டக்குழு அல்லது ஒன்றியத்தின் நியாயாதிக்கத்தினுள் அடங்குகின்ற எவரேனும் விளையாட்டு வீரர்; அத்துடன்

(ஈ) இலங்கையிலுள்ள விளையாட்டுகள் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளரொருவரினால் அல்லது ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்புடன் இணைந்திராத வேறேதேனும் தேசிய ஒன்றியத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்று நடாத்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் பங்குபற்றுகின்ற எவரேனும் விளையாட்டு வீரர்.

4. விதி 2 இலுள்ள பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனுமாள், அவரது உறுப்பாண்மை, தராதர அங்கீகாரம் அல்லது ஏதேனும் விளையாட்டிலான பங்குபற்றுகையின் நிபந்தனையொன்றாக, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பிணிக்கப்படுவதற்கும், இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் அதிகாரத்துக்கமைய இவ்விதிகளை வலுவுறுத்துவதற்கும், இவ்விதிகளின்கீழ் கொணரப்பட்ட வழக்குகளையும் மேன்முறையீடுகளையும் கேட்டுத் தீர்மானிப்பதற்கு 38 ஆம் விதியிலும் 70 ஆம் விதியிலும் குறித்துரைக்கப்பட்ட கேட்புக் குழாங்களின் நியாயாதிக்கத்துக்கும் உடன்பட்டுக்கொண்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள்

5. பினவருவன ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளாக அமைதல் வேண்டும்:-

(அ) (i) விளையாட்டு வீரர் “B” மாதிரியின் பகுப்பாய்வை விட்டுக்கொடுத்து “B” மாதிரி பகுப்பாய்வுசெய்யப்படாதவிடத்து அல்லது விளையாட்டு வீரரின் “B” மாதிரியின் பகுப்பாய்வு, தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் விளையாட்டு வீரரின் “A” மாதிரியில் காணப்படுவதனை உறுதிப்படுத்துமிடத்து அல்லது விளையாட்டு வீரரின் “A” அல்லது “B” மாதிரி இருபாகங்களாகப் பிரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட மாதிரியின் உறுதிப்படுத்துகைப் பாகத்தின் பகுப்பாய்வு, பிரிக்கப்பட்ட மாதிரியின் முதலாவது பாகத்தில் காணப்பட்ட தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமையை உறுதிப்படுத்துமிடத்து அல்லது விளையாட்டு வீரர் பிரிக்கப்பட்ட

மாதிரியின் உறுதிப்படுத்துகைப் பாகத்தின் பகுப்பாய்வை விட்டுக்கொடுக்குமிடத்து, விளையாட்டு வீரரொருவரின் "A" மாதிரியில் தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்று அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமை;

(ii) எந்தப் பதார்த்தங்களுக்காக முடிபு வரையறையொன்று தடைசெய்யப்பட்ட நிரலில் அல்லது ஒரு தொழினுட்ப ஆவணத்தில் குறிப்பாக அடையாளங்காணப்படுகின்றதோ அந்தப் பதார்த்தங்கள் தவிர, ஒரு விளையாட்டு வீரரின் மாதிரியில் தடைசெய்யப்பட்டவொரு பதார்த்தத்தின் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகளின் அல்லது குறியீடுகளின் அறிக்கையிடப்பட்ட ஏதேனும் தொகை உள்ளமை;

(iii) பந்திகள் (i) மற்றும் (ii) என்பனவற்றின் நோக்கத்துக்காக, ஒவ்வொரு விளையாட்டு வீரரும், தடைசெய்யப்பட்ட பதார்த்தமெதுவும் தனது உடம்பினுட் செல்லாதிருப்பதனையும் தடைசெய்யப்பட்ட முறை எதுவும் பயன்படுத்தப்படாதிருப்பதனையும் உறுதிப்படுத்துவது அவரது பொறுப்பாகும், அதற்கிணங்க, 5 ஆம் விதியின்கீழ் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நிலைநாட்டுவதற்கென விளையாட்டு வீரரின் உட்கருத்துடனான தவறு, அசட்டை அல்லது அவர் அறிந்துகொண்டு அதனைப் பயன்படுத்துகின்றமை என்பன எடுத்துக்காட்டப்படவேண்டியது அவசியமல்ல;

(ஆ) விளையாட்டு வீரரொருவினால் தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்று அல்லது தடைசெய்யப்பட்ட முறையொன்று பயன்படுத்தப்படுதல் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு எத்தனிக்கப்படுதல். தடைசெய்யப்பட்ட பதார்த்தமெதுவும் அவரது உடம்பினுட் செல்லாதிருப்பதனையும் தடைசெய்யப்பட்ட முறையெதுவும் பயன்படுத்தப்படாதிருப்பதனையும் உறுதிப்படுத்துதல் விளையாட்டு வீரரின் தனிப்பட்ட கடமையாகும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றை நிலைநாட்டுவதற்கென ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை விளையாட்டு வீரரொருவரினால் பயன்படுத்தப்பட்டமைக்காக உட்கருத்துடனான தவறு, அசட்டை அல்லது அவர் அறிந்துகொண்டு அதனைப் பயன்படுத்துகின்றமை என்பன ஒரு விளையாட்டு வீரரினால் எடுத்துக்காட்டப்படவேண்டியது அவசியமல்ல, ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை பயன்படுத்தப்படுகின்றமையின் அல்லது பயன்படுத்தப்பட எத்தனிக்கப்படுகின்றமையின் வெற்றி அல்லது தோல்வி முக்கியமானதல்ல.

(இ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலான அறிவித்தலுக்குப் பின்னர் வலுக்கட்டாயமான நியாயப்படுத்துகையின்றி மாதிரிச் சேகரிப்பைத் தட்டிக்கழித்தல், அதற்கு உட்பட மறுத்தல் அல்லது தவறுதல்.

(ஈ) ஒரு பதிவுசெய்யப்பட்ட பரீட்சிப்புக் குழுவிலுள்ள விளையாட்டு வீரரொருவரினால் பன்னிரெண்டு மாதகாலப் பகுதியினுள், பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, மூன்று தவறிய பரீட்சிப்புகளின் அல்லது கோப்பிடப்படுகின்ற தவறுதல்களின் ஏதேனும் சேர்க்கை;

(உ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும்ட பாகத்துடன் குறுக்கிடுகின்றமை அல்லது குறுக்கிடுவதற்கு எத்தனிக்கின்றமை;

(ஊ) தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை ஒரு விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் உடைமையில் வைத்திருக்கின்றமை. இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(i) உடைமையானது 17 ஆம் விதிக்கிணங்க வழங்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "நோபவி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புடன் அல்லது வேறு ஏற்றுக்கொள்தகு நியாயப்படுத்துகையுடன் ஒத்ததாகவுள்ளதென விளையாட்டு வீரர் நிலைநாட்டினாலொழிய, போட்டியின்போது தடைசெய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது ஏதேனும் தடை செய்யப்பட்ட முறையை விளையாட்டு விரரொருவர் உடைமையில் வைத்திருத்தல் அல்லது போட்டியில் இல்லாத போது தடைசெய்யப்படுகின்ற ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட ஏதேனும் முறையை விளையாட்டு வீரரொருவர் உடைமையில் வைத்திருத்தல்; அத்துடன்

(ii) உடைமையானது, 17 ஆம் பிரிவிற்கிணங்க விளையாட்டு வீரரொருவருக்கு வழங்கப்பட்ட நோபவி யுடன் அல்லது வேறு ஏற்றுக்கொள்தகு நியாயப்படுத்துகையுடன் ஒத்ததாகவுள்ளதென விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் நிலைநாட்டினாலொழிய, போட்டியின்போது தடைசெய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட முறையை விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் உடைமையில் வைத்திருத்தல் அல்லது ஒரு விளையாட்டு வீரர், போட்டி அல்லது பயிற்சி சம்பந்தமாகப் போட்டியில் இல்லாதபோது ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட முறையை ஒரு விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் போட்டியில் இல்லாத போது உடைமையில் வைத்திருத்தல்;

(எ) தடைசெய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை விலைப்படுத்துகின்றமை அல்லது விலைப்படுத்துவதற்கு எத்தனிக்கின்றமை;

(ஏ) தடைசெய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையைப் போட்டியின்போதான எவரேனும் விளையாட்டு வீரருக்கு ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஊட்டுகின்றமை அல்லது ஊட்டுவதற்கு எத்தனிக்கின்றமை, அல்லது போட்டியில் இல்லாதபோது தடைசெய்யப்பட்ட ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட ஏதேனும் முறையை எவரேனும் விளையாட்டு வீரருக்குப் போட்டியில் இல்லாதபோது ஊட்டுகின்றமை அல்லது ஊட்டுவதற்கு எத்தனிக்கின்றமை;

(ஐ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் ஒரு மீறுகைக்கு அல்லது எத்தனிக்கப்பட்ட மீறுகைக்கு அல்லது 61 ஆம் விதியின்கீழ் வேறோர் ஆளினாலான ஏதேனும் மீறுகைக்கு உதவுகின்றமை, அதனை ஊக்குவிக்கின்றமை, அதற்குத் துணைபுரிகின்றமை, உடந்தையளிக்கின்றமை, சதிசெய்கின்றமை, அதனை மூடிமறைக்கின்றமை அல்லது அம்மீறுகையை அல்லது எத்தனிக்கப்பட்ட மீறுகையை உட்படுத்துகின்ற வேறேதேனும் வேண்டுமென்ற கூட்டுச்சதியைப் புரிகின்றமை;

(ஒ) இஊபபமு வின் அதிகாரத்துக்கமைய, பின்வருவோராகவுள்ள எவரேனும் விளையாட்டு வீரர் பழகுவதற்குத் தடைசெய்யப்பட்ட எவரேனும் ஆதரிப்பு ஆளணியினருடன் உயர்தொழிற்சார் அல்லது விளையாட்டு தொடர்பான தன்மையில் ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பழகுகின்றமை:-

(i) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் அதிகாரத்துக்கமையவிருப்பின், தகவின்மைக் காலப்பகுதியொன்றுக்கு உட்பட்டிருப்பவர்;

(ii) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் அதிகாரத்துக்கமைந்திராதிருப்பின், மற்றும் (இதனகத்துப்பின்னர் "சட்டக்கோவை எனக் குறிப்பீடு செய்யப்படும்) உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவரண்மைச் சட்டக்கோவையைப் பின்பற்றிப் பெறுபேறுகள் முகாமைச் செய்முறையில் தகவின்மை எதிர்நோக்கப்பட்டிராதிருக்குமிடத்து, அத்தகையை ஆளுக்குச் சட்டக் கோவை இணங்கியொழுகுகை விதிகள் ஏற்புடையற்பாலனவாக இருந்திருப்பின் ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீதுகையாக அமைந்திருக்கக்கூடிய நடத்தையில் ஈடுபட்டுள்ளாரென ஒரு குற்றவியல், ஒழுக்காற்று அல்லது உயர்தொழிற்சார் வழக்குநடவடிக்கையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பவர் அல்லது காணப்பட்டிருப்பவர். அத்தகைய ஆளின் தகைமையீனமளிக்கும் அந்தஸ்து, குற்றவியல், உயர்தொழிற்சார் அல்லது ஒழுக்காற்று முடிபிலிருந்து அல்லது சுமத்தப்பட்ட குற்றவியல், ஒழுக்காற்று அல்லது உயர்தொழிற்சார் தடைவிதிப்புக் காலப்பகுதியின் ஆறாண்டுகளின் நீட்சிக்கு வலுவிலிருத்தல் வேண்டும் அல்லது

(iii) பந்திகள் (i) மற்றும் (ii) இல் விவரிக்கப்பட்டவொரு தனியாளுக்காக ஒரு முகப்பாளராக அல்லது இடையீட்டாளராகச் சேவையாற்றுபவர் :

(ஓ) அதிகாரிகளுக்கு அறிக்கையிடுவதனை ஊக்கமிழக்கச்செய்வதற்கு அல்லது அதற்கெதிராகப் பழிவாங்குவதற்கு, அத்தகைய நடத்தை, விதி 5 (உ) வின் மீறுகையொன்றாக அமையாதவிடத்து, ஒரு விளையாட்டு வீரரினாலான அல்லது வேறு ஆளினாலான பின்வரும் செயல்கள் :

(i) சார்த்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை அல்லது உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவரண்மைக்கான "உஊபபமு" சட்டக்ககோவை, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, சட்ட வலுவுறுத்தல, ஒழுங்குபடுத்தும் அல்லது உயர் தொழிற்சார் ஒழுக்காற்றுக் குழு, கேட்புக் குழு அல்லது "உஊபபமு" க்காக அல்லது ஓர் ஊக்கு பதாத்தப் பயன்பாட்டிற்கெதிரான ஓழங்கமைப்புக்காகப் புலனாய்வொன்றை நடாத்துகின்ற ஆள் என்பவற்றுடன் அல்லது என்பவருடன் சார்த்தப்பட்ட இணங்கியொழுகாமை தொடர்பான தகவலின் நல்லெண்ணத்துடனான அறிக்கையிடுதலிலிருந்து வேறோராளை ஊக்கமிழக்கச் செய்கின்ற உட்கருத்துடன் அவ்வாளை அச்சுறுத்து கின்ற அல்லது பயமுறுத்துவதற்கு நாடுகின்ற ஏதேனும் செயல்,

(ii) சார்த்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை அல்லது "உஊபபமு "க்கான சட்டக் கோவை, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, சட்ட வலுவுறுத்தல், ஒழுங்குபடுத்தும் அல்லது உயர்தொழில்சார் ஒழுக்காற்றுக் குழு, கேட்புக் குழு அல்லது "உஊபபமு" க்காக அல்லது ஓர்

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்காப் புலனாய்வொன்றை நடாத்துகின்ற ஆள் என்பவற்றுடன் அல்லது என்பவருடன் சார்த்தப்பட்ட இணைங்கிகொழுகாமை தொடர்பான சான்றை அல்லது தகவலை நல்லெண்ணத்துடன் வழங்கியுள்ள ஆளொருவருக்கெதிரான பழிவாங்கல்.

(iii) (ஓ) (i) மற்றும் (ii) என்பவற்றறின் நோக்கங்களுக்காக, பழிவாங்குதல், அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தல் என்பன, செயலானது ஒன்றில் நல்லெண்ணத்துடனான அடிப்படையைக் கொண்டிராத காரணத்தினால் அல்லது விகிதாசாரப்படியற்ற பதிலிறுப்பாக இருப்பதனால் ஆளொருவருக்கெதிராக எடுக்கப்பட்ட செயலொன்றை உள்ளடக்கும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாடுபற்றிய எண்பிப்பு**

6. (1) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று ஏற்பட்டுள்ளதென்பதை நிலை நாட்டுவதற்கான பொறுப்பு இஊபபமு வைச் சார்ந்ததாதல் வேண்டும்.

(2) ஊக்கு பதார்த்தப் பயன்பாடுபற்றிய நியமமானது, செய்யப்படுகின்ற சார்த்துதலின் பாரதூரமானதன்மையை மனதிற்கொண்டு கேட்புக் குழாத்தின் வசதியான திருப்திக்கு இஊபபமு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நிலைநாட்டியுள்ளதா என்பதாதல் வேண்டும்.

(3) எல்லா விடயங்களிலும் இந்த எண்பிப்புக்கான நியமம், வெறுமனே நிகழ்தகவுச் சமநிலையைப்பார்க்கிலும் அதிகமாகவிருத்தல் வேண்டும். ஆனால் நியாயமான ஐயத்துக்கப்பாற்பட்ட எண்பிப்புக்குக் குறைவாகவிருத்தல் வேண்டும்.

(4) ஓர் ஊகத்தை மறுதலிப்பதற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளை அல்லது சூழ்நிலைகளை நிலைநாட்டுவதற்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட விளையாட்டு வீரரின்மேல் அல்லது வேறு ஆளின்மேல் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் எண்பிப்புக்கான பொறுப்பைச் சுமத்துமிடத்து, விதிகள் 9 மற்றும் 10 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, எண்பிப்புக்கான நியமம் நிகழ்தகவுச் சமநிலையின் மூலமானதாகவிருத்தல் வேண்டும்.

**நிகழ்வுகளையும் ஊகங்களையும் நிலைநாட்டுவதற்கான முறைகள்**

7. இஊபபமு ஆனது, விளையாட்டு வீரரின் ஒப்புக்கொள்ளுதல்கள், மூன்றாம் ஆளின் நம்பிக்கையான சாட்சியம், நம்பத்தகு ஆவணமுறையான சான்று, விதி 5 (ஆ) வுக்கான உதாரணத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு ஒன்றில் "A" அல்லது "B" மாதிரியிலிருந்து நம்பத்தகு பகுப்பாய்வுசார் தரவு அல்லது விளையாட்டு வீரரின் தொடர்ச்சியான இரத்த அல்லது சிறுநீர் மாதிரிகளின் தோற்றுருவத்திலிருந்து முடிபுகள் என்பவற்றின் அடிப்படையின்மீது, 5 (ஆ) என்னும் விதியின்கீழான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றை நிலைநாட்டலாம்.

8. உஊபபமு வினால் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட இயைபான ஆய்வுகூட விஞ்ஞான சமுதாயத்தினுள்ளான அல்லது இயைபான ஆய்வுகூடத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் உஊபபமு வினால் அங்கீகரிக்கப்பட்டதும் ஒப்பாரினது மீளாயிவின் விடயமாக இருந்துள்ளதுமான ஏதேனும் பகுப்பாய்வுசார் முறை அல்லது முடிபு வரையறை, விஞ்ஞானரீதியில் செல்லுபடியானதாக ஊகிக்கப்படுகின்றது. அத்தகைய ஊகத்துக்கான நிபந்தனைகள் எதிர்கொள்ளப்பட்டுள்ளனவாவென்பதைச் சவாலுக்குட்படுத்துவதற்கு அல்லது இந்த விஞ்ஞானரீதியிலான செல்லுபடியாந்தன்மை பற்றிய இந்த ஊகத்தை மறுதலிப்பதற்கு நாடுகின்ற எவரேனும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், அத்தகைய ஏதேனும் சவாலுக்கு முந்நிபந்தனையாக, சவால்பற்றியும் சவால் பற்றிய அடிப்படைபற்றியும் உஊபபமுவுக்கு முதலில் அறிவித்தல் வேண்டும். தொடக்கக் கேட்புக்குழு கேட்புக்கு, மேன்முறையீட்டுக்கு, அல்லது விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றம் (விநநீ), அதன் சொந்த முயற்சியின்மீது அத்தகைய ஏதேனும் சவால்பற்றி உஊபபமு வுக்கும் அறிவிக்கலாம். உஊபபமுவின் அறிவித்தலையும் அத்தகைய சவாலுடன் தொடர்புபட்ட உஊபபமு வழக்குக் கோப்பையும் பெற்ற தேதியிலிருந்து பத்து (10) நாட்களினுள், உஊபபமு ஆனது திறத்தவரொருவராக இடையீடுசெய்வதற்கு அல்லது அத்தயை வழக்குநடவடிக்கையில் வேறுவகையாகச் சான்று வழங்குவதற்கு உரிமை கொண்டித்தலும் வேண்டும். விநநீக்கு முன்னரான வழக்குளில் உஊபபமு வின் கோரிக்கையின்பேரில், குழாமானது சவாலை மதிப்பீடு செய்வதில் அதற்கு உதவுதற்குத் தோதான அறிவியல் நிபுணரொருவரை விநநீ குழாமானது நியமித்தல் வேண்டும்.

9. உஊபபமு- தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட ஆய்வுகூடங்களும், உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வேறு ஆய்வுகூடங்களும், ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க மாதிரிப் பகுப்பாய்வையும் காப்புப் பொறுப்புச்சார் நடவடிக்கைமுறைகளையும் நடாத்தியுள்ளனவென ஊகிக்கப்படுகின்றது. பாதமமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை நியாயமானமுறையில் விளைவித்திருக்கக்கூடிய ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச

நியமத்திலிருந்தான விலகுகையொன்று ஏற்பட்டதென்பதைக் காட்டுவதன்மூலம் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இந்த ஊகத்தை மறுதலிக்கலாம். பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை நியாயமான முறையில் விளைவித்திருக்கக் கூடிய ஆய்வு கூடங்களுக்கான சர்வதே நியமத்திலிருகந்தான விலகுகையொன்று ஏற்பட்டதென்பதை காட்டுவதன் மூலம் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் முற்போந்த ஊகத்தை மறுதலித்தால், அப்போது, அத்தகைய விலகுகை பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவிக்கவில்லையென்பதை நிலைநாட்டுவதற்கான பொறுப்பு உஊபமுவைச் சார்ந்ததாதல் வேண்டும்.

10. சட்டக்கோவையில் அல்லது இந்த ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில் தரப்பட்டுள்ள வேறேதேனும் சர்வதேச நியமத்திலிந்தான அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியிலிருந்தான அல்லது கொள்கையிலிருந்தான விலகுகைகள், ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய பகுப்பாய்வுசார் பெறுபேறுகளை அல்லது வேறு சான்றைச் செல்லுபடியற்றனவாக்குதலாகாது என்பதுடன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கு எதிர்வாதமொன்றாதலுமாகாது:

ஆயின், எவ்வாறாயினும், கீழே நிரற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சர்வதேச நியம ஏற்பாடுகளுள் ஒன்றிலிருந்தான விலகுகை, பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் அடிப்படையின்மீதான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை அல்லது எங்குள்ளாரென்பது பற்றிய தவறுதலொன்றை நியாயமானமுறையில் ஏற்படுத்தியிருக்கலாமென விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டினால், அப்போது, இஊபபமு ஆனது, அத்தகைய விலகுகை பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை அல்லது எங்குள்ளாரென்பதுபற்றிய தவறுதலை விளைவிக்கவில்லை என்பதனை நிலைநாட்டுவதற்கான பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) ஒரு பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் அடிப்படையின்மீது ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நியாயமானமுறையில் விளைவித்திருக்கக்கூடிய, மாதிரிச் சேகரிப்புடன் அல்லது மாதிரிக் கையாளுகையுடன் தொடர்புபட்ட பரீட்சிப்பு மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்று;

(ஆ) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நியாயமானமுறையில் விளைவித் திருக்கக்கூடிய, பாதகமான நடைமுறைக் கண்டறிகையுடன் தொடர்புபட்ட பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது பரீட்சிப்பு மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்று;

(இ) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் அடிப்படையின்மீது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நியாயமானமுறையில் விளைவித்திருக்கக்கூடிய B மாதிரித் தொடக்கத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரருக்கு அறிவித்தல் வழங்குவதற்கான தேவைப்பாட்டுடன் தொடர்புபட்ட பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்று;

(ஈ) எங்குள்ளாரென்பதுபற்றிய தவறுலின் அடிப்படையின்மீது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நியாயமானமுறையில் விளைவித்திருக்கக்கூடிய, விளையாட்டு வீரருக்கான அறிவித்தலுடன் தொடர்புபட்ட பெறுபேறகள் முகாமைக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்று.

11. முடிவுறாதிருக்கும் மேன்முறையீடொன்றின் விடயமாகவிராதவையும், ஒரு நீதிமன்றத்தின் அல்லது தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தைக்கொண்ட உயர்தொழிற்சார் ஒழுக்காற்று நியாயசபையின் முடிபொன்றினால் நிலைநாட்டப்பட்டவையுமான நிகழ்வுகள், அம்முடிவானது இயற்கை நீதிநெறிகளை மீறியதென விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டினாலொழிய, அந்நிதழ்வுகள்பற்றிய முடிபு எந்த விளையாட்டு வீரருக்கெதிராக அல்லது வேறு ஆளுக்கெதிராகச் செய்யப்பட்டதோ அவருக்கெதிரான மறுதலிக்கப்படற்பாலதல்லாத சான்றாதல் வேண்டும்.

12. ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியினது மீறுதையின்மீதான கேட்பிலான கேட்புக் குழாம், கேட்புக்குமுன்னர் நியாயமானவொரு காலத்தில் செய்யப்பட்ட கோரிக்கையின்பின்னர் (கேட்புக் குழாத்தினால் பணிக்கப்பட்டவாறு ஒன்றில் நேரடியாக அல்லது தொலைபேசிமூலம்) கேட்பில் தோன்றுவதற்கும் கேட்புக் குழாத்திலிருந்தான அல்லது இஊபபமு விடமிருந்தான கேள்விகளுக்கு மறுமொழியளிப்பதற்கும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் மறுப்பின் அடிப்படையின்மீது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளாரெனத் துணிவுரைக்கப்படுகின்ற விளையாட்டு வீரரருக்கு அல்லது வேறு ஆளுக்குப் பாதகமான ஊகமொன்றைச் செய்யலாம்.

**தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களும் தடைசெய்யப்பட்ட முறைகளும்**

*13. தடைசெய்யப்பட்ட நிரலில் அல்லது ஒரு மீளாய்வில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, தடைசெய்யப்பட்ட நிரல் மற்றும் மீளாய்வுகள், இஊபபமு வினால் ஏதேனும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்தாமல் உஊபபமு வினால் அத்தகைய நிரல் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று (3) மாதங்களுக்குப்பின்னர் இந்த ஊக்கு பதார்ததப் பயன்பாட்டுற்கெதிரான விதிகளின்கீழ் பயனுடையனவாக வருதல் வேண்டும் அதற்கான எல்லா மீளாய்வுகளினதும் தடைசெய்யப்பட்ட நிரலினதும் மிக்கநாளதுவரையான உரையுடன் தம்மைப் பரிச்சயப்படுத்திக்கொள்வது ஒவ்வொரு விளையாட்டு வீரரினதும் வேறு ஆள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாதல் வேண்டும்.*

*14. தடைசெய்யப்பட்ட நிரலானது போட்டியின்போதும் போட்டியில் இல்லாதபோதும் ஊக்கு பதார்த்தப் பயன்பாடாகத் தடைசெய்யப்படுகின்ற தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களையும் தடைசெய்யப்பட்ட முறைகளையும் அடையாளங் காணுதல் வேண்டும். உஊபபமு ஆனது குறிப்பிட்டவொரு விளையாட்டுக்காகத் தடைசெய்யப்பட்ட நிரலை விசாலிக்கலாம். தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களும் தடைசெய்யப்பட்ட முறைகளும் பொதுவான வகுதி மூலம் அல்லது ஒரு குறிப்பிட்ட பதார்த்தத்துக்கான அல்லது முறைக்கான குறிப்பான குறிப்பீடின் மூலம் தடைசெய்யப்பட்ட நிரலில் உள்ளடக்கப்படலாம்.*

*15. நாற்பத்திமூன்று முதல் 63 வரையிலான விதிகளை ஏற்புடயனவாக்கும் நோக்கங்களுக்காக, தடைசெய்யப்பட்ட பதார்த்தம் ஒவ்வொன்றும், தடைசெய்யப்பட்ட நிரலில் அடையாளங்காணப்பட்டவாறு தவிர, குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களாகக் கருதப்படுதல் வேண்டும். தடைசெய்யப்பட்ட முறையெதுவும், தடைசெய்யப்பட்ட நிரலில் குறித்துரைக்கப்பட்ட முறையொன்றாக அது குறிப்பானமுறையில் அடையாளங்காணப்பட்டாலொழிய, குறித்துரைக்கப்பட்ட முறையொன்றாக இருத்தலாகாது. அதே விதியின் நோக்கத்துக்காகத் துர்ப்பிரயோகப் பதார்த்தம் என்பது, தடைசெய்யப்பட்ட நிரலில் துர்ப்பிரயோகப் பதார்த்தங்கள் எனக் குறிப்பான முறையில் அடையாளங் காணப்படுகின்ற தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் உள்ளடக்குதல் வேண்டும்.*

*16. தடைசெய்யப்பட்ட நிரலில் உள்ளடக்கப்படும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களும், தடைசெய்யப்பட்ட முறைகளும், தடைசெய்யப்பட்ட நிரலில் பதார்த்தங்களை வகுதிகளாக வகுப்பாக்கஞ்செய்தல் மற்றும் எல்லா நேரங்களிலும் அல்லது போட்டியின்போது மட்டுமே தடைசெய்யப்பட்டதாக ஒரு பதார்த்தத்தை வகுப்பாக்கஞ்செய்தல், ஒரு பதார்த்தத்தை அல்லது முறையை ஒரு குறித்துரைக்கப்பட்ட பதார்த்தமாக, குறித்துரைக்கப்பட்ட முறையாக அல்லது துர்ப்பிரயோகப் பதார்த்தமாக வகுப்பாக்கஞ்செய்தல் பற்றி உஊபபமு வின் தீர்மானம் இறுதியானதாகவுள்ளதென்பதுடன் அப்பதார்த்தம் அல்லது முறை ஒரு மூடிமறைக்கின்ற பொருளாகவிருக்கவில்லை அல்லது செயல்நிறைவேற்றத்தை அதிகரிப்பதற்கான, ஓர் உடனல அபாயத்தைக் குறிப்பதற்கான அல்லது விளையாட்டின் பொது இயல்பை மீறுவதற்கான இயல்திறனைக் கொண்டிருக்கவில்லையென்ற விவாதத்தின் அடிப்படையின்மீதான ஏதேனும் சவாலை உள்ளடக்கி ஆனால் அதற்கு வரையறுக்கப்படாமல் ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் சவாலுக்கு அமைந்ததாக்கப்படுதலுமாகாது.*

**நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகள் ("நோபவி")**

*17. ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமை அல்லது ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாடு அல்லது எத்தனிக்கப்பட்ட பயன்பாடு உடைமை அல்லது ஊட்டுகை அல்லது எத்தனிக்கப்பட்ட ஊட்டுகை என்பன, நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க வழங்கப்பட்ட நோபவி இன் ஏற்பாடுகளுடன் ஒத்ததாகவிருப்பின், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாகக் கருதப்படுதலாகாது.*

*18.* **" நோபவி" விண்ணப்பச் செய்முறை பின்வருமாறாகவிருத்தல் வேண்டும்:-**

*(1) நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தின் விதிகள் 13 மற்றும் 16 ஏற்புடையனவாகுமிடத்து, சர்வதேசமட்ட விளையாட்டு வீரராகவிராத எவரேனும் விளையாட்டு வீரர் நோபவி ஒன்றுக்காக இயன்றளவு விரைவாக இஊபபமு வுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். இஊபபமு இணையத்தளத்தில் வெளிக்காட்டப்பட்டவாறு நோபவிலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தின் உறுப்புரை 6 றுக்கிணங்க விண்ணப்பமானது செய்யப்படுதல் வேண்டும்.*

*(2) நோபவி க்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கவனத்துட்கொள்வதற்கு (இதனகத்துப்பின்னர் "நோபவிகு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குழாமொன்றை (நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புக்குழு) இஊபபமு ஆனது தாபித்தல் வேண்டும்.*

(3) நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்காகச் சர்வதேசமட்டத்துக்கிணங்கப் பூரணமான விண்ணப்பமொன்று பெறப்பட்டதிலிருந்து இருபத்தொரு (21) நாட்களினுள் நோபவிகு ஆனது விண்ணப்பத்தை உடனடியாக மதிப்பீடுசெய்து அதுபற்றி முடிபுசெய்தல் வேண்டும். ஒரு நிகழ்ச்சிக்கு முன்னர் நியாயமான காலத்தினுள் விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, நோபவிகு, நிகழ்ச்சி ஆரம்பிக்கு முன்னர் அதன் முடிபை வழங்குவதற்கு அதன் மிகச்சிறந்த முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(4) நோபவிக்களின் முடிபு இஊபபமு வின் இறுதி முடிபாதல் வேண்டுமென்பதுடன் விதி 21 றுக்கிணங்க மேன்முறையீடு செய்யவும்படலாம். நோபவிகு முடிபு நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்காகச் சர்வதேச நியமத்துக்கிணங்க வியையாட்டு வீரருக்கும் உஊபபமு வுக்கும் வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் “ஊபபநிமுமு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிருவாக மற்றும் முகாமை முறைமைக்கும் அது அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

**எதிர்ச்செயலாற்ற நோபவி விண்ணப்பங்கள்**

19. ஒரு சர்வதேசமட்ட அல்லது ஒரு தேசியமட்ட விளையாட்டு வீரராகவிராத விளையாட்டு வீரரைப் பரீட்சிப்பதற்கு இஊபபமு விரும்பினால், அத்தகைய விளையாட்டு வீரர், அவர் அல்லது அவள் நோய்தீர்க்கும் காரணங்களுக்காகப் பயன்படுத்துகின்ற ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்துக்கான அல்லது தடைசெய்யப்பட்ட முறைக்கான எதிர்ச்செயலாற்ற நோபவி க்காக விண்ணப்பிப்பதற்கு அத்தகைய விளையாட்டு வீரருக்கு இஊபபமு அனுமதியளித்தல் வேண்டும்.

**நோபவி ஏற்றங்கீகாரம்**

20. இஊபபமு வினால் வழங்கப்பட்டவொரு நோபவி, ஏதேனும் நாட்டில் தேசியமட்டத்தில் செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன் வேறேதேனும் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் விதி முறைப்பட்ட ரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட வேண்டியதில்லை. எவ்வாறாயினும், பின்வருமாறு குறித்துரைக்கப்பட்ட நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமங்களுக்கிணங்க இயைபான சர்வதேசச் சம்மேளனத்தினால் அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினால் அது ஏற்றங்கீகரிக்கப்பட்டாலொழிய, விளையாட்டு வீரர் ஒரு சர்வதேசமட்ட விளையாட்டு வீரராக வந்தால் அல்லது ஒரு சர்வதேச நிகழ்ச்சியில் போட்டியிட்டால், அது செல்லுபடியாகாது:-

(அ) (i) கேள்விக்குட்படுத்தப்பட்ட பதார்த்தத்துக்காக அல்லது முறைக்காக இஊபபமு வினால் வழங்கப்பட்டவொரு நோபவியை விளையாட்டு வீரர் ஏலவே கொண்டிருக்குமிடத்து, அவரது அல்லது அவளது நோபவி சர்வதேசச் சம்மேளத்தினால் அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினால் தன்னியக்கமாவே ஏற்றங்கீகரிக்கப்படுவதாக இருந்தாலொழிய, அந்த நோவியை ஏற்றங்கீகரிக்கும்படி விளையாட்டு வீரர் அவரது அல்லது அவளது சர்வதேசச் சம்மேளனத்துக்கு அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அந்த நோபவி, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களை எதிர்கொண்டால், அப்பேது, சர்வதேசச் சம்மேளனம் அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, சர்வதேசமட்டப் போட்டிகளின் நோக்கங்களுக்காவும் அதனை ஏற்றங்கீகரித்தலும் வேண்டும்:

(ii) சர்வதேசச் சம்மேளனம் அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி அக்கட்டளைக்கற்களை எதிர்கொள்வதில்லையாதலால் அதனை ஏற்றங்கீகரிக்க மறுத்தால், சர்வதேசச் சம்மேளனம், சர்வதேசமட்ட விளையாட்டு வீரருக்கும் இஊபபமு வுக்கும், காரணங்களுடன் உடனடியாக அறிவித்தல் வேண்டும். சர்வதேசமட்ட விளையாட்டு வீரரும் இஊபபமு வும், பரிசீலனைக்காக அக்கருமத்தை உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு அத்தகைய அறிவித்தலிலிருந்து இருபத்தொரு (21) நாட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(iii) கருமமானது 21 ஆம் விதிக்கிணங்கப் பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப்படின், இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி, உஊபபமு வின் முடிபு செய்யப்படும் வரை தேசியமட்டப் போட்டிக்கான மற்றும் போட்டியில் இல்லாதபோதான பரீட்சிப்புக்குச் செல்லுபடியாகும் (ஆனால் சர்வதேசமட்டப் போட்டிக்காகச் செல்லுபடியானதல்ல):

(iv) இருபத்தியொரு (21) நாட் காலக்கெடுவினுள் கருமமானது பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத் தப்படாதிருப்பின், இஊபபமு ஆனது, அது வழங்கிய தொடக்க நோபவி ஆனது தேசியமட்டப் போட்டிக்கான மற்றும் போட்டியில் இல்லாதபோதான பரீட்சிப்புக்குச் செல்லுபடியானதாவென்பதைத் தீர்மானித்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய விளையாட்டு வீரர் சர்வதேசமட்ட விளையாட்டு வீரராக இல்லாதொழிந்து சர்வதேசமட்டப் போட்டியில் பங்குபற்றாதிருத்தல் வேண்டும்:

(v) இஊபபமு வின் முடிபு முடிவுறாதிருப்பின், நோபவி ஆனது தேசியமட்டப் போட்டிக்கான மற்றும் போட்டியில் இல்லாதபோதான பரீட்சிப்புக்குச் செல்லுபடியானதாக ஆனால் சாவதேசமட்டப் போட்டிக்குச் செல்லுபடியற்றதாக இருக்கும்:

(ஆ) (i) கேள்விக்குட்படுத்தப்பட்ட பதார்த்தத்துக்காக அல்லது முறைக்காக இஊபபமு வினால் வழங்கபபட்ட நோபவி ஒன்றை விளையாட்டு வீரர் ஏலவே உடையவராக இராதிருப்பின், விளையாட்டு வீரர் நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள செய்முறைக்கிணங்க ஒரு நோபவிக்காக நேரடியாக விண்ணப்பித்தல் வேணடும்:

(ii) சர்வதேசச் சம்மேளனம் விளையாட்டு வீரரின் விண்ணப்பத்தை மறுத்தால், அது விளையாட்டு வீரருக்குக் காரணங்களுடன் அறிவித்தல் வேண்டும்:

(iii) சர்வதேசச் சம்மேளனம் விளையாட்டு வீரரின் விண்ணப்பத்தை வழங்கினால், அது விளையாட்டு வீரருக்கும் இஊபபமு வுக்கும் அறிவித்தல் வேண்டும்:

(iv) சர்தேசச் சமமேளனத்தினால் வழங்கப்பட்ட நோபவி, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தாப்பட்டுள்ள கட்டளைக்கற்களை எதிர்கொள்வதில்லையென இஊபபமு கருதினால், அக்கருமத்தைப் பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு அதற்கு இருபத்தொரு (21) நாட்கள் உண்டு:

(v) இஊபபமு, பரிசீலனைக்காக அக்கருமத்தை உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தினால், சர்வதேசச் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட நோபவி, உஊபபமு வின் முடிபு செய்யப்படும்வரை சர்வதேசமட்டப் போட்டிக்கான மற்றும் போட்டியில் இல்லாதபோதான பரீட்சிப்புக்காகச் செல்லுபடியாகவிருக்கும் (ஆனால் தேசியமட்டப் போட்டிக்காகச் செல்லுபடியாகாது):

(vi) இஊபபமு அக்கருமத்தைப் பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு ஆற்றுப்பபடுத்தாவிடின், சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட நோபவி, இருபத்தொரு (21) நாட் பரிசீலனைக் காலக்கெடு முடிவுறும் போது தேசியமட்டப் போட்டிக்காகவும் செல்லுபடியானதாக வரும்.

**ஒரு நோபவியின் முடிவுறுத்துகை, இல்லாதாக்குகை, மீளப்பெறுகை அல்லது எதிர்மாறாக்குகை**

21\. (1) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட நோபவி ஒன்று:

(அ) ஏதேனும் மேலதிக அறிவிப்புக்கான அல்லது வேறு விதிமுறைக்கான தேவையின்றி, அது எந்தக் காலத்துக்காக வழங்கப்பட்டதோ அந்தக் காலத்தின் முடிவில் தானாகவே முடிவுறுதல் வேண்டும்:

(ஆ) நோபவியின் விலங்குகையின்மேல் நோபவிகுழுவினால் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் அல்லது நிபந்தனையுடன் விளையாட்டு வீரர் உடனடியாக இணங்கியொழுகாவிடின் அது இல்லாதாக்கப்படலாம்:

(இ) நோபவி ஒன்றை வழங்குவதற்கான கட்டளைக்கற்கள் உண்மையில் எதிர்கொள்ளப்படவில்லையென அடுத்துப்பின்னர் தீர்மானிக்கப்படின், நோபவி குழுவினால் மீளப்பெறப்படலாம் : அல்லது

(ஈ) உஊபபமு வினாலான பரிசீலனையின்மீது அல்லது மேன்முறையீட்டின்மீது எதிர்மாறாக்கப்படலாம்.

(2) அத்தகைய பட்சத்தில், விளையாட்டு வீரர், நோபவி யின் முடிவுறுத்துகை, இல்லாதாக்குகை, மீளப்பெறுகை அல்லது எதிர்மாறாக்குகையின் பயனுள்ள தேதிக்கு முன்னர் நோபவி க்கிணங்கக் கேள்விக்குட்படுத்தப்பட்ட தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை அவர் பயன்படுத்துவதன் அல்லது உடைமையில் வைத்திருப்பதன் அல்லது ஊட்டுவதன் அடிப்படையின் மீதான எவையேனும். விளைவுகளுக்கமைந்தவராதலாகாது. நோபவியின் முடிவுறுகை, மீளப்றெுகை அல்லது எதிர்மாறாக்குகையின் பினனர் அடுத்து அறிக்கையிடப்பட்ட ஒரு பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் பெறுபேறுகள் முகாமையின் சர்வதேச நியமத்தின் உறுப்புரை 5.1.1.1 என்பதனைப் பின்பற்றிச் செய்யப்பட்ட பரிசீலனை, அத்தகைய கண்டறிகை அத்தேதிக்கு முன்னர் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாட்டுடன் ஒத்ததாகவுள்ளதாவென்பதனைக் கவவனத்துட்கொள்ளுதலை உள்ளடக்குதல் வேண்டும். அப்பட்சத்தில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகையெதுவும் துணிவுரைக்கப்படுதலாகாது.

**நோபவி முடிபுகளின் பரிசீலனைகளும் மேன்முறையீடுகளும்**

22. (1) நோபவிக்கான விண்ணப்பமொன்றை இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாடிற்கெதிரான முகவராண்மை மறுத்தால், விளையட்டு வீரர் 70 (3) ஆம் விதியின் நியதிகளின்படி இஊபபமு, மேன்முறையீட்டு செய்யலாம்.

(2) உஊபபமு ஆனது, விளையாட்டு வீரரினால் அல்லது இஊபபமு வினால் உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப் படுகின்றதும் இஊபபமு வினால் வழங்கப்பட்டதுமான நோபவி ஒன்றை ஏற்றங்கீகரிக்காதிருப்பதற்குச் சர்வதேசச் சம்மேளமொன்றினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபைப் பரிசீலனை செய்தல் வேண்டும். இஊபபமு வினால் உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தடுகின்ற நோபவி ஒன்றை வழங்குவதற்குச் சர்வதேசச் சம்மேளனமொன்றினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை உஊபபமு பரிசீலனைசெய்தல் வேண்டும். உஊபபமு ஆனது, பாதிக்கப்பட்டோரின் கோரிக்கையின்மேல் அல்லது அதன் சொந்த முயற்சியின்மீது, வேறெவையேனும் நோபவி முடிபுகளை எந்நேரத்திலும் பரிசீனைசெய்யலாம். பரிசீலனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற நோபவி முடிபு, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விளக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களை எதிர்கொள்ளுமாயின், உஊபபமு அதனோடு தலையிடுவதில்லை. நோபவி முடிபு அக்கட்டளைக் கற்களை எதிர்கொள்ளாதிருப்பின், உஊபபமு அதனை எதிர்மாறாக்குதல் வேண்டும்.

(3) உஊபபமு வினால் பரிசீலனை செய்யப்படாததும், அல்லது உஊபபமு வினால் பரிசீலனைசெய்யப்பட்டு ஆனால் பரிசீலனையின் மேல் எதிர்மாறாக்கப்படாததுமான விண்ணப்பத்தைச் சாவதேசச் சம்மேளனத்தின் சார்பில் கவனத்துட்கொள்வதற்கு அது உடன்பட்டுக்கொண்டுள்ள ஒரு சர்வதேசச் சம்மேளனத்தினால் அல்லது இஊபபமு வினால் செய்யப்பட்ட ஏதேனும் நோபவி முடிபுக்கெதிராக, 69 முதல் 79 வரையிலான விதிகளுக்ககிணங்க, புறநீங்கலாக விநநீ க்கு விளையாட்டு வீரரினால் அல்லது இஊபபமு வினால் மேன்முறையீடுசெய்யப்படலாம்.

(4) பாதிக்கப்பட்ட விளையாட்டு வீரர், இஊபபமு அல்லது சர்வதேசச் சம்மேளனம், ஒரு நோபவி முடிபை எதிர்மாறாக்குவதற்கு உஊபபமு வினால் செய்யப்பட்ட முடிபுக்கெதிராக விநநீ க்கு மேன்முறையீடு செய்யலாம்.

(5) ஒரு நோபவி க்கு ஏற்றங்கீகாரம் வழங்குவதற்காக அல்லது நோபவி முடிபைப் பரிசீலனை செய்வதற்காக முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின்மீது நியாயமான காலத்தினுள் நடவடிக்கையெடுப்பதற்குக் தவறுதல் பரிசீலனைக்கான/ மேன்முறையீட்டுக்கான ஏற்புடையற்பாலனவான உரிமைகளை விளைவிக்கின்ற விண்ணபத்தின் மறுப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

**பரீட்சித்தலும் புலனாய்வுகளும்**

23. (1) பரீட்சித்தலும் புலனாய்வுகளும் ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கங்களுக்காக மட்டுமே பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். பரீட்சித்தலும் புலனாய்வுகளும் பரீட்சித்தலுக்கும் புலனாய்புகளுக்குமான சர்வதேச நியமத்தின் ஏற்பாடுகளுக்கும் அந்தச் சர்வதேச நியமத்தைக் குறைநிரப்புகின்ற இஊபபமு வின் குறிப்பிட்ட வரைவாவணங்களுக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) விளையாட்டு வீரர் விதி 5(அ) அல்லது விதி 5(ஆ) என்பதை மீறியுள்ளாராவென்பது பற்றிப் பகுப்பாய்வுசார் சான்றைப் பெற்றுக்கொள்வதற்குப் பரீட்சித்தல் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

(3) விதிகள் 23 (7) மற்றும் (8) இலுள்ள நிகழ்ச்சிப் பரீட்சித்தலுக்கான வரையறைகளுக்கமைய, 2 ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் எல்லோரினதும் மீது இஊபபமு போட்டியின்போதான மற்றும் போட்டியில் இல்லாதபோதான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இஊபபமு ஆனது, தகவின்மைக் காலப்பகுதிக்கு உட்படுகின்ற எவரேனும் விளையாட்டு வீரர் உட்பட எந்த விளையாட்டு வீரர் மீது அது பரீட்சித்தல் அதிகாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த எவரேனும் விளையாட்டு வீரரை ஏதேனும் நேரத்திலும் ஏதேனும் இடத்திலும் மாதிரியொன்றை வழங்கும்படி தேவைப்படுத்தலாம்.

(5) சட்டக்கோவையின் உறுப்புரை 20.7.10 என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறாக உஊபபமு போட்டியின்போதான மற்றும் போட்டியில் இல்லாதபோதான பரீட்சித்தல் அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) சர்வதேசச் சம்மேளனமொன்று அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பொன்று பரீட்சித்தலின் ஏதேனும் பாகத்தை நேரடியாக அல்லது ஒரு தேசியச் சம்மேளனத்தினூடாக இஊபபமு வுக்குக் கையளித்தால் அல்லது ஒப்பந்தஞ்செய்தால், இஊபபமு ஆனது மேலதிக மாதிரிகளைச் சேகரிக்கலாம் அல்லது இஊபபமு வின் செலவில் மேலதிக வகையினவான பகுப்பாய்வுகளைப் புரியும்படி ஆய்வுகூடத்தைப் பணிக்கலாம். மேலதிக மாதிரிகள் சேகரிக்கப்பட்டால் அல்லது மேலதிக வகையினவான பகுப்பாய்வுகள் புரியப்பட்டால், சர்வதேசச் சம்மேளனத்துக்கு அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கப்புக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஒரு நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் பரீட்சித்தலை நடாத்துவதற்குத் தனியொரு ஒழுங்கமைப்பு மட்டுமே பொறுப்பாதல் வேண்டும். இலங்கையில் நடைபெறும் சர்வதேச நிகழ்ச்சிகளில், ஆளும் குழுவாகவுள்ள சர்வதேச ஒழுங்கமைப்பு பரீட்சித்தலை நடாத்துவதற்கு அதிகாரமுடையதாதல் வேண்டும். இலங்கையில் நடைபெறும் தேசிய நிகழ்ச்சிகளில் இஊபபமு பரீட்சித்தலை நடாத்துவதற்கான அதிகாரியாக இருத்தல் வேண்டும். இஊபபமு வின் அல்லது ஒரு நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவின் கோரிக்கையின் பேரில், நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்கு வெளியே நடாத்தப்பட்ட ஏதேனும் பரீட்சித்தல் ஊபபமு வுடன் அல்லது நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவுடன் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

(8) வேறுவகையில் பரீசித்தல் அதிகாரத்தைக் கொண்டிருக்கக்கூடிய ஆனால் ஒரு நிகழ்ச்சியில் பரீட்சித்தலைத் தொடக்கிவைத்து பணிப்பதற்குப் பொறுப்பாகவிராத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பொன்று, நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் விளையாட்டு வீரர்களின் பரீட்சித்தலை நடாத்துவதற்கு விரும்பினால், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, அத்தகைய பரீட்சித்தலை நடாத்தி ஒருங்கிணைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவுடன் முதலில் கலந்துரையாடுதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவின் பதிலுடன் திருப்தியடையாதிருப்பின், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் விவரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகளுக்கிணங்க, அத்தகைய பரீட்சித்தலை நடாத்துவதற்கும் அத்தகைய பரீட்சித்தலை எவ்வாறு ஒழுங்கிணைப்பதென்பதைத் தீர்மானிப்பதற்குமான அனுமதியை உஊபபமு விடமிருந்து கோரலாம். உஊபபது ஆனது, நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவுடன் கலந்தாலோசித்து அதற்கு அறிவிப்பதற்குமுன்னர் அத்தகைய பரீட்சித்தலுக்கான அங்கீகாரத்தை வழங்குதலாகாது. உஊபபமு வின் முடிபு இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டுக்கு அமைந்ததாதலுமாகாது. பரீட்சித்தலை நடாத்துவதற்கான அதிகாரவளிப்பில் வேறுவகையான ஏற்பாடு செய்யப்பட்டாலெழிய, அத்தகைய பரீட்சிப்புகள், போட்டியில் இல்லாதபோதான பரீட்சிப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் பரீட்டசிப்புக்கான பெறுபேறுகள் முகாமை, நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவின் விதிகளில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, பரீட்சித்தலைத் தொடக்கிவைத்தின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பொறுப்பாதல் வேண்டும்.

**பரீட்சித்தல் தேவைப்பாடுகள்**

24. (1) இஊபபமு ஆனது, பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பரீட்சிப்புப் பகிர்வுத் திட்டமொன்றையும் பரீட்சித்தலையும் நடாத்துதல் வேண்டும்.

(2) நியாயமானமுறையில் சாத்தியமானவிடத்து, பரீட்சித்தலானது, இணைந்த பரீட்சித்தல் முயற்சியின் பயனுறுதன்மையை உச்சப்படுத்துவதற்கும் அவசியமற்ற மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற பரீட்சித்தலைத் தவிர்ப்பதற்குமென, ஊபபநிமுமு வின் ஊடாக ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

**விளையாட்டு வீரர் எங்குள்ளாரென்பது பற்றிய தகவல்**

*25. (1) பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திற் குறித்துரைக்கப்பட்ட முறையில் எங்குள்ளாரென்பதுபற்றிய தகவலை வழங்குவதற்குத் தேவைப்படுக்கப்பட்டவர்களும் விதி 45 (ஆ) வில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு விதி 5(ஈ) இன் மீறுகைகளுக்கான விளைவுகளுக்கு அமைந்தவர்களாக இருக்கவேண்டியவர்களுமான விளையாட்டு வீரர்களின் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவொன்றை இஊபபமு தாபித்தல் வேண்டும். அத்தகைய விளையாட்டு வீரர்களை அடையாளங்காண்பதற்கும் அவர்கள் எங்குள்ளார்களென்பதுபற்றிய தகவலைச் சேகரிப்பதற்கும் இஊபபமு சர்வதேசச் சம்மேளனங்களுடன் ஒருங்கிணைதல் வேண்டும்.*

*(2) இஊபபமு ஆனது, ஊபபநிமுமு இனூடாக அதன் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் பெயரினால் உள்ளடக்கப்பட்ட விளையாட்டு வீரர்களை அடையாளங்காண்கின்ற நிரலொன்றைக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும். இஊபபமு ஆனது, அதன் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் விளையாட்டு வீரர்களை உள்ளடக்குவதற்கான அதன் கட்டளைக்கற்களை அவசியமானவாறு பரீசீலனை செய்தலும் நாளதுவரையாக்குதலும் வேண்டுமென்பதுடன் நிரற்படுத்தப்பட்ட விளையாட்டு வீரர்கள் இயைபான கட்டளைக்கற்களைத் தொடர்ந்தும் எதிர்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு அதன் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் நிரலைக் காலாகாலம், காலாண்டுக்கு ஒருதடவைக்குக் குறையாமல் மீளாய்வுசெய்தலும் வேண்டும். விளையாட்டு வீரர்கள் ஒரு பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் உள்ளடக்கப்படுமுன்னரும் அவர்கள் அக்குழுவிலிருந்து அகற்றப்படும்போதும் அவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். அறிவித்தலானது பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(3) விளையாட்டு வீரரொருவர் ஒரு சர்வதேசப் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் அவர்களின் சர்வதேசச் சம்மேளனத்தினாலும் ஒரு தேசிய பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவினால் இஊபபமு வினாலும் உள்ளடக்கப்படுமிடத்து, இஊபபமு வும் சர்வதேசச் சம்மேளனமும், அவர்களுள் எவர் அந்த விளையாட்டு வீரர் எங்குள்ளார் என்பதுபற்றிய கோப்பிடுதல்களை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பது தொடர்பில் அவர்களுக்கிடையே உடன்படுதல் வேண்டும்: எவ்விடயத்திலும் விளையாட்டு வீரரொருவர் அவர்களுள் ஒருவருக்கு மேற்பட்டோருக்கு எங்குள்ளாரென்பதுபற்றிய கோப்பிடுதல்களைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.*

*(4) பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்துக்கிணங்க, பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவிலுள்ள ஒவ்வொரு விளையாட்டு வீரரும்:-*

*(அ) அவர்/அவள் எங்குள்ளாரென்பதைக் காலாண்டு அடிப்படையில் இஊபபமு வுக்கு அறிவித்தல் வேண்டும்.*

*(ஆ) அத்தகவல் எல்லா நேரங்களிலும் செம்மையாகவும் பூரணமாகவும் இருக்கும் வகையில் அதனை நாளது வரையாக்குதல் வேண்டும்: அத்துடன்*

*(இ) அவருள்ள அத்தகைய இடங்களில் பரீட்சித்தலுக்காக அவரை அல்லது அவளைக் கிடைக்கக்கூடியவராக்குதல் வேண்டும்.*

*(5) விதி 5(ஈ) இன் நோக்கங்களுக்காக, பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு விளையாட்டு வீரரொருவர் தவறுகின்றமையானது, பின்னிணைப்பு ஆ வில் எடுத்துக்கூறப்பட்ட நிபந்தனைகள் எதிர்கொள்ளப்படுகின்றவிடத்து, பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் பின்னிணைப்பு ஆ வில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஒரு கோப்பிடுதல் தவறுதலாக அல்லது தவறப்பட்ட பரீட்சிப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(6) இஊபபமு வின் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவிலுள்ள விளையாட்டு வீரரொருவர்-*

*(அ) விளையாட்டு வீரர் அவர் அல்லது அவள் ஓய்வுபெற்றுள்ளாரென இஊபபமு வுக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தாலொழியவும்: அல்லது*

*(ஆ) இஊபபமு வின் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் உள்ளடக்கப்படுவதற்கான கட்டளைக்கற்களை அவர் அல்லது அவள் மேற்கொண்டு திருப்திப்படுத்தவில்லையென இஊபபமு அவருக்கு அல்லது அவளுக்கு அறிவித்திருந்தாலொழியவும் அறிவிக்கும் வரையும்,*

பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள எங்குள்ளாரென்பது பற்றிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கடப்பாட்டுக்குத் தொடர்ந்தும் அமைந்தவராகவிருத்தல் வேண்டும்.

(7) பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் இருக்கையில் ஒரு விளையாட்டு வீரரினால் வழங்கப்பட்ட எங்குள்ளாரென்பது பற்றிய தகவல், விதி 22(3)-(6) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஊபபநிமுமு வினூடாக உஊபபமு வுக்கும் அவ்விளையாட்டு வீரரைப் பரீட்சிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ள கோண்டுள்ள வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கும் அணுகத்தக்கதாகவிருக்கும். எங்குள்ளாரென்பதுபற்றிய தகவல் எல்லா நேரங்களிலும் கண்டிப்பாக அந்தரங்கமானதாகப் பேணப்படுதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டைத் திட்டமிடும், ஒருங்கிணைக்கும் அல்லது நடாத்தும் நோக்கங்களுக்காக, விளையாட்டு வீரர் உயிரியற்சார் நடைமுறைக்கு அல்லது வேறு பகுப்பாய்வுசார் பெறுபேறுகளுக்கு இயைபான தகவலை வழங்குவகற்கு, இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய புலனாய்வொன்றை ஆதாரப்படுத்துவதற்கு, அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைச் சார்த்துகின்ற வழக்குநடவடிக்கைகளை ஆதாரப்படுத்துவதற்கு அது புறநீங்கலாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்: அத்துடன் அந்தரங்கத்தன்மை மற்றும் தனிப்பட்ட தகவலைப் பாதுகாத்தலுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க இந்நோக்கங்களுக்காக இது இனிமேலும் இயைபாகவிராத பின்னர் அழிக்கப்படுதலும் வேண்டும்.

(8) பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க, இஊபபமு ஒரு பரீட்சித்தற் குழுவைத் தாபித்தல் வேண்டும்: இது, இஊபபமு வின் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவில் உள்ளடக்கப்பட்ட விளையாட்டு வீரர்களைவிட எங்குள்ளாரென்பது பற்றிய கடுமை குறைந்த தேவைப்பாடுகளுக்கமைந்த விளையாட்டு வீரர்களை உள்ளடக்கும்.

(9)விளையாட்டுவீரர்கள் பரீட்சித்தற் குழுவில் உள்ளடக்கப்படுமுன்னரும் பரீட்சித்தற் குழுவிலிருந்து அகற்றப்படும்போதும் இஊபபமு அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும். 2001 ஆம் ஆண்டின் இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் விதி 25 இல் குறிக்துரைக்கப்பட்டவாறு அத்தகைய அறிவித்தல் எங்குள்ளாரென்பது பற்றிய தேவைப்பாடுகளையும் இணங்கியொழுகாமையின் விடயத்தில் ஏற்புடையனவாகும் விளைவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(10)பரீட்சித்தற் குழுவில் உள்ளடக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள், அவர்களைக் கண்டுபிடிக்கு பரீட்சித்தலுக்கு உட்படுத்தக் கூடியவகையில் எங்குள்ளனரென்பதுபற்றிய பின்வரும் தகவலை வழங்குதல் வேண்டும்:-

(அ) ஓர் இரவு நேர முகவரி
(ஆ) போட்டி/நிகழ்ச்சி அட்டவணை: அத்துடன்
(இ) கிரமமான பயிற்சிச் செயற்பாடுகள்.

(11) இஊபபமு வினால் தேவைப்படுத்தப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் எங்குள்ளாரென்பதுபற்றிய தகவலை விளையாட்டு வீரரொருவர் வழங்கத்தவறுகின்றமை அல்லது எங்குள்ளாரென்பதுபற்றிய செம்மையான தகவலை விளையாட்டு வீரர் வழங்கத் தவறுகின்றமை, அவ்விளையாட்டு வீரரை இஊபபமு வின் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவுக்கு ஏற்றுவகனை விளைவித்தல் வேண்டும்.

(12) இஊபபமு ஆனது, பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க, பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவொன்றினுள் அடக்கப்படாத விளையாட்டு வீரர்களிடமிருந்து எங்குள்ளனரென்பன்பதுபற்றிய தகவலைச் சேகரிக்கலாம். அது அவ்வாறு செய்யவிரும்பின், இஊபபமு வினால் தேவைப்படுத்தப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கோரப்பட்ட எங்குள்ளாரென்பதுபற்றிய தகவலை விளையாட்டு வீரர் வழங்கத்தவறுகின்றமை அல்லது எங்குள்ளாரென்பதுபற்றிய செம்மையான தகவலை விளையாட்டு வீரர் வழங்கத் தவறுகின்றமை, அவ்விளையாட்டு வீரரை இஊபபமு வின் பதிவு செய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவுக்கு ஏற்றுவதனை விளைவித்தல் வேண்டும்.

**போட்டிக்குத் திரும்பிவரும் ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்கள்**

26. (1) இஊபபமு வின் பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழுவிலுள்ள சர்வதேசமட்ட விளையாட்டு வீரர் அல்லது தேசியமட்ட விளையாட்டு வீரர் ஓய்வுபெற்ற பின்னர், விளையாட்டில் முனைப்பாகப் பங்குபற்றுவதற்காகத் திரும்பிவருவதற்கு உட்கருதினால், அவர்களின் சர்வதேச சம்மேளனத்துக்கும் இஊபபமு வுக்கும் ஆறுமாத எழுத்திலான முன்னறிவித்தலைக் கொடுப்பதன்மூலம் விளையாட்டு வீரர் பரீட்சித்தலுக்காக அவரை அல்லது அவளைக் கிடைக்கக்கூடியவராக்கும்வரை அத்தகைய விளையாட்டு வீரர் சர்வதேச நிகழ்ச்சிகளிலோ அல்லது தேசிய நிகழ்ச்சிகளிலோ போட்டியிடுதலாகாது.

*(2) உஊபபமு ஆனது, இஊபபமு வினதும் விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்தினதும் கலந்தாலோசனையுடன், ஆறுமாத எழுத்திலான அறிவித்தல் விதியின் கண்டிப்பான பிரயோகம் விளையாட்டு வீரருக்கு நியாயமற்றதாகவிருக்குமிடத்து அவ்விதிக்கான விலக்களிப்பொன்றை வழங்கலாம். விதி 69 முதல் விதி 83 வரையானவற்றின் கீழ் இம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம்.*

*(3) விதி 26 (1) றை மீறிப் பெற்றுக்கொள்ளப்பட்ட எவையேனும் போட்டிப் பெறுபேறுகள், இது ஒரு சர்வதேச நிகழ்ச்சியாக அல்லது ஒரு தேசிய நிகழ்ச்சியாக இருந்ததென விளையாட்டு வீரர் நியாயமானமுறையில் அறிந்திருக்கமுடியாதென அவர் அல்லது அவள் நிலைநாட்ட முடியுமாகவிருந்தாலொழிய, தகைமையற்றனவாக்கப்படுதல் வேண்டும்.*

*(4) விளையாட்டு வீரரொருவர் தகவின்மைக் காலப்பகுதிக்கு உட்பட்டவராக இருக்கையில் விளையாட்டுத் துறையிலிருந்து ஓய்வுபெற்றால், அவ்விளையாட்டு வீரர், தகவின்மைக் காலப்பகுதியை விதித்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு அத்தகைய ஓய்வுபெறுகைபற்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அவ்விளையாட்டு வீரர் பின்னர் விளையாட்டுத்துறையில் முனைப்பான போட்டிக்கு மீண்டும் திரும்பிவருவதற்கு விரும்பினால், இஊபபமு வுக்கும் அவரது சர்வதேசச் சம்மேளனத்துக்கும் ஆறுமாத முன்னறிவித்தலை (அல்லது அவ்வீரர் ஓய்வுபெற்ற தேதியன்றுள்ளவாறு எஞ்சியுள்ள தகவின்மைக்காலப்பகுதிக்குச்சமமான அறிவித்தலைக்)கொடுத்து,அக்காலப்பகுதிஆறு(6)மாதங்களுக்குமேற்பட்டதாகவிருப்பின், மற்றும் பரீட்சித்தலுக்கு அவர் அல்லது அவள் தன்னைத் கிடைக்கக்கூடியவராக்கும்வரை, அவ்விளையாட்டு வீரர் சர்வதேச நிகழ்ச்சிகளில் அல்லது தேசிய நிகழ்ச்சிகளில் போட்டியிடுதலாகாது.*

***சுயேச்சையான அவதானிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம்***

*27. இஊபபமு வும் இலங்கையில் தேசிய நிகழ்ச்சகளுக்கான எவையேனும் ஒழுங்குபடுத்தும் குழுக்களும், அத்தகைய நிகழ்ச்சியில் சுயேச்சையான அவதானிப்பாளர் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அதிகாரமளித்தலும் அதனை வசதிப்படுத்துதலும் வேண்டும்.*

***மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்தல்***

*28. (1) பின்வரும் நெறிகளுக்கிணங்க மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும்:-*

*(அ) விதி 5 இன்கீழ் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை நேரடியாக நிலைநாட்டும் நோக்கங்களுக்காக, மாதிரிகளானவை, உஊபபமு வினால் தராதர அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடங்களில் அல்லது உஊபபமு வினால் வேறுவகையாக அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடங்களில் மட்டுமே பகுப்பாய்வுசெய்யப்படுதல் வேண்டும். மாதிரிப் பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட உஊபபமு வின் தராதர அங்கீகாரம்பெற்ற அல்லது உஊபபமு வின் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடத்தின் தெரிவு, இஊபபமு வினால் புறநீங்கலாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

*(ஆ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் தொடர்பான நிகழ்வுகள் எவையேனும் நம்பத்தகு வழிவகைகள் மூலம் நிலைநாட்டப்படலாம். இது, உதாரணமாக, உஊபபமு தராதர அங்கீகாரம்பெற்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடங்களுக்கு வெளியே நடாத்தப்பட்ட நம்பத்தகு ஆய்வுகூட அல்லது வேறு சட்ட-மருத்துவப் பரீட்சித்தலை உள்ளடக்கும்.*

*(2) சட்டக்கோவையின் உறுப்புரை 4.5 இல் விவரிக்கப்பட்ட கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றி உஊபபமு வினால் பணிக்கப்படக்கூடியவாறாகத் தடைசெய்யப்பட்ட நிரலில் அடையாளங்காணப்பட்ட தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களையும் தடைசெய்யப்பட்ட முயைகளையும் வேறு பதார்த்தங்களையும் கண்டுபிடிப்பதற்கு அல்லது மரபணுப் பரிசோதனை அல்லது மரபுவகை புறவுருவமைத்தல் உட்பட, ஒரு விளையாட்டு வீரரின் சிறுநீர், இரத்தம் அல்லது வேறு இழைமக்கலன்களில் உள்ள இயைபான அளபுருக்களைப் புறவுருவமைப்பதில் உதவுவதற்கு அல்லது வேறேதேனும் சட்டமுறையான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கத்துக்காக மாதிரிகள் மற்றும் தொடர்புபட்ட பகுப்பாய்வுசார் தரவு அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுத் தகவல் பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும்.*

*(3) விளையாட்டு வீரரின் எழுத்திலான சம்மதமின்றி மாதிரியெதுவும் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்படமுடியாத போதிலும், மாதிரிகள், தொடர்புபட்ட பகுப்பாய்சார் தரவு மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுத் தகவல் என்பன, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஆராய்ச்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். ஆராய்ச்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மாதிரிகளும், தொடர்புபட்ட பகுப்பாய்வுசார் தரவுகளும் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுத் தகவலும், மாதிரிகளும், தொடர்புபட்ட பகுப்பாய்சார் தரவும் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுத் தகவலும் குறிப்பிட்டவொரு விளையாட்டு வீரருடன் தொடர்புபடுத்தப்படுவதனைத் தடுக்கும்வகையிலான*

அத்தகையவொரு முறையில் முதலில் செய்முறைப்படுத்தப்படுதல் வேண்டும். மாதிரிகள், தொடர்புபட்ட பகுப்பாய்வுசார் தரவு அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுத் தகவல் என்பனவற்றை உட்படுத்துகின்ற ஏதேனும் ஆராய்ச்சி, சட்டக்கோவையின் உறுப்புரை 19 இல் தரப்பட்டுள்ள நெறிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(4) ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்துக்கு இசைந்தொழுக, சட்டக்கோவையின் 6.4 ஆம் உறுப்புரைக்கும், பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் 4.7 ஆம் உறுப்புரைக்கும் இசைந்தொழுக மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும்படி இஊபபமு ஆனது ஆய்வுகூடங்களைக் கோருதல் வேண்டும்.

(5) ஆய்வுகூடங்கள் அவற்றின் சொந்தச் செலவிலும் முயற்சியிலும், நியம மாதிரிப் பகுப்பாய்வு விடயப்பட்டியலில் உள்ளடக்கப்படாத அல்லது இஊபபமு வினால் கோரப்பட்டவாறு, தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் அல்லது தடைசெய்யப்பட்ட முறைகளுக்காக மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யலாம். அத்தகைய ஏதேனும் பகுப்பாய்விலிருந்தான பெறுபேறுகள் இஊபபமு வுக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறேதேனும் பகுப்பாய்வுசார் பெறுபேறைப்போன்று அதே செல்லுபடியாந்தன்மையையும் விளைவுகளையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) மாதிரியானது விதி 5 இன் கீழான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக் குற்றச்சாட்டுக்கான அடிப்படையொன்றாகவுள்ளதென விளையாட்டு வீரருக்கு இஊபபமு அறிவிக்கும் நேரத்துக்கு முன்னர் ஒரு மாதிரியின் மீது மீண்டும் மீண்டுமான அல்லது மேலதிகப் பகுப்பாய்வை நடாத்துவதற்கு ஓர் ஆய்வுகூடத்தின் அதிகாரத்தின்மீது வரையறை எதுவுமிருத்தலாகாது. அத்தகைய அறிவித்தலுக்குப்பின்னர் இஊபபமு அம்மாதிரியின்மீது மேலதிகப் பகுப்பாய்வை நடாத்துவதற்கு உட்கருதினால், அது, விளையாட்டு வீரரின் அல்லது ஒரு போட்டிக் குழுவிலிருந்தான அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்யலாம்.

(7) மாதிரியொன்று எதிர்மாறானதென ஆய்வுகூடமொன்று அறிக்கையிட்டவிடத்து, அல்லது மாதிரியானது ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக் குற்றச்சாட்டை வேறுவகையில் விளைவிக்காதவிடத்து, அது, ஒன்றில் மாதிரி சேகரிப்பைத் தொடக்கிவைத்து பணித்திருந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் அல்லது உஊபபமு வின் பணிப்பின் பேரில் புறநீங்கலாக எந்நேரத்திலும் தேக்கிவைக்கப்பட்டு 28 (2) ஆம் விதியின் நோக்கத்துக்காக மேலதிகப் பகுபாய்வுகளுக்கு உட்படுத்தப்படலாம். தேக்கிவைக்கப்பட்ட மாதிரியொன்றின்மீது மேலதிகப் பகுப்பாய்வை நடாத்துவதற்கு உட்கருதுகின்ற விளையாட்டு வீரரைப் பரீட்சிப்பதற்கு அதிகாரத்தைக்கொண்ட வேறேதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, மாதிரிச் சேகரிப்பைத் தொடக்கிவைத்து பணித்திருந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் அல்லது உஊபபமு வின் அனுமதியுடன் அவ்வாறு செய்யலாம் என்பதுடன் எவையேனும் பின்தொடர் பெறுபேறுகள் முகாமைக்குப் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும். உஊபபமு வினால் அல்லது வேறோர் ஊக்கு பதார்த்த பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் தொடக்கிவைக்கப்பட்ட ஏதேனும் மாதிரித் தேக்கிவைத்தல் அல்லது மேலதிகப் பகுப்பாய்வு, உஊபபமு வின் அல்லது அவ்வொழுங்கமைப்பின் செலவிலிருத்தல் வேண்டும். மாதிரிகளின் மேலதிகப் பகுப்பாய்வு, ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

(8) உஊபபமு ஆனது பெறுபேறுகள் முகாமை அதிகாரத்துடன் ஊக்கு பதார்த்தப் பன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, அத்துடன்/அல்லது உஊபபமு தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடம் (உஊபபமு விலிருந்தான அல்லது பெறுபேறுகள் முகாமை அதிகாரத்தைக்கொண்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பிலிருந்தான அங்கீகாரத்துடன்) பிரிக்கப்பட்ட மாதிரியின் முதலாம் பாகத்தை ஓர் A மாதிரிப் பகுப்பாய்வுக்காகவும் பிரிக்கப்பட்ட மாதிரியின் இரண்டாம் பாகத்தை உறுதிப்படுத்துகைக்காகவும் பயன்படுத்தும் நோக்கத்துக்காக A அல்லது B மாதிரியைப் பிரிப்பதற்கு உட்கருதுமிடத்து, அப்போது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தில் எடுத்துக்கூறப்பட்ட நடவடிக்கைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(9) உஊபபமு. அதன் தனித் தற்றுணிபின்படி எந்நேரத்திலும், முன்னறிவித்தலுடனோ அல்லது முன்னறிவித்தலின்றியோ, ஓர் ஆய்வுகூடத்தின் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் உடைமையிலுள்ள ஏனும் மாதிரியினதும் தொடர்புபட்ட பகுப்பாய்வுசார் தரவினதும் அல்லது தகவலினதும் உருப்படியான உடைமையைக் கொள்ளலாம். உஊபபமு வின் கோரிக்கையின் மேல் மாதிரியை அல்லது தரவை உடைமையில் வைத்திருக்கும் ஆய்வுகூடம் அல்லது பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, மாதிரியின் அல்லது தரவின் உருப்படியான உடைமையை எடுப்பதற்கு உஊபபமு வுக்கு உடனடியாக அணுக்கத்தை வழங்கி அதனை இயலச்செய்தல் வேண்டும். ஒரு மாதிரியை அல்லது தரவை உடைமையில் எடுக்குமுன்னர் ஆய்வுகூடத்துக்கு அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு உஊபபமு முன்னறிவித்தல் வழங்கியிராதிருப்பின். உஊபபமு வினால் எந்த ஆய்வுகூடத்தின் மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் மாதிரிகள் அல்லது தரவு எடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆய்வுகூடத்துக்கும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கணைப்பு ஒவ்வொன்றுக்கும் உடைமையிலெடுத்தபின்னர் நியாயமான காலத்தினுள் அத்தகைய அறிவித்தலை அது வழங்குதல் வேண்டும். கைப்பற்றப்பட்ட மாதிரி அல்லது தரவு ஒன்றின் பகுப்பாய்வுக்கும்

ஏதேனும் புலனாய்வுக்கும் பின்னர், உஊபபமு, இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டு விதியின் மீறுகை கண்டுபிடிக்கப்படின், மாதிரிக்கான அல்லது தரவுக்கான பெறுபேறுகள் முகாமைப் பெறுப்பை ஏற்பதற்கு விளையாட்டு வீரரைப் பரீட்சிக்கும் அதிகாரத்தைக்கொண்ட வேறோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பைப் பணிக்கலாம்.

**பெறுபேறுகள் முகாமை: பொறுப்பு, தொடக்கப் பரிசீலனை, அறிவித்தல் மற்றும் தற்காலிக இடைநிறுத்துகைகள்**

29. (1) விதிகள் 28(7), 28(9), மற்றும் சட்டக்கோவையின் உறுப்புறை 7.1 என்பவற்றில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, பெறுபேறுகள் முகாமை, மாதிரிச் சேகரிப்பைத் தொடக்கிவைத்து பணித்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பொறுப்பாதலும், அதன் நடவடிக்கை முறைசார் விதிகளினால் ஆளப்படுதலும் வேண்டும்.

(2) அந்நாட்டின் நாட்டினத்தவராக, அதில் வதிபவராக, உரிமம் வைத்திருப்பவராக, அல்லது விளையாட்டு ஒழுங்கமைப்பின் உறுப்பினராகவிராத விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள்மீது இஊபபமு வின் விதிகள் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு அதிகாரமளிக்காத சூழ்நிலைகளில், அல்லது தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு அத்தகைய அதிகாரத்தைப், பிரயோகிப்பதற்கு மறுக்கும் சூழ்நிலைகளில், பெறுபேறுகள் முகாமையானது ஏற்புடையற்பாலதான சர்வதேசச் சம்மேளனத்தினால் அல்லது ஏற்புடையற்பாலதான சர்வதேச சம்மேளனத்தின் விதிகளினால் பணிக்கப்பட்டவாறு விளையாட்டு வீரரின்மீது அல்லது வேறு ஆளின்மீது அதிகாரங்கொண்ட ஒரு மூன்றாந்திறத்தவரினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) எங்குள்ளாரென்பதுபற்றிய ஓர் இயல்திற தவறுதல் தொடர்பாக (கோப்பிடுதல் தவறுதல் அல்லது தவறிய பரீட்சை) பெறுபேறுகள் முகாமையானது, பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகக் கேள்விக்குட்படுத்தப்பட்ட விளையாட்டு வீரர் எந்தச் சர்வதேசச் சம்மேளனத்துடன் அல்லது இஊபபமு வுடன் எங்குள்ளாரென்பதுபற்றிய தகவலைக் கோப்பிடுகின்றாரோ அந்தச் சர்வதேசச் சம்மேளனத்தினால் அல்லது இஊபபமு வினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். இஊபபமு ஆனது ஒரு கோப்பிடுதல் தவறை அல்லது ஒரு தவறிய பரீட்சையைத் தீர்மானித்தால், அத்தகவலை அது, ஊபபநிமுமு வினூடாக உஊபபமு வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அங்கிருந்து அது வேறு இயைபான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு அதனைக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்.

(4) இஊபபமு வின் அதிகாரத்தின்கீழுள்ள விளையாட்டு வீரர்களையும் வேறு ஆட்களையும் தொடர்புபடுத்தியுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் தொடர்பில் பெறுபேறுகள் முகாமையை நடாத்துவதற்கான பொறுப்பை அது எடுக்கவேண்டிய வேறு சூழ்நிலைகள், சட்டக்கோவையின் 7 ஆம் உறுப்புரையைக் குறிப்பீடு செய்வதன்மூலமும் அவ்வுறுப்புரைக்கிணங்கவும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) உஊபபமு, குறித்த சூழ்நிலைகளில் பெறுபேறுகள் முகாமையை நடாத்தும்படி இஊபபமு வைப் பணிக்கலாம். உஊபபமு வினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான காலக்கெடுவினுள் பெறுபேறுகள் முகாமையை நடாத்துவதற்கு இஊபபமு மறுத்தால், அத்தகைய மறுப்பு இணங்கியொழுகாமைச் செயலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் உஊபபமு ஆனது, அவ்வாறு செய்வதற்கு விரும்புகின்றதும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள்மீது அதிகாரங்கொண்டதுமான வேறோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுற்கெதிரான ஒமுங்கமைப்பை அல்லது அத்தகைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு இல்லையனின், அவ்வாறு செய்வதற்கு விரும்பும் வேறேதேனும் ஊகக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்தமைப்பை இஊபபமு வுக்குப் பதிலாகப் பெறுபேறுகள் முகாமையின் பொறுப்பை எடுக்கும்படி பணிக்கலாம். அத்தகைய விடயத்தில் இஊபபமு ஆனது உஊபபமு வினால் பெயர்குறிக்கப்பட்ட மற்றைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்குப் பெறுபேறுகள் முகாமையை நடாத்துவதற்கான செலவுகளையும் சட்டத்தரணியின் கட்டணங்களையும் மீளளித்தல் வேண்டும் என்பதுடன் செலவுகளையும் சட்டத்தரணியின் கட்டணங்களையும் மீளளிப்பதற்குத் தவறுதல், இணங்கியொழுகாமைச் செயலொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் தொடர்பான பரிசீலனையும் அறிவித்தலும்**

30. பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க ஏதேனும் இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின மீறுகை தொடாபில் இஊபபமு பரிசீலனையையும் அறிவித்தலையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் முன்னைய மீறுகைகளை அடையாளங்காணுதல்**

31. இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய அறிவித்தலை ஒரு விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்குக் கொடுக்க முன்னர் இஊபபமு அத்தகைய அறிவித்தலை ஊபபநிமுமு வுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதரான விதியின் முன்னைய ஏதேனும் மீறுகை உள்ளதாவென்பதைத்

தீர்மானிப்பதற்கு உஊபபமு வுடனும் வேறு இயைபான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடனும் தொடர்பு கொள்ளுதலும் வேண்டும்.

**தற்காலிக இடைநிறுத்துகைகள்**

32. (1) ஒரு குறித்துரைக்கப்பட்ட பதார்த்தமாகவிராத அல்லது ஒரு குறித்துரைக்கப்பட்ட முறையாகவிராத ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்துக்காக அல்லது ஒரு தடைசெய்யப்பட்ட முறைக்காக (பாதகமான நடைமுறைக் கண்டறிகைப் பரிசீலனைச் செய்முறை பூர்த்தி செய்யப்பட்டதன்மேல்) இஊபபமு பாதபமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை அல்லது பாதகமான நடைமுறைக் கண்டறிகையைப் பெற்றால், 29 ஆம் விதியினால் தேவைப்படுத்தப்பட்ட பரிசீலனை மற்றும் அறிவித்தலின்மேல் அல்லது அதன்பின்னர் உடனடியாக அது விளையாட்டு வீரரின் மீது ஒரு தற்காலிக இடைநிறுத்துகையை விதித்தல் வேண்டும்.

(2) பின்வருமாறிருப்பின் பணிப்பாணைமுறையான தற்காலிக இடைநிறுத்துகை நீக்கப்படலாம்:-

(i) மீறுகையானது ஒரு மாசுபடுத்தப்பட்ட தயாரிப்பை உட்படுத்திய சாத்தியத்தைக் கொண்டிருக்கலாமென விளையாட்டு வீரர் இஊபபமு வின் கேட்புக் குழாத்துக்கு எடுத்துக்காட்டினால், அல்லது

(ii) மீறுகையானது ஒரு துர்ப்பிரயோக பதார்த்தத்தை உட்படுத்தினால் மற்றும் விளையாட்டு வீரர் விதி 45(3) (அ)வின் கீழ் தகவின்மையின் குறைந்த காலப்பகுதிக்கான உரித்துடைமையை நிலைநாட்டினால்.

(3) ஒரு மாசுபடுத்தப்பட்ட தயாரிப்புத் தொடர்பாக விளையாட்டு வீரரின் துணிவுரைகாரணமாகப் பணிப்பாணை முறையான தற்காலிக இடைநிறுத்துகையை நீக்காதிருப்பதற்கு இஊபபமு வின் கேட்புக் குழாத்தின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யமுடியாது.

(4) விளையாட்டு வீரரின் B மாதிரிப் பகுப்பாய்வு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது 38 ஆம் விதியில் விபரிக்கப் பட்டவாறான இறுதிக்கேட்புக்குமுன்னர் விதி 32(1) றினால் மேவப்படாத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளுக்காக இஊபபமு தற்காலிக இடைநிறுத்துகையொன்றை விதிக்கலாம்.

(5) பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, 38 முதல் 42 வரையிலான விதிகளின்கீழ் இஊபபமு வின் கேட்புக் குழாத்தின் முடிபுக்குமுன்னர் எந்நேரத்திலும் இஊபபமு வின் தற்றுணியில் விருப்புத்தெரிவுசார் தற்காலிக இடைநிறுத்துகையொன்று நீக்கப்படலாம்.

**கேட்புக்கான அல்லது மேன்முறையீட்டுக்கான வாய்ப்பு**

33. (1) முப்பத்திரெண்டு (1) முதல் 32(5) வரையிலான விதிகள் எவ்வாறிருப்பினும், விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்குப் பினவருவன கொடுக்கப்பட்டாலொழிய, தற்காலிக இடைநிறுத்துகையொன்று விதிக்கப்படலாகாது:-

(அ) தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்பட்ட பின்னர் ஒன்றில் முன்னரோ அல்லது உரிய காலத்திலான அடிப்படையிலோ ஒரு தற்காலிகக் கேட்புக்கான வாய்ப்பு: அல்லது

(ஆ) தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்பட்ட பின்னர் உரியகாலத்திலான அடிப்படையின்மீது 38 ஆம் விதிக்கிணங்கத் துரிதப்படுத்தப்பட்டவொரு கேட்புக்கான வாய்ப்பு.

(2) ஒரு தற்காலிக இடைநிறுத்துகையை விதித்தலுக்கெதிராக, அல்லது ஒரு தற்காலிக இடைநிறுத்துகையை விதிக்காதிருப்பதற்கான முடிபுக்கெதிராக 69 ஆம் விதிக்கிணங்கத் துரிதப்படுத்தப்பட்டவொரு செய்முறையில் மேன்முறையீடு செய்யத் தக்கதாகலாம்.

**தற்காலிக இடைநிறுத்துகையின் தன்னிச்சையான ஏற்றுக்கொள்கை**

*34. (1) விளையாட்டு வீரர்கள் அவர்களின் சொந்த முயற்சியின்மீது, பின்வருவனவற்றுக்குப் பின்னர் அவ்வாறு செய்யப்படின் ஒரு தற்காலிக இடைநிறுத்துகையைத் தன்னிச்சையாக ஏற்றுக்கொள்ளலாம்:-*

(i) *B மாதிரியின் அறிக்கையிலிருந்து (அல்லது B மாதிரியின் விட்டுக்கொடுப்பிலிருந்து) பத்து (10) நாட்கள் அல்லது வேறேதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய அறிவித்தலிலிருந்து பத்து (10) நாட்கள் முடிவுறுதல், அல்லது*

(ii) *அத்தகைய அறிக்கை அல்லது அறிவித்தலுக்குப் பின்னர் விளையாட்டு வீரர் முதன்முதலாகப் போட்டியிடும் தேதி.*

*(2) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய அறிவித்தலிலிருந்து பத்து (10) நாட்களினுள் அவ்வாறு செய்யப்படின் வேறு ஆட்கள் தமது சொந்த முயற்சியின் மீது ஒரு தற்காலிக இடைநிறுத்துகையைத் தன்னிச்சையாக ஏற்றுக்கொள்ளலாம்.*

*(3) அத்தகைய தன்னிச்சையான ஏற்றுக்கொள்கையின் மேல் தற்காலிக இடைநிறுத்துகை, விதிகள் 32(1) மற்றும் 32(2) இன் கீழ் விதிக்கப்பட்டிருந்தது என்றாற் போன்று, தற்காலிக இடைநிறுத்துகை முழுப்பயன் கொண்டிருத்தலும் அதே முறையில் கொள்ளப்படுதலும் வேண்டும்;*

*ஆயின் எவ்வாறாயினும், ஒரு தற்காலிக இடைநிறுத்துகையைத் தன்னிச்சையாக ஏற்றுக்கொண்ட பின்னர் எந்நேரத்திலும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அத்தகைய ஏற்றுக்கொள்கையை மீளப்பெறலாம், அப்பட்சத்தில் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தற்காலிக இடைநிறுத்துகையின்போது முன்னர் உடபட்ட காலத்துக்காக ஏதேனும் மதிப்பைப் பெறுதலாகாது.*

*(4) A மாதிரிப் பாதகமான பாகுப்பாய்வுசார் கண்டறிகையின் அடிப்படையின்மீது விதிக்கப்பட்ட தற்காலிக இடைநிறுத்துகை மற்றும் அடுத்துப்பின்னரான B மாதிரிப் பகுப்பாய்வு ( விளையாட்டு வீரரினால் அல்லது இஊபபமு வினால் கோரப்படின்) A மாதிரிப் பகுப்பாய்வை*

*உறுதிப்படுத்தாதிருப்பின், அப்போது, விளையாட்டு வீரர், விதி 5 இன் மீறுகையொன்றின் அடிப்படையின் மீது விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரரின் ஆட்டக்குழு ஒரு நிகழ்ச்சியிலிருந்து அகற்றப்பட்டிருக்குமிடத்தான சூழ்நிலைகளிலும் அடுத்துப்பின்னரான B மாதிரிப் பகுப்பாய்வு A மாதிரிப் பகுப்பாய்வை உறுதிப்படுத்தாதவிடத்தும் விதி 5 இன் மீறுகைகாரணமாக ஏதேனும் மேலதிகத் தற்காலிக இடைநிறுத்துகைக்கு அமைந்தவராதலாகாது; அப்போது, நிகழ்ச்சியை வேறுவகையில் பாதிக்காமல் விளையாட்டு வீரரை அல்லது ஆட்டக்குழுவை மீள அமர்த்துவதற்கு இன்னமும் இயன்றதாகவிருப்பின், அவ்விளையாட்டு வீரர் அல்லது ஆட்டக்குழு நிகழ்ச்சியில் தொடர்ந்து பங்குபற்றலாம்.*

**பெறுபேறுகள் முகாமை முடிபுகள்**

*35. இஊபபமு வினாலான பெறுபேறுகள் முகாமை முடிபுகள் அல்லது நீதித்தீர்ப்புகள், ஒரு குறிப்பிட்ட புவியியற்சார் இடப்பரப்புக்கு அல்லது விளையாட்டுக்கு வரையறுக்கப்படுவதாகக் கொள்ளப்படுதலாகாது என்பதுடன் பின்வரும் பிரச்சினைகளை வரையறையின்றி விளித்தலும் தீர்மானித்தலும் வேண்டும்:-*

(i) *ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டதா அல்லது ஒரு தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்படவேண்டுமா என்பதும் அத்தகைய தீர்மானத்துக்கான நிகழ்வுசார் அடிப்படை மற்றும் மீறப்பட்டுள்ள குறித்த உறுப்புரைகள் : அத்துடன்*

(i) *விதிகள் 43 மற்றும் 55 இன் கீழ் ஏற்புடையற்பாலனவான தகைமையீனங்கள் உட்பட, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையிலிருந்து (மீறுகைகளிலிருந்து) எழுகின்ற எல்லா விளைவுகளும், பதக்கங்கள் அல்லது பரிசில்களின் ஏதேனும் இழப்பித்தல், ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதி (மற்றும் அது தொடங்கும் தேதி) அத்துடன் எவையேனும் நிதிசார் விளைவுகள்.*

பெறுபேறுகள் முகாமை முடிபுகள் பற்றிய அறிவித்தல்

*36. விதி 84 இலும் பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்திலும் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு பெறுபேறுகள் முகாமை முடிபுகள் பற்றி இஊபபமு ஆனது விளையாட்டு வீரர்களுக்கும், வேறு ஆட்களுக்கும், கையொப்பமிடுநர்களுக்கும் உஊபபமு வுக்கும் அறிவித்தல் வேண்டும்.*

**விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுதல்**

*37. இஊபபமு ஆனது பெறுபேறுகள் முகாமைச் செய்முறையை நடாத்துகையில் விளையாட்டு வீரரெருவர் அல்லது வேறு ஆள் ஓய்வுபெற்றால், இஊபபமு அதன் பெறுபேறுகள் முகாமைச் செய்முறையைப் பூர்த்திசெய்வதற்கான அதிகாரத்தை வைத்திருக்கின்றது. விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஏதேனும் பெறுபேறுகள் முகாமைச் செய்முறை ஆரம்பிக்கு முன்னர் ஓய்வுபெற்றால் மற்றும் இஊபபமு ஆனது அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்த நேரத்தில் அந்த விளையாட்டு வீரரின்மீது அல்லது வேறு ஆளின்மீது பெறுபேறுகள் முகாமை அதிகாரத்தைக் கொண்டதாக இருந்திருக்குமாயின், இஊபபமு ஆனது அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை தொடர்பில் பெறுபேறுகள் முகாமையை நடாத்துவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது.*

**பெறுபேறுகள் முகாமை ஒரு நியாயமான கேட்புக்கான உரிமையும் கேட்பின் முடிவுபற்றிய அறிவித்தலும்**

*38. (1) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளாரெனத் துணிவுரைக்கப்படுகின்ற எவரேனுமாளுக்குச் சட்டக்கோவைக்கும் பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்துக்கும் இணங்கியொழுக ஒரு நியாயமான, பாரபட்சமற்ற மற்றும் தொழிற்பாட்டுரீதியில் சுயேச்சையான கேட்புக் குழாத்தின் மூலம் நியாயமான காலத்தினுள் நியாயமான கேட்பை இஊபபமு வழங்குதல் வேண்டும்.*

*(2) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கமைந்த ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளாராவென்பதைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கும் ஏற்புடையதாயின் இயைபான விளைவுகளை விதிப்பதற்கும் நியாயாதிக்கங்கொண்டுள்ள கேட்புக் குழாத்தை இஊபபமு தாபித்தல் வேண்டும்.*

*(3) இஊபபமு வின் கேட்புக் குழு அக்கறை முரண்பாடு அற்றதாகவிருப்பதனையும் அதன் அமைப்பு, பதவிக்காலம், உயர்தொழிற்சார் அனுபவம், தொழிற்பாடுசார் சுயேற்சைத்தன்மை மற்றும் போதிய நிதியளிப்பு என்பன பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றன என்பதனையும் இஊபபமு உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*(4) இஊபபமு வின் அல்லது அதன் குழுக்களின் சபையுறுப்பினர்கள், பணியாட்டொகுதி உறுப்பினர்கள், ஆணைக்குழு உறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்களும் கருமத்தின் புலனாய்விலும் முந்நீதித்தீர்ப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள எவரேனுமாளும், இஊபபமு வின் கேட்புக் குழாத்தின் உறுப்பினர்களாக அத்துடன்/அல்லது எழுதுவினைஞர்களாக (அத்தகைய எழுதுவினைஞர் ஏதேனும் முடிபின் கலந்தாராய்வுச் செய்முறையில் அத்துடன்/அல்லது வரைதலில் சம்பந்தப்பட்டுள்ள அளவுக்கு) நியமிக்கப்படமுடியாது. உறுப்பினரெவரும் கொடுக்கப்பட்ட அதேவிடயத்தில் ஏதேனும் நோபவி விண்ணப்பத்தை பெறுபேறுகள் முகாமை முடிபை அல்லது மேன்முறையீடுகளை முன்னர் கவனத்துட்கொண்டிருத்தலாகாது.*

*(5) இஊபபமு வின் கேட்புக் குழாம், சுயேச்சையான தவிசாளரொருவரையும் இரண்டு (2) வேறு சுயேச்சையான உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(6) ஒவ்வோர் உறுப்பினரும், அவரின் சட்ட, விளையாட்டுத்துறை, மருத்துவ அத்துடன்/ அல்லது விஞ்ஞானஞ்சார் நிபுணத்துவம் உட்பட, அவரின் தேவையான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான அனுபவத்தைக் கவனத்துட்கொள்வதன் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் உறுப்பினரும் ஒருதடவை புதுப்பிக்கப்படற்பாலதான மூன்று (3) ஆண்டுக்காலத்துக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.*

*(7) இஊபபமு வின் கேட்புக் குழாம், இஊபபமு விடமிருந்தான அல்லது எவரேனும் மூன்றாந்திறத்தவரிடமிருந்தான தலையீடின்றி, கேட்பு மற்றும் முடிபுசெய்தல் செய்முறையை நடாத்துவதற்கான நிலைமையிலிருத்தல் வேண்டும்.*

**கேட்புச் செய்முறை**

*39. (1) இஊபபமு ஆனது, ஒரு விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி அவர்களுக்கு அறிவித்து அறிவித்தலொன்றை அனுப்பும் போது, அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், விதி 41 (1) அல்லது விதி 41 (2) என்பற்றுக்கிணங்கக் கேட்பொன்றை விட்டுக்கொடுக்காதபோதும், அப்போது கருமமானது கேட்புக்காகவும் நிதித்தீர்ப்புக்காகவும் இஊபபமு வின் கேட்புக் குழாத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். இது பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் உறுப்புரைகள் 8 மற்றும் 9 இல் விபரிக்கப்பட்ட நெறிகளுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.*

*(2) அக்கருமத்தைக் கேட்பதற்குத் தவிசாளர், (தவிசாளரை உள்ளடக்கக்கூடிய) மூன்று (3) உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும். ஒரு (1) குழாம் உறுப்பினர் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத இயைபான சட்ட அனுவுபத்துடனான தகைமைபெற்ற சட்டவறிஞராகவும், ஒரு குழாம் உறுப்பினர், மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத இயைபான மந்துவ அனுபவத்துடனான தகைமைபெற்ற மருத்துவத்தொழிலராகவும் இருத்தல் வேண்டும்.*

*(3) இஊபபமு வின் கேட்புக் குழாத்தின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்டதன்மேல், ஒவ்வோர் உறுப்பினரும். ஒரு வெளிப்படுத்துகையில் வெளிக்காட்டப்பட்ட அச்சூழ்நிலைகள் தவிர்ந்தவையும், திறத்தவர்களுள் எவர்களினதும் நோக்கில் அவர்களின் பாரபட்சமின்மையைக் கேள்விக்குட்படுத்தக்கூடியவையும், அவருக்கு அல்லது அவளுக்குத் தெரிந்தவையுமான நிகழ்ச்சிகள் அல்லது சூழ்நிலைகள் எவையுமில்லையென்று அவ்வெளிப்படுத்துகையைக் கையொப்பமிடுதலும் வேண்டும்.*

*(4) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கமைந்த விளையாட்டு வீரர்களும் வேறு ஆட்களும் தொடர்பில் நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நடைபெறும் கேட்புகள், இஊபபமு வின் கேட்புக் குழாத்தினால் அனுமதிக்கப்படுமிடத்து துரிதப்படுத்தப்பட்டவொரு செய்முறையின் மூலம் நடாத்தப்படலாம்.*

*(5) உஊபபமு, சர்வதேசச் சம்மேளனம், மற்றும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தேசியச் சம்மேளனம், அவதானிப்பாளர்களாகக் கேட்புக்கு வருகை தரலாம். எப்பட்சத்திலும், இஊபபமு, முடிவுறாதுள்ள வழக்குகளின் நிலைமையும் எல்லாக் கேட்புகளினதும் பெறுபேறும் பற்றி அவர்களுக்கு முழுமையாக அறியத்தருதல் வேண்டும்.*

**முடிபுகள் பற்றிய அறிவித்தல்**

*40 (1) கேட்பு முடிவுற்றபின்னர், அல்லது அதன்பின்னர் உடனடியாக. இஊபபமு வின் கேட்புக் குழாம், பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் 9 ஆம் உறுப்புரைக்கு இசைந்தொழுகுகின்றதும், முடிபுக்கான முழுக் காரணங்களையும், விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியையும், 55 ஆம் விதியின்கீழ் பெறுபேறுகளின் தகைமையின்மையையும் மற்றும் ஏற்புடையதாயின், அதியுச்ச இயல்திற விளைவுகள் ஏன் விதிக்கப்படவில்லையென்பதற்கான நியாயப்படுத்துகையையும் உள்ளடக்குகின்றதுமான எழுத்திலான முடிபொன்றை வழங்குதல் வேண்டும்.*

*(2) விதி 74 இன் கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடனான விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு மற்றும் வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு இஊபபமு அம்முடிபை அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அதனை உடனடியாக ஊபபநிமுமு வினுள் அறிக்கையிடுதலும் வேண்டும். விதி 69 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம்.*

**கேட்பை விட்டுக்கொடுத்தல்**

*41. (1) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை எந்த விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு எதிராகத் துணிவுரைக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் வெளிப்படையாக ஒரு கேட்பை விட்டுக்கொடுத்து இஊபபமுவினால் முன்மொழியப்பட்ட விளைவுகளுடன் உடன்படலாம்.*

*(2) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை எந்த விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு எதிராகத் துணிவுரைக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் மீறுகையைத் துணிவுரைத்து இஊபபமு வினால் அனுப்பப்பட்ட அறிவித்தலிலிருந்து பதினைந்து (15) நாட்களினுள் அல்லது அதில் வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவினுள் அத்துணிவுரையைப் பிணக்கிற்குட்படுத்தத் தவறினால் அப்போது அவர்கள் ஒரு கேட்பை விட்டுக்கொடுத்து மீறுகையை ஒப்புக்கொண்டு முன்மொழியப்பட்ட விளைவுகளை ஏற்றுக்கொண்டுள்ளனரெனக் கருதப்படுதல் வேண்டும்.*

*(3) விதி 40 (1) அல்லது 40 (2) ஏற்புடையவாகின்ற விடயங்களில், இஊபபமு வின் கேட்புக் குழாத்தின்முன்னரான கேட்பு தேவைப்படுத்தப்படலாகாது அதற்குப் பதிலாக இஊபபமு, உடனடியாக, பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் 9ஆம் உறுப்புரைக்கு இசைந்தொழுகுகின்றதும் முடிபுக்கான முழுக் காரணங்களையும், விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியையும் 55 ஆம் விதியின்கீழ் பெறுபேறுகளின் தகைமையின்மையையும் மற்றும் ஏற்புடையதாயின், அதியுச்ச இயல்திற விளைவுகள் ஏன் விதிக்கப்படவில்லையென்பதற்கான நியாயப்படுத்துகையையும் உள்ளடக்குகின்றதுமான எழுத்திலான முடிபொன்றை வழங்குதல் வேண்டும்.*

*(4) விதி 74 இன்கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடனான விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு மற்றும் வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு இஊபபமு அம்முடிபை அறிவித்தல் வேண்டுமென்பதுடன்*

அதனை உடனடியாக ஊபபநிமுமு வினுள் அறிக்கையிடுதலும் வேண்டும். இஊபபமு ஆனது விதி 86 (2) டுக்கிணங்க அம்முடிபைப் பகிரங்கமான முறையில் வெளிக்காட்டுதல் வேண்டும்.

**விநநீ இன் முன்னரான தனிக்கேட்பு**

42. சர்வதேசமட்ட விளையாட்டு வீரர்களுக்கெதிராக, தேசியமட்ட விளையாட்டு வீரர்களுக்கெதிராக அல்லது வேறு ஆட்களுக்கெதிராகத் துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள், விளையாட்டு வீரரின், வேறு ஆளின் அல்லது இஊபபமு வின் மற்றும் விநநீ யின் சம்மதத்துடன் (29 முதல் 36 வரையிலான விதிகளுக்கும் உஊபபமு வுக்குமிணங்க அதற்குப் பெறுபேறுகள் முகாமைப் பொறுப்பு உள்ளவிடத்து) விநநீ இல் நேரடியாகத் தனியொரு கேட்பில் கேட்கப்படலாம்.

**தனிப்பட்ட பெறுபேறுகளின் தன்னியக்கமான தகைமையீனம்**

43. போட்டியின்போதான பரீட்சிப்பொன்று சம்பத்தமாகத் தனிப்பட்ட விளையாட்டுகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று, எவையேனும் பதக்கங்கள், புள்ளிகள் மற்றும் பரிசில்களின் இழப்பித்தலுட்பட, விளைகின்ற எல்லா விளைவுகளுடனும் அப்போட்டியிற் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறின் தகைமையீனத்துக்குத் தன்னியக்கமாக இட்டுச்செல்கின்றது.

**தனியாட்கள்மீதான தடைவிதிப்புகள்**

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை எந்த நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றதோ அந்த நிகழ்ச்சியிலான பெறுபேறுகளின் தகைமையீனம்

44. (1) ஒரு நிகழ்ச்சியின்போது அல்லது அது சம்பந்தமாக இடம்பெறுகின்ற ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை, அந்நிகழ்ச்சியின் ஆளும் குழுவின் முடிபின்மேல் 44(2) ஆம் விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, எல்லாப் பதக்கங்கள், புள்ளிகள் மற்றும் பரிசில்களினதும் இழப்பித்தலுட்பட, எல்லா விளைவுகளுடனும் அந்நிகழ்ச்சியில் விளையாட்டு வீரரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாத தனிப்பட்ட பெறுபேகளினதும் தகைமையீனத்துக்கு இட்டுச்செல்லாம்,

(2) விளையாட்டு வீரர், அவர் அல்லது அவள் மீறுகைக்கான தவறு அல்லாது அசட்டை எதனையும் கொண்டிருப்ப தில்லையென நிலைநாட்டினால், எந்தப் போட்டியில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை இடம்பெற்றதோ அந்தப் போட்டியில் விளையாட்டு வீரரின் பெறுபேறுகள் அவ்விளையாட்டு வீரரின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சாத்தியம் இருந்தாலொழிய, ஏனைய போட்டிகளில் விளையாட்டு வீரரின் தனிப்பட்ட பெறுபேறுகள் தகைமையைற்றனவாதலாகாது.

**ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை உள்ளமைக்கான, பயன்படுத்தப்படு கின்றமைக்கான அல்லது அதன் எத்தனிக்கப்பட்ட பயன்பாட்டுக்கான, அல்லது உடைமைக்கான தகவின்மை**

45. (1) விதி 45 (3) றுக்கமைய, தகவின்மைக் காலப்பகுதி பின்வருமிடத்து நான்கு (4) ஆண்டுகளாதல் வேண்டும்;

(அ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வேண்டுமென்று புரியப்படவில்லையென விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டமுடிந்தாலொழிய, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை குறித்துரைக்கப்பட்டவொரு பதார்த்தத்தை அல்லது குறித்துரைக்கப்பட்டவொரு முறையை உட்படுத்தாதவிடத்து; அல்லது

(ஆ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை குறித்துரைக்கப்பட்ட பதார்த்தமொன்றை அல்லது குறித்துரைக்கப்பட்டவொரு முறையை உட்படுத்துமிடத்தும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வேண்டுமென்று புரியப்பட்டதென இஊபபமு நிலைநாட்டமுடியுமானவிடத்தும்.

(2) விதி 45 (1) ஏற்புடையதாகாதிருப்பின் விதி 45 (3) (அ) வுக்கமைய, தகவின்மைக் காலப்பகுதி இரண்டு (2) ஆண்டுகளாதல் வேண்டும்.

(3) விதி 44 கில் வேறேதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை துர்ப்பிரயோகம் பற்றிய பதார்த்தமொன்றை உட்படுத்துமிடத்து-

(அ) ஏதேனும் உட்செலுத்துகை அல்லது பாவனை போட்டியில் இல்லாதபோது இடம்பெற்று விளையாட்டுச் செயல்நிறை வேற்றத்துடன் தொடர்புபடவில்லையென விளையாட்டு வீரர் நிலைநாட்டமுடியுமாயின், அப்போது தகவின்மைக் காலப்பகுதி மூன்று (3) மாதத் தகவின்மையாக இருத்தல் வேண்டும். 45(3) (அ) என்னும் விதியின்கீழ் கணக்கிடப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இஊபபமு வினால் அங்கீகரிக்கப்பட்ட திருப்திகரமாகப் பூர்த்தி செய்தால் ஒரு(1) மாதத்துக்குக் குறைக்கப்படலாம். விதி 45(3) (அ) வில் நிராகரிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, 48 ஆம் விதியில் உள்ள ஏதேனும் ஏற்பாட்டின் அடிப்படையிலான ஏதேனும் குறைப்புக்கு அமைந்ததாதலாகாது; அத்துடன்

(ஆ) உட்செலுத்துகை, பாவனை அல்லது உடைமை போட்டியின்போது இடம்பெற்று, உட்செலுத்துகையின், பாவனையின் அல்லது உட்செலுத்துகையின், பாவனையின் அல்லது உடைமையின் சந்தர்ப்பம் விளையாட்டுச் செயல்நிறைவேற்றத்துடன் தொடர்புபடவில்லையென விளையாட்டு வீரர் நிலைநாட்டமுடியுமாகவிருந்தால், அப்போது, உட்செலுத்துகை, பாவனை அல்லது உடைமை, 45(1) ஆம் விதியின் நோக்கங்களுக்காக வேண்டுமென்றதாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் 47 ஆம் விதியின்கீழ் தீங்குபெருக்கின்ற சூழ்நிலைகளைக் கண்டறிவதற்கான ஓர் அடிப்படையை வழங்குதலுமாகாது.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் ஏனைய மீறுகைகளுக்கான தகவின்மை**

46. விதி 49 அல்லது விதி 51 ஏற்புடையதாகவிருந்தாலொழிய விதி 45 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத்தவிர், தகவின்மைக் காலப்பகுதியானது பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) (i) விதி 5 (இ) அல்லது 5 (உ) என்பவற்றின் மீறுகைகளுக்காகத் தகவின்மைக் காலப்பகுதி, மாதிரிச் சேகரிப்புக்கு உட்படுவதற்குத் தவறுகின்ற விடயத்தில் தவிர, நான்கு (4) ஆண்டுகளாதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டமை வேண்டுமென்றதாக இருக்கவில்லையென விளையாட்டு வீரர் நிலைநாட்டமுடியுமானவராக இருப்பின், தகவின்மைக் காலப்பகுதி இரன்டு (2) ஆண்டுகளாதல் வேண்டும்;

(ii) மற்றெல்லா விடயங்களிலும், தகவின்மைக் காலப்பகுதியைக் குறைப்பதனை நியாயப்படுத்துகின்ற விதிவிலக்கான சூழ்நிலைகளை விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டமுடியுமானவராகவிருப்பின், தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறின் அளவைப் பொறுத்து இரண்டு (2) முதல் நான்கு (4) ஆண்டுகள்வரை இருத்தல் வேண்டும்; அல்லது

(iii) ஒரு பாதுகாக்கப்பட்ட ஆளை அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரரை உட்படுத்துகின்ற ஒரு விடயத்தில் தகவின்மைக் காலப்பகுதி, பாதுகாக்கப்பட்ட ஆளின் அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரரின் தவறின் அளவைப் பொறுத்து, அதிகபட்சம் இரண்டு (2) ஆண்டுகளுக்கும் குறைந்தபட்சம் ஓர் எச்சரிக்கைக்கும் இடையேயும் தகவின்மைக் காலப்பகுதி இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விதி 5 (ஈ) இன் மீறுகைகளுக்காகத் தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் தவறின் அளவைப் பொறுத்து, குறைந்தபட்சம் ஓர் (1) ஆண்டுக்குக் குறைக்கப்படுவதற்கமைய, இரண்டு (2) ஆண்டுகளாதல் வேண்டும். இவ்வுறுப்புரையிலுள்ள தகவின்மையின் இரண்டு(2)ஆண்டுகள் மற்றும் ஓர் (1) ஆண்டுக்கிடையேயான நெகிழ்வுத்தன்மை, விளையாட்டு வீரர் பரீட்சிப்புக்குக் கிடைக்கக்கூடியவராக இருப்பதனைத் தவிர்ப்பதற்கு முயற்சித்தாரென்ற பாரதூரமான சந்தேகத்தைக் கடைசிநேர இருப்பிட மாற்றங்களின் முறை அல்லது வேறு நடத்தையின் முறை எழுப்புகின்றவிடத்து விளையாட்டு வீரர்களுக்குக் கிடைக்கக்கூடியதாதலாகாது.

(இ) விதி 5(எ) அல்லது 5 (ஏ) இன் மீறுகைகளுக்காக, தகவின்மைக் காலப்பகுதியாதை, மீறுகையின் பாரதூரதானதன்மயைப் பொறுத்து, குறைந்தபட்சம் நான்கு (4) ஆண்டுகளிலிருந்து ஆயுட்காலத் தகவின்மைவரை இருத்தல் வேண்டும். ஒரு பாதுகாக்கப்பட்ட ஆளை உட்படுத்துகின்ற விதி 5 (எ) அல்லது 5 (ஏ) இன்கீழான ஏதேனும் மீறுகை குறிப்பாகப் பாரதூரமான மீறுகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் தவிர்ந்த மீறுகைகளுக்காக, விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரினால் புரியப்படின், விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கு ஆயுட்காலத் தகவின்மையை விளைவித்தலும் வேண்டும். அத்துடன் மேலதிகமாக, விளையாட்டுத்துறைசாராச் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் மீறக்கூடிய 5 (எ) அல்லது 5 (ஏ) என்னும் விதியின் குறிப்பிடத்தக்க மீறுகைகள், தகுதிவாய்ந்த நிருவாக, உயர்தொழிற்சார் அல்லது நீதிமுறை அதிகாரிகளுக்கு அறிக்கை யிடப்படுதல் வேண்டும்.

(ஈ) 5 (ஐ) என்னும் விதியின் மீறுகைகளுக்காக, விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, மீறுகையின் பாரதூரமான தன்மையைப் பொறுத்து, குறைந்தபட்சம் இரண்டு (2) ஆண்டுகளிலிருந்து ஆயுட்காலத் தகவின்மைவரை இருத்தல் வேண்டும்.

(உ) 5(ஒ) என்னும் விதியின் மீறுகைகளுக்காக, தகவின்மைக் காலப்பகுதியானது, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறின் அளவையும் விடயத்தின் ஏனைய சூழ்நிலைகளையும் பொறுத்து, குறைந்தபட்சம் ஓர் (1) ஆண்டுவரை குறைப்பதற்கமைய, இரண்டு (2) ஆண்டுகளாதல் வேண்டும்.

(ஊ) விதி 5 (ஒ) வின் மீறுகைகளுக்காகத் தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் புரியப்பட்ட மீறுகையின் பாரதூரமானதன்மையைப் பொறுத்து, குறைந்தபட்சம் இரண்டு (2) ஆண்டுகளிலிருந்து ஆயுட்காலத் தகவின்மைவரை இருத்தல் வேண்டும்.

**தகவின்மைக் காலப்பகுதியை அதிகரிக்கக்கூடிய தீங்குபெருக்கின்ற சூழ்நிலைகள்**

47. நியமத் தடைவிதிப்புக்கு அதிகமான தகவின்மைக் காலப்பகுதியொன்றை விதிப்பதனை நியாயப்படுத்தும் தீங்கு பெருக்கின்ற சூழ்நிலைகள் உள்ளனவென விதி 5 (எ) இன்கீழான (விலைப்படுத்துதல் அல்லது எத்தனிக்க விலைப்படுத்துதல்), 5 (ஏ) இன்கீழான (நிருவாகம் அல்லது எத்தனித்த நிருவாகம்), 5 (ஐ) இன்கீழான அல்லது எத்தனித்த உடந்தை) அல்லது 5 (ஒ) இன்கீழான (அறிக்கையிடுதலுக்கெதிராக ஊக்கமிழக்கச் செய்வதற்கு அல்லது பழிவாங்குவதற்கு ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் புரியப்பட்ட செயல்கள்) பற்றிய மீறுகைகள் தவிர்ந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை உட்படுத்துகின்ற தனிப்பட்ட வழக்கில் இஊபபமு நிலைநாட்டினால், அப்போது வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியானது, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை அவர் அல்லது அவள் புரியவில்லையென நிலைநாட்டமுடியுமானவராக இருந்தாலொழிய, மீறுகையின் பாரதூரமானதன்மையையும் தீங்குபெருக்கின்ற சூழ்நிலைகளின் தன்மையையும் பொறுத்து, இரண்டு (2) ஆண்டுகள் வரையிலான மேலதிகக் காலப்பகுதியினால் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

**தவறு அல்லது அசட்டை எதுவும் இல்லாதவிடத்து தகவின்மைத் காலப்பகுதியை நீக்குதல்**

48. ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், அவர் அல்லது அவள் தவறு அல்லது அசட்டை எதனையும் கொண்டிருப்பதில்லையெனத் தனிப்பட்டவொரு விடயத்தில் நிலைநாட்டினால், அப்போது, வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி நீக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதுவுமில்லையென்ற அடிப்படையின்மீது தகவின்மைக் காலப்பகுதியைக் குறைத்தல்**

49. (1) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை (துர்ப்பிரயோகம் பற்றிய பதார்த்தம் தவிர்ந்த) குறித்துரைக்கப்பட்ட பதார்த்தத்தை அல்லது குறித்துரைத்தப்பட்ட முறையை உட்படுத்துமிடத்தும், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதனையும் நிலைநாட்டமுடியுமானவராக இருக்குமிடத்தும், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறின் அளவைப் பொறுத்து, குறைந்தபட்சத்தில், ஒரு கடிந்துரையாகவும் தகவின்மையாகவும் இருத்தல் வேண்டும்.

(2) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை இல்லாமை ஆகிய இரண்டையும் மற்றும் (துர்ப்பிரயோகம் பற்றிய பதார்த்தம் தவிர்ந்த) கண்டுபிடிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பதார்த்தம் ஒரு மாசுபடுத்தப்பட்ட தயாரிப்பிலிருந்து வந்ததென்றும் நிலைநாட்டமுடியுமானவராக இருக்கும் விடயங்களில், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறின் அளவைப் பொறுத்து, குறைந்தபட்சத்தில், ஒரு மடிந்துரையாகவும் தகவின்மைக்காலப்பகுதி இல்லாமலும், அதிகபட்சத்தில், இரண்டு (2) ஆண்டுக்காலத் தகவின்மையாகவும் இருத்தல் வேண்டும்.

(3) துர்ப்பிரயோகம் பற்றிய பதார்த்தத்தை உட்படுத்தாத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை ஒரு பாதுகாக்கப்பட்ட ஆளினால் அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரரினால் புரியப்படுமிடத்தும், பாதுகாக்கப்பட்ட ஆள் அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரர் குறிப்பித்தக்க தவறு அல்லது அசட்டை இல்லாமையை நிலைநாட்டமுடியுமானவராக இருக்குமிடத்தும்,

அப்போது, தகவின்மைக் காலப்பகுதி, பாதுகாக்கப்பட்ட ஆளின் அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரரின் தவறின் அளவைப் பொறுத்து, குறைந்தபட்சத்தில், ஒரு கடிந்துரையாகவும் தகவின்மைக் காலப்பகுதி இல்லாமலும், அதிகபட்சத்தில், இரண்டு (2) ஆண்டுக்காலத் தகவின்மையாகவும் இருத்தல் வேண்டும்.

*50. ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், விதி 49 ஏற்புடையதாகவிராக தனிப்பட்ட விடயமொன்றில் அவர் அல்லது அவள் குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதனையும் கொண்டிருப்பதில்லையென நிலைநாட்டினால், அப்போது, 51 ஆம் விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மேலதிக்க குறைப்புக்கு அல்லது நீக்கத்துக்கு அமைய, வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறினது அளவின் அடிப்படையின்மீது குறைக்கப்படலாம்: ஆனால் குறைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் அரைவாசிக்குக் குறையாதிருக்கலாம், வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி ஆயுட்காலமாகவிருப்பின், இவ்வுறுப்புரையின்கீழான குறைக்கப்பட்ட காலப்பகுதி எட்டு (8) ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்கலாம்.*

*தவறல்லாத வேறு காரணங்களுக்காகத் தகவின்மைக் காலப்பகுதியை நீக்குதல், குறைத்தல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது வேறு விளைவுகள்*

*51. (1)* இஊபபமு ஆனது, விதி 69 இன்கீழான மேன்முறையீட்டு முடிபுக்கு முன்னர் அல்லது மேன்முறையீடு செய்வதற்கான காலம் முடிவுறுமுன்னர், பின்வருவனவற்றை விளைவிக்கக்கூடியதாக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஓர் ஒழுங்கமைப்புக்கு, குற்றவியல் அதிகாரசபைக்கு அல்லது உயர்தொழில்சார் ஒழுக்காற்றுக் குழுவுக்கு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் கணிசமானளவு உதவி வழங்கியுள்ள தனிப்பட்ட விடயத்தில் விதிக்கப்பட்ட (தகைமையீனம் மற்றும் பணிப்பாணைமுறையான பகிரங்க வெளிக்காட்டுகை தவிர்ந்த) விளைவுகளின் ஒரு பாகத்தை இடைநிறுத்தலாம்:-

(அ) இன்னோராளினால் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு கண்டுபிடித்தல் அல்லது முன்கொணர்தல்:

(ஆ) ஒரு குற்றவியல் அல்லது உயர்தொழிற்சார் ஒழுக்காற்றுக் குழு இன்னோராளினால் புரியப்பட்ட குற்றவியல் தவறை அல்லது உயர்தொழிற்சார் விதிகளின் மீறுகையைக் கண்டுபிடித்தல் அல்லது முன்கொணர்தல் மற்றும் கணிசமானளவு உதவியை வழங்குதின்ற ஆளினால் வழங்கப்பட்ட தகவல் இஊபபமு வுக்கு அல்லது பெறுபேறுகள் முகாமைப் பொறுப்புடனான வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல்:

(இ) சட்டக்கோவையுடன், சர்வதேச நியமத்துடன் அல்லது தொழினுட்ப ஆவணத்துடன் இணங்கியொழுகாமைக்காக ஒரு கையொப்பமிடுநர், உஊபபமு வின் தராதர அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடம் அல்லது விளையாட்டு வீரரின் நடைமுறை முகாமைக் கூறுக்கெதிராக உஊபபமு ஒரு வழக்கு நடவடிக்கையைத் தொடக்கிவைத்தல் (ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டுள்ளவாறு) : அல்லது

(ஈ) (i) ஒரு குற்றவியல் அல்லது ஒழுக்காற்றுக் குழு, ஒரு குற்றவியல் தவறை அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாடு தவிர்ந்த வினையாட்டு நேர்மையின் மீறுகையிலிருந்து எழுகின்ற உயர்தொழிற்சார் விதிகளின் அல்லது விளையாட்டு விதிகளின் மீறுகையை உஊபபமு வின் அங்கீகாரத்துடன் முன்கொணர்தல். விதி 69 இன்கீழான மேன்முறையீட்டு முடிபுக்குப்பின்னர் அல்லது மேன்முறையீடு செய்வதற்கான காலம் முடிவுற்றபின்னர், இஊபபமு ஆனது உஊபபமு வினதும் ஏற்புடையற்பாலதான சர்வதேசச் சம்மேளனத்தினதும் அங்கீகாரத்துடன் வேறுவகையில் ஏற்புடையற்பாலனவான விளைவுகளின் ஒருபாகத்தை மட்டுமே இடைநிறுத்தலாம். வேறுவகையில் ஏற்புடைற்பாலதான தகவின்மைக் காலப்பகு தியை எந்த அளவுக்கு இடைநிறுத்தலாமோ அந்த அளவு, விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் புரியப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது பாரதூரமானதன்மையினதும் விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டை, சட்டகோவைக்கு இணங்கியொழுகாமையை அத்துடன்/ அல்லது விளையாட்டு நேர்மை மீறுகைகளை நீக்குவதற்கான முயற்சிக்கு அந்த விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் வழங்கப்பட்ட கணிசமானளவு உதவியின் குறிப்பிடப்படத்தக்கதன்மையினதும் அடிப்படையின்மீதாதல் வேண்டும். வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் நான்கில் மூன்றுக்கு மேற்படாதது இடைநிறுத்தப்படலாம். வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி ஆயுட்காலத்துக்கானதாக இருப்பின், இவ்வுறுப்புரையின்கீழ் இடைநிறுத்தப்படாத காலப்பகுதி எட்டு (8) ஆண்டுகளுக்குக் குறைவாகவிருத்தலாகாது. இப்பந்தியின் நோக்கங்களுக்காக, வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் விதி 53(6) (ஆ) வின்கீழ் சேர்க்கப்படக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதியை உள்ளடக்குதலாகாது.

(ii) கணிசமானளவு உதவியை வழங்குவதற்கு நாடுகின்ற ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் அவ்வாறு கோரப்படின், இஊபபமு ஆனது, ஒரு பங்கமில்லா உடன்படிக்கைக்கமைய அதற்குத் தகவலை வழங்கும்படி வியைாட்டு வீரரை அல்லது ஆளை அனுமதித்தல் வேண்டும்.

(iii) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தொடர்ந்து ஒத்துழைப்பதற்கும் விளைவுகள் பற்றிய இடைநிறுத்துகை எந்தக் கணிசமானளவு உதவியின் அடிப்படையில் இருந்ததோ அந்தப் பூரணமான மற்றும் நம்பத்தகு கணிசமானளவு உதவியை வழங்குவதற்கும் தவறினால், இஊபபமு ஆனது தொடக்க விளைவுகளை மீளநிலைநாட்டுதல் வேண்டும். இஊபபமு ஆனது இடைநிறுத்தப்பட்ட விளைவுகளை மீளநிலைநாட்டுவதற்கு முடிபுசெய்தால் அல்லது இடைநிறுத்தப்பட்ட விளைவுகளை மீளநிலைநாட்டாதிருப்பதற்கு முடிபுசெய்தால், விதி 69 இன்கீழ் மேன்முறையீடுசெய்வதற்கு உரித்துடைய எவரேனுமாளினால் அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம்.

(2) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமப்புகளுக்குக் கணிசமானளவு உதவிவழங்குவதற்கு விளையாட்டு வீரர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் மேலும் ஊக்கமளிப்பதற்கு, இஊபபமு வின் கோரிக்கையின்பேரில் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை அல்லது சட்டக்கோவையின் வேறு மீறுகையைப் புரிந்துள்ள, அல்லது புரிந்துள்ளாரெனத் துணிவுரைக்கப்பட்டுள்ள விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் கோரிக்கையின்பேரில், உஊபபமு ஆனது, பெறுபேறுகள் முகாமைச் செய்முறையின் ஏதேனும் கட்டத்தில், 68 ஆம் விதியின்கீழான இறுதி மேன்முறையீட்டு முடிபுக்குப் பின்னருட்பட, வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியினதும் வேறு விளைவுகளினதும் தோதான இடைநிறுத்துகையாக உள்ளதென அது கருதுகின்றதற்கு உடன்படலாம். விதிவிலக்கான சூழ்நிலைகளில், உஊபபமு ஆனது, இவ்வுறுப்புரையில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவற்றுக்கு அதிகமான கணிசமானளவு உதவிக்காகத் தகவின்மைக் காலப்பகுதியின் மற்றும் வேறு விளைவுகளின் இடைநிறுத்துகைகளுக்கு, அல்லது தகவின்மைக் காலப்பகுதி இல்லாமைக்கு, பணிப்பாணை முறையான பகிரங்க வெளிக்காட்டுகை இல்லாமைக்கு அத்துடன்/அல்லது பரிசில் பணத்தைத் திருப்பிக்கொடுக்காமைக்கு அல்லது குற்றப்பணங்களை அல்லது செலவுதொகைகளைச் செலுத்தாதிருக்கின்றமைக்கு உடன்படலாம், உஊபபமு வின் அங்கீகாரமானது, இவ்வுறுப்புரையில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக விளைவுகளை மீளநிலைநாட்டுவதற்கு அமைந்ததாதல் வேண்டும். 68 ஆம் விதி எவ்வாறிருப்பினும், விதி 51(2) இன் சந்தர்ப்பத்தில் உஊபபமு வின் முடிபுகளுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படமுடியாதிருக்கலாம்.

(3) கணிசமானளவு உதவிகாரணமாக வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தடைவிதிப்பொன்றின் ஏதேனும் பாகத்தை இஊபபமு ஆனது இடைநிறுத்தினால், அப்போது முடிபுக்கான நியாயப்படுத்துகையை வழங்கும் அறிவித்தல், 84 ஆம் விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, 70 ஆம் விதியின் கீழ் மேன்முறையீடுசெய்வதற்கான உரிமையொன்றுடன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஏனைய ஒழுங்கமைப்புகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும். தனித்துவமான சூழ்நிலைகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மிகச்சிறந்த நலனுக்காகவிருக்குமென உஊபபமு தீர்மானிக்குமிடத்து, கணிசமானளவு உதவி உடன்படிக்கையை அல்லது வழங்கப்படுகின்ற கணிசமானளவு உதவியின் தன்மையை வெளிவிடுவதனை வரையறுத்து அல்லது தாமதப்படுத்தி தோதான அந்தரங்கத்தன்மை உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும்படி உஊபபமு வுக்கு அதிகாரமளிக்கலாம்.

(4) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நிலைநாட்டக்கூடிய மாதிரிச் சேகரிப்பொன்று பற்றிய அறிவித்தலைப் பெறுமுன்னர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெறிரான விதியின் மீறுகையைத் தன்னிசிசையாக ஒப்புக்கொள்ளுதலானது, ஒப்புக்கொள்ளப்பட்ட நோத்தில் மீறுகையின் ஒரே நம்பத்தகு சான்றாக உள்ளவிடத்தும், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி குறைக்கப்படலாம், ஆனால் வேறுவகையாக ஏற்புடையற்பாலதாவுள்ள தகவின்மைக் காலப்பகுதியின் ஓரரைவாசிக்குக் குறைவாகவல்ல.

(5) விதி 51 இன்கீழ் ஏதேனும் குறைப்பை அல்லது இடைநிறுத்துகையை ஏற்புடையதாக்குவதற்குமுன்னர், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், 48, 49 அல்லது 51 ஆம் விதியின் ஒன்றுக்கு மேற்பட்ட ஏற்பாடுகளின்கீழ் தடைவிதிப்பிலான குறைப்புக்கான உரித்துடைமையை நிலைநாட்டுமிடத்து, வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி 45, 47, 48 மற்றும் 49 ஆம் விதிகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், 51 ஆம் விதியின்கீழ் தகவின்மைக் காலப்பகுதியின் குறைப்புக்கான அல்லது இடைநிறுத்துகைக்கான உரித்துடைமையை நிலைநாட்டினால், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி குறைக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம், ஆனால் வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் நான்கிலொன்றுக்குக் குறைவாகவல்ல.

**பெபேறுகள் முகாமை உடன்படிக்கைகள்**

52. (1) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், (விதி 46 இன்கீழ் துணிவுரைக்கப்பட்ட ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதியுட்பட) நான்கு (4) அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளைக்கொண்ட துணிவுரைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியைக் கொண்டுள்ள இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி இஊபபமு வினால் அறிவிக்கப்பட்டபின்னர் மீறுகையை ஒப்புக்கொண்டு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய குற்றச்சாட்டு தொடர்பிலான அறிவித்தல் பெறப்பட்டபின்னர் இருபது (20) நாட்களுக்குப் பிந்தாமல் துணிவுரைக்கப்பட்ட

தகவின்மைக் காலப்பகுதியை ஏற்றுக்கொள்ளுமிடத்து, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இஊபபமு வினால் துணிவுரைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியை ஏற்றுக்கொள்ளுமிடத்து, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இஊபபமு வினால் துணிவுரைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியில் ஓராண்டுக் குறைப்பொன்றைப் பெறலாம்.

(2) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், விதி 52 இன்கீழ் துணிவுரைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியில் ஓராண்டுக் குறைப்பைப் பெறுமிடத்து, துணிவுரைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியில் வேறேதேனும் உறுப்புரையின்கீழ் மேலதிகக் குறைப்பெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) இஊஉபபமு வினால் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான விதியின் மீறுகைபற்றிய பிரச்சினைக்குட் படுத்தப்பட்ட பின்னர் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அவர்களின் தனித்தற்றுணியில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகையை ஒப்புக்கொள்ளுமிடத்தும் இஊபபமு வினாலும் உஊபபமு வினாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க விளைவுகளுக்கு உடன்படுமிடத்தும், அப்போது:-

(அ) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதாத்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கு 44 முதல் 51 வரையிலான விதிகளின் ஏற்புடைமை, மீறுகையின் பாரதூரமானதன்மை, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறின் அளவு மற்றும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் மீறுகையை எந்தளவுக்கு உடனடியாக ஒப்புக்கொண்டார் என்பன இஊபபமு வினால் மற்றும் உஊபபமு வினால் மதிப்பீடு செய்யப்படுவதன் அடிப்படையில் தகவின்மைக் காலப்பகுதியில் குறைப்பொன்றைப் பெறலாம்: அத்துடன்

(ஆ) தகவின்மைக் காலப்பகுதியானது, மாதிரிச் சேமிப்புத்தேதி அல்லது வேறோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை கடைசியாக இடம்பெற்ற தேதிபோன்ற வெள்ளெனவான தேதிகளில் ஆரம்பிக்கலாம். எவ்வாறாயினும், ஒவ்வொரு விடயத்திலும், இவ்விதி ஏற்புடையதாக்கப்படுமிடத்து, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அவ்விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் அடுத்துப்பின்னர் மதிப்பளிக்கப்பட்ட ஒரு தடைவிதிப்பின் அல்லது ஒரு தற்காலிக இடைநிறுத்துகையின் விதிப்பை ஏற்றுக்கொண்ட வெள்ளெனவான தேதியிலிருந்து முன்னோக்கிச்சென்று உடன்பட்டுக்கொள்ளப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியின் ஆகக்குறைந்தது ஓரரைவாசிக்கேனும் உட்படுதல் வேண்டும். விடயத் தீர்மான உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதா அல்லது செய்துகொள்ளாதிருப்பதா, தகவின்மைக் காலப்பகுதியின் குறைப்புத்தொகை மற்றும் அதன் ஆரம்பத்தேதி என்பனபற்றி உஊபபமு வினாலான அல்லது இஊாபபமு விலான முடிபு, ஒரு கேட்புக்குழுவினால் தீர்மானிப்புக்கான அல்லது பரிசீலனைக்கான கருமங்கள் அல்ல என்பதுடன் விதி 68 இன்கீழ் மேன்முறையீட்டுக்கு அமைந்தனவுமல்ல.

(4) இவ்வுறுப்புரையின்கீழ் விடயத் தீர்மான உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கு நாடுகின்ற ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் கோரப்படின் இஊபபமு ஆனது, பங்கமில்லா உடன்படிக்கையொன்றுக்கமைய, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை தொடர்பில் அதனிடமுள்ள ஓர் ஒப்புக்கொள்ளுதல் பற்றிக் கலந்துரையாடுவதற்கு விளையாட்டு வீரரை அல்லது வேறு ஆளை அனுமதித்தல் வேண்டும்.

**பன்மடங்கான மீறுகைகள்**

**இரண்டாவது அல்லது மூன்றாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை**

53. (1) ஒரு விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக, தகவின்மைக் காலப்பகுதி, பின்வருவனவற்றின் அதிகரித்த காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்:-

(அ) ஆறு மாதத் தகவின்மைக் காலப்பகுதி: அல்லது

(ஆ) பின்வருவனவற்றிற்கிடையேயான அளவெல்லையில் தகவின்மைக் காலப்பகுதி:

(i) முதலாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியினதும் மற்றும் இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை முதலாவது மீறுகையாகக்கருதி இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கு வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியினதும் மொத்தத் தொகை: அத்துடன்

(ii) இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை முதலாவது மீறுகையாகக்கருதி இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கு வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் இரு மடங்குகள்.

(2) இந்த அளவெல்லையினுள் தகவின்மைக் காலப்பகுதி, இரண்டாவது மீறுகை தொடர்பில் சூழ்நிலைகளின் முழுமையினதும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளினது தவறின் அளவினதும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மூன்றாவது மீறுகை 47 ஆம் அல்லது 48 ஆம் விதியின்கீழ் தகவின்மைக் காலப்பகுதியின் நீக்குகைக்கான அல்லது குறைப்புக்கான நிபந்தனையை நிறைவேற்றினால் தவிர, அல்லது விதி 5 (ஈ) இன் மீறுகையை உட்படுத்தினால் தவிர, ஆயுட்காலப்பகுதிக்கான தகவின்மையை எப்பொழுதும் விளைவிக்கும். இந்த குறிப்பிட்ட விடயங்களில் தகவின்மைக் காலப் பகுதியானது எட்டு (8) ஆண்டுகளிலிருந்து ஆயுட்காலத்துக்கான தகவின்மையாகவிருத்தல் வேண்டும்.

(4) விதிகள் 53 (1) மற்றும் 53 (3) றில் நிலைநாட்டப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, அப்போது, விதி 50 இன் ஏற்புடைமை மூலம் மேலும் குறைக்கப்படலாம்.

(5) எந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தவறின்மையை அல்லது அசட்டையின்மையை நிலைநாட்டியுள்ளாரோ அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை விதி 53 இன் நோக்கங்களுக்காக, ஒரு மீறுகையாகக் கருதப்படுதலாகாது. அத்துடன் மேலதிகமாக, விதி 45 (3) (அ) வின் கீழ் தடைவிதிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை 53 ஆம் விதியின் நோக்கங்களுக்காக ஒரு மீறுகையாகக் கருதப்படலாகாது.

(6) குறித்தசில இயல்திறனான பன்மடங்கான மீறுகைகளுக்கான மேலதிக விதிகள் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) விதி 53(6) (அ) மற்றும் 53(6) (இ) இன்கீழ் தடைவிதிப்புகளை விதிக்கும் நோக்கங்களுக்காக, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் 29 ஆம் விதியைப் பின்பற்றி அறிவித்தல் பெற்றபின்னர் அல்லது முதலாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி அறிவித்தல் கொடுப்பதற்கு இஊபபமு நியாயமான முயற்சிகளைச் செய்தபின்னர் அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தாரென இஊபபமு ஆனது நிலைநாட்ட முடியுமானதாகவிருப்பின் மட்டுமே இரண்டாவது மீறுகையொன்றாகக் கருதப்படலாம். இஊபபமு இதனை நிலைநாட்ட முடியாதிருப்பின், மீறுகைகள் தனியொரு முதலாவது மீறுகையாக ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் விதிக்கப்பட்ட தடைவிதிப்பு, தீங்குபெருக்கின்ற சூழ்நிலைகளுட்பட, கூடுதலாகப் பாரதூரமானதாகவுள்ள தடைவிதிப்பைக் கொண்டுள்ள மீறுகையின் அடிப்படையின்மீதாதலும் வேண்டும். முன்னைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் பின்னோக்கிய மீறுகைத் தேதியைக்கொண்ட எல்லாப் போட்டிகளிலுமான பெறுபேறுகள், விதி 53(1) றில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தகைமையற்றனவாகும்.

(ஆ) ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அறிவிப்புக்கு முன்னர் மேலதிக ஊக்கு பதார்த்தப் பயன் பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தாரென்றும், மேலதிக மீறுகை முதலாவதாக அறிவிக்கப்பட்ட மீறுகைக்குமுன்னர் அல்லது பின்னர் பன்னிரெண்டு (12) மாதங்களுக்கு முன்னர் அல்லது அதற்கு மேற்பட இடம்பெற்றதென்றும் இஊபபமு நிலைநாட்டினால், அப்போது, மேலதிக மீறுகைக்கான தகவின்மைக் காலப்பகுதியானது, மேலதிக மீறுகை தனியான முதலாவது மீறுகையாக இருக்கின்றது என்றாற்போன்றும் முன்னர் அறிவிக்கப்பட்ட மீறுகைக்காக விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியுடன் இந்தத் தகவின்மைக் காலப்பகுதி ஒருங்கியையாகவல்லாது தொடர்ச்சியாக உட்படுத்தப்படுகின்றது என்றாற் போன்றும் கணக்ககிடப்படுதல் வேண்டும். இந்த 53(6) (ஆ) என்னும் விதி ஏற்புடையதாகின்றவிடத்து, ஒன்றாக எடுக்கப்படும் மீறுகைகள், விதி 53(1) இன் நோக்கங்களுக்காகத் தனியொரு மீறுகையாக அமைதல் வேண்டும்.

(இ) அடிப்படையானதாகவுள்ள துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுச் செய்முறை சம்பந்தமாக விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் விதி 5(உ) இன் மீறுகையைப் புரிந்தாரென இஊபபமு நிலைநாட்டினால், விதி 5(உ) இன் மீறுகை தனியான முதலாவது மீறுகையாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மீறுகைக்கான தகவின்மைக் காலப்பகுதிக்கு, அடிப்படையானதாகவுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விதிக்கப்பட்ட

தகவின்மைக் காலப்பகுதி ஏதேனுமிருப்பின் அதனோடு, ஒருங்கியைபாகவல்லாது தொடர்ச்சியாக உட்படுதலும் வேண்டும். 52 (6) (இ) என்னும் விதி ஏற்புடையதாக்கப்படுமிடத்து, ஒன்றாக எடுக்கப்பட்ட மீறுகைகள், 53 ஆம் விதியின் நோக்கங்களுக்காகத் தனியொரு மீறுகையாக அமைதல் வேண்டும்.

(ஈ) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தகவின்மைக் காலப்பகுதியின் போது இரண்டாவது அல்லது மூன்றாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளாரென இஊபபமு நிலைநாட்டினால், பன்மடங்கான மீறுகைகளுக்கான தகவின்மைக் காலப்பகுதிகளுக்கு ஒருங்கியைபாகவல்லது தொடர்ச்சியாக உட்படுதல் வேண்டும்.

54. விதி 53 இன் நோக்கங்களுக்காக, ஒவ்வோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்குமெதிரான விதியின் மீறுகை, பன்மடங்கான மீறுகைகளாகக் கருதப்படுவதற்கென அதே பத்தாண்டுக் காலப்பகுதியினுள் இடம்பெறுதல் வேண்டும்.

மாதிரிச் சேகரிப்பை அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்ததனை அடுத்துப்பின்னர் போட்டிகளிலான பெறுபேறுகளின் தகைமையீனம்

55. எந்தப் போட்டியிலான பெறுபேறுகள் 43 ஆம் விதியின்கீழ் நேரிடை மாதிரியை விளைவித்தனவோ அந்தப் போட்டியிலான பெறுபேறுகள் தன்னியக்கமாகத் தகைமையீனமாக்கப்படுதலுடன் மேலதிகமாக, (போட்டியின்போது அல்லது போட்டியில் இல்லாதபோது) நேரிடை மாதிரியொன்று சேகரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது ஏதேனும் தற்காலிக இடைநிறுத்துகை அல்லது தகவின்மைக் காலப்பகுதி தொடங்குவதனூடாக வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை இடம்பெற்ற திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு வீரரின் மற்றெல்லாப் போட்டிசார் பெறுபேறுகளும், நியாயத்தன்மை வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, எவையேனும் பதக்கங்கள், புள்ளிகள் மற்றும் பரிசில்கள் இழப்பிக்கப்படுதலுட்பட, ஏற்படுகின்ற எல்லா விளைவுகளுடனும் தகைமையற்றனவாக்கப்படுதல் வேண்டும்.

**இழப்பிக்கப்பட்ட பரிசிற்பணம்**

56. ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது விளைவாக இழப்பிக்கப்பட்ட பரிசிற்பணத்தை இஊபபமு அறவிட்டால், இழப்பீட்டைச்செய்கின்ற விளையாட்டு வீரர் போட்டியிட்டிராதிருப்பின் அதற்கு உரித்துடையோராக இருந்திருக்கும் விளையாட்டு வீரர்களுக்கு இப்பரிசிற்பணத்தைக் குறித்தொதுக்கிப் பகிர்வதற்கு நியாயமான வழிமுறைகளை அது எடுத்தல் வேண்டும்.

நிதிசார் விளைவுகள்

57. (1) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரியுமிடத்து, இஊபபமு ஆனது, அதன் தற்றுணிபின்படியும் விகிதாசாரத்தன்மை நெறிக்கமையவும், பின்வருவனவற்றைச் செய்வதற்கு விருப்புத் தெரிவு செய்யலாம்:-

(அ) விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையுடன் இணைந்த செலவுதொகைகளை விளையாட்டு வீரரிடமிருந்து அல்லது வேறு ஆளிடமிருந்து அறவிடலாம்: அத்துடன்/அல்லது

(ஆ) அதிகபட்சத் தகவின்மைக் காலப்பகுதி ஏலவே விதிக்கப்பட்டிருக்கும் விடயங்களில் மட்டுமே, விளையாட்டு வீரரிடமிருந்து அல்லது வேறு ஆளிடமிருந்து 200,000.00 ரூபா வரையிலான தொகையில் ஒரு தண்டத்தை, செலவுதொகையை அல்லது ஒரு கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) ஒரு நிதிசார் தடைவிதிப்பை விதித்தல் அல்லது இஊபபமு வினால் செலவுதொகைகள் அறவிடப்படுதல், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழ் வேறுவகையில் ஏற்புடையற்பாலதாகவிருக்கக்கூடிய தகவின்மையை அல்லது வேறு தடைவிதிப்பைக் குறைப்பதற்கான அடிப்படையொன்றாகக் கருதப்படுதலாகாது.

**தகவின்மைக் காலப்பகுதியின் தொடக்கம்**

58. ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விளையாட்டு வீரர் தகவின்மைக் காலப்பகுதிக்கு ஏலவே உட்பட்டிருக்குமிடத்து, ஏதேனும் புதிய தகவின்மைக் காலப்பகுதி, நடப்புத் தகவின்மைக் காலப்பகுதிக்கு உட்பட்டபின்னர் முதலாவது நாளன்று தொடங்குதல் வேண்டும். வேறுவகையில் கீழே ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, தகவின்மைக்

காலப்பகுதி, தகவின்மைக்காக ஏற்பாடு செய்கின்ற இறுதிக்கேட்பு முடிபுத் தேதியன்று, அல்லது கேட்பு விட்டுக்கொடுக்கப்படின் அல்லது கேட்பெதுவும் இல்லாதிருப்பின், தகவின்மை ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது வேறுவகையாக விதிக்கப்படும் திகதியன்று ஆரம்பித்தல் வேண்டும்.

59. கேட்புச் செய்முறையில் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் வேறு அம்சங்களிற் கணிசமானளவு தாமதங்கள் இருந்துள்ளவிடத்தும், அத்தகைய தாமதங்கள் விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதல்லாதனவென்று விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டமுடியுமானவராக இருக்குமிடத்தும், இஊபபமு அல்லது இஊபபமு வின் கேட்புக்குழாம், ஏற்புடையதாயின், மாதிரிச் சேகரிப்புத் திகதியன்றே தொடங்குகின்ற முன்னையவொரு திகதியில் அல்லது இன்னுமோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையானது கடைசியாக இடம்பெற்ற திகதியன்று முன்கூட்டியே தகவின்மைக் காலப்பகுதியை ஆரம்பிக்கலாம். தகவின்மைக் காலப்பகுதியின்போது எய்தப்பட்ட எல்லாப் போட்டிசார் பெறுபேறுகளும், எதிர்ச்செயலாற்ற தகவின்மையுட்பட, தகைமையற்றவையாக்கப்படுதல் வேண்டும்.

60. (1) தற்காலிக இடைநிறுத்துகையொன்றுக்கு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் மதிப்பளிக்கப்படின், அப்போது, அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிரான அத்தகைய தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்காக மதிப்பு ஒன்றைப் பெறுதல் வேண்டும். விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒரு தற்காலிக இடைநிறுத்துகைக்கு மதிப்பளிக்காவிடின். அப்போது, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் உட்பட்டவராகவிருந்த ஏதேனும் தற்காமலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்காக மதிப்பெதனையும் பெறுதல் ஆகாது. எந்த முடிபுகிகெதிராக அடுத்துப்பின்னர் மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபைப் பின்பற்றித் தகவின்மைக் காலப்பகுதியொன்றுக்கு அவர் உட்பட்டவராகவிருப்பின், அப்போது விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், மேன்முறையீட்டின்மீது இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிராக அவர் உட்பட்டவராகவிருக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிராக அவர் உட்பட்டவராகவிருந்த அத்தகைய தகவின்மைக் காலப்பகுதிக்காக மதிப்பு ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

(2) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒருவர் இஊபபமு விடமிருந்து எழுத்திலான தற்காலிக இடைநிறுத்துகையொன்றைத் தன்னிச்சையாக ஏற்று அதன்பின்னர் அத்தற்காலிக இடைநிறுத்துகைக்கு மதிப்பளித்தால், அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிரான அத்தகைய தன்னிச்சையான தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்காக மதிப்பு ஒன்றைப் பெறுதல் வேண்டும். ஒரு தற்காலிக இடைநிறுத்துகையினதாக விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தன்னிச்சையான ஏற்றுக்கொள்கைப்பத்திரத்தின் பிரதியொன்று, 84(1) ஆம் விதியின்கீழ் துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துள்ள ஒவ்வொரு திறத்தவருக்கும் உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும்.

(3) விளையாட்டு வீரர் போட்டியிடாதிருப்பதற்கு விருப்புத்தெரிவித்தால் அல்லது ஒரு குழுவினால் இடைநிறுத்தப்பட்டாரா என்பதனைப் பொருட்படுத்தாது, தற்காலிக இடைநிறுத்துகையின் அல்லது தன்னிசையான தற்காலிக இடைநிறுத்துகையின் பயனுறும் திகதிக்குமுன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கான தகவின்மைக் காலப்பகுதிக்கெதிராக மதிப்பெதுவும் அளிக்கப்படுதலாகாது.

(4) ஆட்டக்குழு விளையாட்டுத்துறையில், ஓர் ஆட்டக்குழுவுக்குத் தகவின்மைக் காலப்பகுதியொன்று விதிக்கப்படுமிடத்து, நியாயத்தன்மை வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, தகவின்மைக் காலப்பகுதியானது, தகவின்மைக்காக ஏற்பாடுசெய்கின்ற இறுதிக் கேட்பு முடிபுத்தேதியன்று அல்லது கேட்பு விட்டுக்கொடுக்கப்படின், தகவின்மை ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது வேறுவகையாக வெளிக்காட்டப்படும் தேதியன்று ஆரம்பித்தல் வேண்டும். ஏதேனும் ஆட்டக்குழுவின் தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்கு (விதிக்கப்படதாயினுஞ்சரி அல்லது தன்னிச்சையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாயினுஞ்சரி), உட்படவேண்டிய மொத்தத் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிராக மதிப்பளிக்கப்படுதல் வேண்டும்.

**தகவின்மையின் போதான அல்லது தற்காலிக இடைநிறுத்துகையின்போதான அந்தஸ்து**

61. (1) தகவற்றவரென வெளிப்படுத்தப்பட்டுள்ள அல்லது தற்காலிக இடைநிறுத்துகைக்கு அமைந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் எவரும், தகவின்மை அல்லது தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதியின்போது, எவரேனும் கையொப்பமிடுநரினால், கையொப்பமிடுநர் உறுப்பினராகவுள்ள ஒழுங்கமைப்பினால், அல்லது கையொப்பமிடுநர் உறுப்பினராகவுள்ள ஒழுங்கமைப்பொன்றின் ஒரு களரியினால் அல்லது வேறு உறுப்பு ஒழுங்கமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு போட்டியில் அல்லது செயற்பாட்டில், அல்லது ஏதேனும் உயர்தொழிற்சார் ஒன்றியத்தினால்

அல்லது ஏதேனும் சர்வதேச அல்லது தேசியமட்ட நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட போட்டிகளில் அல்லது ஓர் அரசாங்கஞ்சார் முகவராண்மையினால் நிதியளிக்கப்பட்ட ஏதேனும் உச்சக்கூறு அல்லது தேசியமட்ட விளையாட்டுத்துறைச் செயற்பாட்டில் ஏதேனும் தன்மையில் பங்குபற்றுதலாகாது.

(2) நான்கு (4) ஆண்டுகளுக்கு மேற்பட்ட தகவின்மைக் காலப்பகுதிக்கமைந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், தகவின்மைக் காலப்பகுதியின் நான்கு (4) ஆண்டுகளைப் பூர்த்திசெய்தபின்னர், தடைவிதிக்கப்படாத உள்நாட்டு விளையாட்டு நிகழ்ச்சிகளில் அல்லது சட்டக்கோவைக் கையொப்பமிடுநரின் அல்லது சட்டக்கோவைக் கையொப்பமிடுனரின் உறுப்பினரினது அதிகாரத்தின்கீழ் வேறுவகையாக விளையாட்டு வீரரொருவராகப் பங்குபற்றலாம், ஆனால் அந்த உள்நாட்டு விளையாட்டு நிகழ்ச்சி, அத்தகைய விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் (அல்லது அதற்கான புள்ளிகளைத் திரட்டுவதற்கு) ஒரு தேசியத் திறப்பாட்டு முதன்மையில் அல்லது சர்வதேச நிகழ்ச்சியில் போட்டியிடுவதற்கு அவரைத் தகைமையுடையவராக்கக் கூடிய மட்டத்தில் இராதிருக்கும் வரை மட்டுமே மற்றும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் எத்தன்மையிலும் பாதுகாக்கப்பட்ட ஆட்களுடன் பணிபுரிவதனை உட்படுத்தாதிருக்கும்வரை மட்டுமே அவ்வாறு பங்குபற்றலாம்.

(3) தகவின்மைக் காலப்பகுதியொன்றுக்கு அமைந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பரீட்சிப்புக்கும் எங்குள்ளாரென்பது பற்றிய தகவலை வழங்குவதற்கு இஊபபமு வினாலான ஏதேனும் தேவைப்பாட்டுக்கும் அமைந்த வராகவிருத்தல் வேண்டும்.

**பயிற்சிக்குத் திரும்பிவருதல்**

62. விதி 61 (1) றுக்கு விதிவிலக்காக, விளையாட்டு வீரரொருவர் விளையாட்டு வீரரின் விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியின் கடைசி இரண்டு மாதங்களின் குறுகியகாலத்தின் போது அல்லது விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியின் கடைசிக் காலாண்டின்போது ஓர் ஆட்டக்குழுவுடன் பயிற்சிபெறுவதற்கு அல்லது இஊபபமு வின் ஒரு களரியின் அல்லது வேறு உறுப்பினர் ஒழுங்கமைப்பினது அல்லது கையொப்பமிடுநரின் உறுப்பினர் ஒழுங்கமைப்பின் வசதிகளைப் பயன்படுத்துவதற்குத் திரும்பி வரலாம்.

**தகவின்மையின் போது அல்லது தற்காலிக இடைநிறுத்துகையின் போது பங்குபற்றுவதற்கான தடையை மீறுதல்**

63.(1) தகவில்லாதவரென வெளிப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், 62 ஆம் விதியிற் குறித்துரைக்கப்பட்டவாறு தகவின்மையின்போது பங்குபற்றுகைக்கெதிரான தடையை மீறுமிடத்து, அத்தகைய பங்குபற்றுகையின் பெறுபேறுகள் தகைமையற்றனவாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தொடக்கத் தகவின்மைக் காலப்பகுதிக்கு நீட்சியில் சமமாகவுள்ளவொரு புதிய தகவின்மைக் காலப்பகுதி, தகவின்மையின் தொடக்கக்காலப்பகுதியின் முடிவுக்கு சேர்க்கப்படுதலும் வேண்டும். புதிய தகவின்மைக் காலப் பகுதி, ஒரு கடிந்துரை மற்றும் தகவின்மைக் காலப்பகுதியெதுவுமில்லாமை உட்பட, அந்த விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறுகையின் அளவினதும் விடயத்தின் வேறு சூழ்நிலைகளினதும் அடிப்படையில் சீர்ப்படுத்தப்படலாம். விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பங்குபற்றுகைக்கெதிரான தடையை மீறியுள்ளாராவென்பது மற்றும் சீர்ப்படுத்துகையொன்று தோதானதாவென்பதுபற்றிய தீர்மானம், எந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பெறுபேறுகள் முகாமை, தொடக்கத் தகவின்மைக் காலப்பகுதி விதிக்கப்படுவதற்கு இட்டுச்சென்றதோ அந்த ஊக்கு பதர்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் செய்யப்படுதல் வேண்டும். 69 ஆம் விதியின்கீழ் இம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம்.

(2) விதி 60 (1) இல் விவரிக்கப்பட்ட தற்காலிக இடைநிறுத்துகையின்போது பங்குபற்றுகைக்கெதிரான தடையை மீறுகின்ற விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் அல்லது வேறு ஆள், அவர் உட்படுகின்ற ஏதேனும் தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்காக மதிப்பெதனையும் பெறுதலாகாது என்பதுடன் அத்தகைய பங்குபற்றுகையின் பெறுபேறுகள் தகைமையற்றனவாக்கப்படுதலும் வேண்டும்.

(3) விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் அல்லது வேறு ஆள் தகவின்மையின்போது அல்லது தற்காலிக இடைநிறுத்துகையின் போது பங்குபற்றுவதற்கெதிரான தடையை மீறுவதில் ஆளொருவருக்கு உதவியளிக்குமிடத்து இஊபபமு ஆனது, அத்தகைய உதவிக்காக விதி 5 (ஐ) இன் மீறுகைக்கான தடைவிதிப்புகளை விதித்தல் வேண்டும்.

**தகவின்மையின்போது நிதியாதரவைப் பிடித்துவைத்தல்**

64. மேலதிகமாக, விதி 48 இல் அல்லது 49 இல் விவரிக்கப்பட்டவாறாகக் குறைந்தவொரு தடைவிதிப்பை உட்படுத்தாத ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக, அத்தகைய ஆளினாற் பெறப்பட்ட சில அல்லது

எல்லா விளையாட்டுகள் தொடர்பான நிதியாதரவும் அல்லது வேறு விளையாட்டுகள் தொடர்பான நன்மைகளும், இஊபபமு, இலங்கை அரசாங்கம், இலங்கைத் தேசிய ஒலிம்பிக் விளையாட்டுகள் குழு, இலங்கைத் தேசிய அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் குழு மற்றும் தேசியச் சம்மேளனங்களிளால் பிடித்துவைக்கப்படும்.

**ஆட்டக்குழு விளையாட்டுகளை பரீட்சித்தல்**

*65. ஓர் ஆட்டக்குழு விளையாட்டில் ஓர் ஆட்டக்குழுவின் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக 29 முதல் 37 வரையிலான விதிகளின் கீழ் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி அறிவிக்கப்பட்டுள்ளவிடத்து அந்நிகழ்ச்சிக்கான ஆளும் குழு, நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது ஆட்டக்குழுவின் தோதான இலக்குப் பரீட்சித்தலை நடாத்துதல் வேண்டும்.*

**ஆட்டக்குழு விளையாட்டுகளுக்கான விளைவுகள்**

*66. ஓர் ஆட்டக்குழு விளையாட்டில் ஆட்டக்குழு உறுப்பினர்களுள் இருவருக்கு மேற்பட்டோர் நிகழ்ச்சிக் காலப்பகுதியின் போது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளனரெனக் காணப்படின், நிகழ்ச்சியின் ஆளும் குழு, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிகின்ற தனிப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு விதிக்கப்பட்ட எவையேனும் விளைவுகளுடன் சேர்த்து, ஆட்டக்குழுவின்மீது தோதான தடைவிதிப்பொன்றை விதித்தல் வேண்டும்.*

*நிகழ்ச்சியை ஆளும் குழு, ஆட்டக்குழு விளையாட்டுகளுக்காக மேலும் கண்டிப்பான விளைவுகளை நிலைநாட்டலாம்*

*67. எந்த நிகழ்ச்சியின் நோக்காங்களுக்காக 66 ஆம் விதியிலுள்ளவற்றைப் பார்க்கிலும் மேலும் கண்டிப்பான விளைவுகள் ஆட்டக்குழு விளையாட்டுகளுக்காக விதிக்கப்படுகின்றனவோ அந்த நிகழ்ச்சிக்கான விதிகளை ஒரு நிகழ்ச்சிக்கான ஆளும் குழு நிலைநாட்டுவதற்கு விருப்புத்தெரிவிக்கலாம்.*

*வேறு விளையாட்டுத்துறைக் குழுக்களுக்கெதிராக இஊபபமு வினாலான தடைவிதிப்புகள்*

*68. இஊபபமு ஆனது இலங்கையிலுள்ள எந்தத் தேசியச் சம்மேளனத்தின்மீது அல்லது இலங்கையிலுள்ள வேறு விளையாட்டுத்துறைக் குழுவின்மீது அதிகாரங்கொண்டுள்ளதோ அந்த ஒரு தேசியச் சம்மேளனம் அல்லது வேறு ஏதேனும் விளையாட்டுத்துறைக் குழு, அந்த ஒழுங்கமைப்பின் அல்லது குழுவின் தகுதிவாய்ந்த இடப்பரப்பினுள் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு, போற்றிக்காப்பதற்கு மற்றும் வலுவுறுத்துவதற்குத் தவறியுள்ளதென அறியவருமிடத்து, இஊப்பமு ஆனது, பின்வரும் மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கும்படி இலங்கைத் தேசிய ஒலிம்பிக் குழுவை, இலங்கை அரசாங்கத்தை அல்லது சர்வதேசச் சம்மேளனங்களைக் கோருவதற்கு விருப்புத்தெரிவிக்கலாம் அல்லது அதற்கு அதிகாரமுள்ளவிடத்து அதுவே பின்வரும் மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கலாம்:*

*(அ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட எதிர்கால நிகழ்ச்சிகளிலிருந்து அல்லது எல்லா நிகழ்ச்சிகளிலிருந்தும் அவ்வொழுங்கமைப்பின் அல்லது குழுவின் எல்லா உறுப்பினர்களையும் அல்லது உறுப்பினர்களின் தொகுதியில் சிலரைத் தவிர்த்தல்.*

*(ஆ) அந்து ஒழுங்கமைப்பின் அல்லது குழுவின் ஏற்றங்கீகாரம், இஊபபமு வின் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு அவற்றின் உறுப்பினர்களது தகவுடைமை தொடர்பில் மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் அத்துடன்/அல்லது பின்வருவனவற்றின் அடிப்படையில் அந்த ஒழுங்கமைப்பின் அல்லது குழுவின்மீதானவொரு தண்டத்தை, செலவுதொகையை அல்லது கட்டணத்தை விதித்தல்:*

*(i) ஒரு பன்னிரெண்டு (12) மாத காலப்பகுதியின்போது அவ்வொழுங்கமைப்புடன் அல்லது குழுவுடன் இணைந்துள்ள விளையாட்டு வீரர்களினால் அல்லது வேறு ஆட்களினால் ( விதி 5 (ஈ) யுடன் சம்பந்தப்பட்ட மீறுகைகள் தவிர) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் நான்கு (4) அல்லது அதற்கு மேற்பட்ட மீறுகைகள் புரியப்படுதல். அத்தகைய பட்சத்தில் அவ்வொழுங்கமைப்பின் அல்லது குழுவின் எல்லா உறுப்பினர்களும் அல்லது உறுப்பினர்கள் தொகுதியுட் சிலர், இரண்டு (2) ஆண்டுகள் வரையிலானவொரு காலப்பகுதிக்கு எவையேனும் இஊபபமு செயற்பாடுகளில் பங்குபற்றுவதிலிருந்து தடைசெய்யப்படலாம் அத்துடன்/அல்லது அவ்வொழுங்கமைப்புக்கு அல்லது குழுவுக்கு 200,000.00 ரூபா தொகை வரையிலான ஒரு தண்டம், செலவுதொகை அல்லது கட்டணம் விதிப்பனவு செய்யப்படலாம்.*

(ii) (விதி 5 (ஈ) என்பதை உட்படுத்துகின்ற மீறுகைகள்தவிர), இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் நான்கு (4) அல்லது அதற்கு மேற்பட்ட மீறுகைகள், 68 (ஆ) (ii) இல் விவரிக்கப்பட்ட மீறுகைகளுடன் சேர்த்து மேலதிகமாக, பன்னிரெண்டு (12) மாதகாலப்பகுதியின்போது அவ்வொழுங்கமைப்புடன் அல்லது குழுவுடன் இணைந்த விளையாட்டு வீராகளினால் அல்லது வேறு ஆட்களினால் புரியப்படுதல். அத்தகைய பட்சத்தில், அவ்வொழுங்கமைப்பு அல்லது குழு நான்கு (4)ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படலாம்.

(iii) அவ்வொழுங்கமைப்புடன் அல்லது குழுவுடன் இணைந்துள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் அல்லது வேறு ஆட்கள் ஒரு சர்வதேச நிகழ்ச்சியின் போது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிதல். அத்தகைய பட்சத்தில், அவ்வொழுங்கமைப்புக்கு அல்லது குழுவுக்கு 500,000/= ரூபாத் தொகை வரையிலான ஒரு தண்டம், செலவு தொகை அல்லது கட்டணம் விதிப்பனவு செய்யப்படலாம்.

(iv) இஊபபமு விடமிருந்து ஒரு விளையாட்டு வீரர் எங்குள்ளாரென்பது பற்றிய தகவலுக்கான கோரிக்கையைப் பெற்றபின்னர் அவ்வொழுங்கமைப்பு அல்லது குழு அத்தகவல்பற்றி இஊபபமு வுக்கு அறியத்தருவதற்கு விழிப்புக் கவனத்துடனான முயற்சிகளைச் செய்வதற்குத் தவறியிருத்தல். அத்தகைய பட்சத்தில், அவ்வொழுங்கமைப்புக்கு அல்லது, அவ்வொழுங்கமைப்பின் அல்லது குழுவுக்கு, அவ்வொழுங்கமைப்பின் அல்லது குழுவின் விளையாட்டு வீரர்களைப் பரீட்சிப்பதில் கூறப்பட்ட இஊபபமு வின் எல்லாச் செலவு தொகைகளையும் மீளளிப்பதுடன் சேர்த்து மேலதிகமாக, ஒரு விளையாட்டு வீரருக்கு 200,000.00 ரூபாத் தொகை வரையிலான ஒரு தண்டம், செலவு தொகை அல்லது கட்டணம் விதிப்பனவு செய்யப்படலாம்.

(இ) அந்த ஒழுங்கமைப்புக்கு அல்லது குழுவுக்கு சில அல்லது எல்லா நிதியளிப்பு அல்லது வேறு நிதிசார் மற்றும் நிதிசாரா ஆதரவைப் பிடித்துவைத்தல்.

(ஈ) ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்புடன் இணைந்துள்ள ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் புரியப்பட்ட இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையுடன் தொடர்புபட்ட (ஆய்வுகூடக் கட்டணங்கள், கேட்புச் செலவுகள் மற்றும் பயணம் என்பனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்) எல்லாச் செலவு தொகைகளையும் இஊபபமு வுக்கு மீளளிப்பதற்கு அந்த விளையாட்டுகள் ஒழுங்கமைப்பை அல்லது குழுவைக் கடப்பாடுடையதாக்குதல்.

**பெறுபேறுகள் முகாமை: மேன்முறையீடுகள்**
**மேன்முறையீட்டுக்கமைந்த முடிபுகள்**

69. (1) சட்டக்கோவையின்கீழ் அல்லது இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழ் செய்யப்பட்ட முடிபுகளுக்கெதிராக இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான 70 ஆம் விதியில், சட்டக்கோவையில் அல்லது சர்வதேச நியமங்களில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு மேன்முறையீடு செய்யப்படலாம். அத்தகைய முடிபுகள், மேன்முறையீட்டுக் குழு வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, மேன்முறையீட்டின்கீழ் இருக்கையில் பயனுடையனவாகவிருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டின்மீது பரிசீலனையின் நோக்கொல்லை, விடயத்துக்கு இயைபான எல்லா வழக்கெழு வினாக்களையும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் தொடக்க முடிபு ஆக்குநரின் முன்னரான வழக்கெழுவினாக்களுக்கு அல்லது பரிசீலனையின் நோக்கெல்லைக்கு வெளிப்படையாக வரையறுக்கப்படுவதுமில்லை.

(3) மேன்முறையீட்டுக்கான எவரேனும் திறத்தவர், முதற்சந்தர்ப்பத்திலான கேட்பில் எழுப்பப்படாத, சான்றை, சட்ட விவாதங்களை மற்றும் உரிமைக்கோரிக்கைகளை, அவை அதே வழக்குக் காரணத்திலிருந்து அல்லது அதே பொது நிகழ்வுகளிலிருந்து அல்லது சூழ்நிலைகளிலிருந்து எழுகின்றவரை அல்லது முதற்சந்தர்ப்பத்திலான கேட்பில் உரைக்கப்பட்டிருக்கும் வரை சமர்ப்பிக்கலாம்.

(4) விநநீ ஆனது, அதன் முடிபைச் செய்வதில், எந்தக் குழுவின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்தக் குழுவினால் பிரயோகிக்கப்பட்ட தற்றுணிபுக்குப் பணிவிணக்கம் கொடுத்தலாகாது.

(5) விதி 68 இன்கீழ் உஊபபமு ஆனது மேன்முறையீடுசெய்வதற்கு உரிமைகொண்டிருக்குமிடத்தும் இஊபபமு வின் செய்முறையினுள் வேறு திறத்தவரெவரும் ஓர் இறுதி முடிபுக்கெதிராக மேன்முறையீடுசெய்திராதவிடத்தும், உஊபபமு

ஆனது, இஊபபமு இன் செய்முறையிலுள்ள வேறு பரிகாரங்களைப் பயன்படுத்தவேண்டியிராமல் அத்தகைய முடிபுக்கெதிராக விநநீக்கு நேரடியாக மேன்முறையீடுசெய்யலாம்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் தொடர்பான முடிபுகள், விளைவுகள், தற்காலிக இடைநிறுத்துகைகள், முடிபுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதிகாரம் என்பவற்றுக்கெதிரான மேன்முறையீடுகள்**

70. (1)ஊக்கு பதாாத்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று புரியப்பட்டுள்ளதென்ற முடிபு, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விளைவுகளை விதிக்கின்ற அல்லது விளைவுகளை விதிக்காத முடிபு, அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்படவில்லையென்ற முடிபு, ( உதாரணமாக, காலவிதிப்புட்பட) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வழக்குநடவடிக்கையானது நடவடிக்கை முறைசார் காரணங்களுக்காக முன்செல்லமுடியாதென்ற முடிபு, விதி 26 (1) இன்கீழ் ஓய்வுபெற்ற விளையாட்டு வீரரொருவர் போட்டிக்குத் திரும்பிவருவதற்காக ஆறுமாத அறிவித்தலின் தேவைப்பாட்டுக்கு விலக்களிப்பை வழங்காதிருப்பதற்கு உஊபபமு வினாலான முடிவு, சட்டக்கோவையின் 7.1 ஆம் உறுப்புரையின்கீழ் பெறுபேறுகள் முகாமையைக் குறித்தளித்து உஊபபமு வினாலான முடிபு, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாகப் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை அல்லது ஓர் இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையை முன்கொணராதிருப்பதற்கு இஊபபமு வினாலான முடிபு, அல்லது பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்துக்கிணங்கவுள்ள புலனாய்வொன்றின்பின்னர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை முன்னெடுத்துச்செல்லாதிருப்பதற்கான முடிபு, ஒரு தற்காலிகக் கேட்பின் விளைவாகத் தற்காலிக இடைநிறுத்துகையொன்றை விதிப்பதற்கான அல்லது நீக்குவதற்கான முடிபு, 32 ஆம் விதிக்கு இணங்கியொழுகுவதற்கு இஊபபமு வின் தவறுதல், சார்த்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையின்மீது அல்லது அதன் விளைவுகளின்மீது விளைவுகளின்மீது விதிப்பைச் செய்வதற்கு இஊபபமு வுக்கு நியாயாதிக்கம் இல்லையென்ற முடிபு, விதி 51(1) இன்கீழ் விளைவுகளை இடைநிறுத்துவதற்கான அல்லது இடைநிறுத்தாதிருப்பதற்கான அல்லது விளைவுகளை மீளநிலைநாட்டுவதற்கான அல்லது மீளநிலைநாட்டாதிருப்பதற்கான முடிபு, சட்டக்கோவையின் உறுப்புரைகள் 7.1.4 மற்றும் 7.1.5 என்பவற்றுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதல், விதி 52 (1) றுக்கு இணங்கியொழுகத் தவறுதல், 63 ஆம் விதியின்கீழான முடிபு, 88 ஆம் விதியின்கீழ் வேறோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் முடிபை நடைமுறைப்படுத்தாதிருப்பதற்கு இஊபபமு வினாலான முடிபு மற்றும் சட்டக்கோவையின் உறுப்புரை 27.3 றின்கீழான முடிபு என்பவற்றுக்கெதிராக விதி 70 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மேன்முறையீடு செய்யப்படலாம்.

(2) சர்வதேச நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றுவதிலிருந்து எழுகின்ற விடயங்களில் அல்லது சர்வதேசமட்ட விளையாமட்ட விளையாட்டு வீரர்களை உட்படுத்துகின்ற விடயங்களில், அத்தகைய முடிபுக்கெதிராக விநநீ க்குப் புறநீங்கலானமுறையில் மேன்முறையீடுசெய்யப்படலாம்.

(3) விதி 70 (2) ஏற்புடையற்பாலதாக இராதிருக்கும் விடயங்களில், இஊபபமுவின் மேன்முறையீட்டுக் குழாத்துக்கு முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம். மேன்முறையீட்டுச் செய்முறை, பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் முன்னரான கேட்புகள்**

71. (1) இஊபபமு வுக்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாமொன்றை அமைச்சர் நியமித்தல் வேண்டும். இது ஒரு சுயேச்சையான தவிசாளரையும் இரு (2) வேறு சுயேச்சையான உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு (1) குழாம் உறுப்பினர் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத இயைபான சட்ட அனுபவத்தைக்கொண்ட தகைமைபெற்ற சட்டவறிஞராகவும் ஒரு (1) குழாம் உறுப்பினர் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத இயைபான மருத்துவ அனுபவத்தைக் கொண்ட தகைமைபெற்ற மருத்துவத்தொழிலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் உறுப்பினரும், அவரது சட்ட, விளையாட்டுத்துறை, மருத்துவ அத்துடன்/அல்லது விஞ்ஞான நிபுணத்துவ முட்பட, அவரது தேவைப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான அனுபவத்தைக் கவனத்துட்கொண்டு நியமிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் உறுப்பினரும் மூன்று (3) ஆண்டுக்காலத்துக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மீளநியமிக்கப்படவும் முடியும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், தொழிற்பாட்டுரீதியிலும் நிறுவனரீதியிலும் சுயேச்சையானவர்களாக இருத்தல் வேண்டும். இஊபபமு வின் சபையுறுப்பினர்கள், பணியாட்டொகுதியுறுப்பினர்கள், ஆணைக்குழுவுறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்கள் அல்லது (கையளிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர் போன்ற) அதன் துனண நிறுவனங்கள் மற்றும் விடயத்தின் புலனாய்வில், முந்நீதித்தீர்ப்பில் அல்லது பெறுபேறுகள் முகாமையில் சம்பந்தப்பட்ட எவரேனுமாள், இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் உறுப்பினர்களாக அத்துடன்/ அல்லது எழுதுவினைஞர்களாக நியமிக்கப்படமுடியாது

குறிப்பாக, உறுப்பினரெவரும், கொடுக்கப்பட்டவொரு விடயத்தில் அதே விளையாட்டு வீரரை உட்படுத்துகின்ற ஏதேனும் நோபவி விண்ணப்பத்தை, பெறுபேறுகள் முகாமை முடிபை, முதற் சந்தர்ப்பத்தை அல்லது மேன்முறையீட்டை முன்னர் கவனத்துட்கொண்டிருத்தலாகாது.

(4) இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாம், இஊபபமு அல்லது ஏதேனும் மூன்றாந்திறத்தவரிடமிருந்தான தலையீடின்றி, கேட்பு மற்றும் முடிபுசெய்தற் செய்முறையை நடாத்துவதற்கான நிலைமையிலிருத்தல் வேண்டும்.

(5) ஒரு வழக்கைக் கேட்பதற்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், எத்தகையதுமான எக்காரணத்துக்காக வேனும் அவ்வழக்கைக் கேட்பதற்கு விரும்பாதவராக அல்லது இயலாதவராக இருப்பின், அமைச்சர் மாற்றாளொருவரை நியமிக்கலாம் அல்லது புதியவொரு கேட்புக் குழாத்தை நியமிக்கலாம்.

(6) இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாம், அதன் தனித்தற்றுணிபில், குழாத்துக்கு உதவுவதற்கு அல்லது மதியுரையளிப்பதற்கு நிபுணரொருவரை நியமிக்க முடியும்.

(7) சர்வதேசச் சம்மேளனம், தேசியச் சம்மேளனம் அல்லது தேசிய ஒலிம்பிக் குழு வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவராக (அல்லது திறத்தவர்களாக) இராதிருப்பின், மற்றும் உஊபபமு ஆனது, அவதானிப்பாளரொருவராக இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் கேட்புகளுக்கு வருகைதருவதற்கு ஒவ்வொன்றும் உரிமைகொண்டுள்ளது.

(8) எழுபதாம் விதியைப் பின்பற்றிய கேட்புகள் இயன்றளவுவரை துரிதமானமுறையில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கேட்புகள் துரிதப்படுத்தப்பட்ட அடிப்படையில் நடாத்தப்படலாம்.

**இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் வழக்குநடவடிக்கைகள்**

72. (1) இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் வழக்கு நடவடிக்கைகள், பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் உறுப்புரைகள் 8,9 மற்றும் 10 இல் விவரிக்கப்பட்ட நெறிகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் உறுப்பினரும், வெளிப்படுத்துகையில் வெளிக்காட்டப்பட்ட அந்தச் சூழ்நிலைகள்தவிர, திறத்தவர்களுள் எவரினதும் நோக்கில் அவரின் பாரபட்சமின்மையைக் கேள்விக்குட்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் எவற்றையும் அவர் அல்லது அவள் அறிந்திருக்கவில்லையென்ற வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் அவரது/ அவளது வழக்கை முன்வைத்தல் வேண்டும் என்பதுடன் பிரதிவாதித் திறத்தவர் அல்லது திறத்தவர்கள், பதிலிறுத்து அவரது/அவளது/அவர்களது வழக்கை (வழக்குகளை) முன்வைத்தலும் வேண்டும்.

(4) எவரேனும் திறத்தவர் அல்லது அவரது/ அவளது பிரதிநிதி, அறிவிப்பின்பின்னர் கேட்பொன்றுக்கு வருகைதரத் தவறினால், கேட்பானது எவ்வாறாயினும் முன்னெடுக்கப்படலாம்.

(5) ஒவ்வொரு திறத்தவரும், அத்திறத்தவரின் சொந்தச் செலவில், சட்டத்தரணியினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஒவ்வொரு திறத்தவரும், அத்திறத்தவரின் செலவில், கேட்பில் உரைபெயர்ப்பாளரொருவரை அமர்த்துவதற்கான உரிமையைத் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) வழக்குநடவடிக்கைகளுக்கான ஒவ்வொரு திறத்தவரும், இயைபான சான்றை அணுகுவதற்கும் முன்வைப்பதற்கும், எழுத்திலான மற்றும் வாய்மொழிமூலமான சமர்ப்பணங்களைச் சமர்ப்பிப்பதற்கும், சாட்சிகளை அழைப்பதற்கும் விசாரணை செய்வதற்குமான உரிமையைக் கொண்டுள்ளார்.

**இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபுகள்**

73. (1) கேட்பின் முடிவில், அல்லது அதன்பின்னர் உடனடியாக, இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாம், பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் 9 ஆம் உறுப்புரையின் நெறிகளுக்கு மதிப்பளிக்கின்ற எழுத்திலான, தேதியிடப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட முடிபொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) அதிகபட்ச இயல்திறத் தடைவிதிப்பு ஏன் விதிக்கப்படவில்லையென்பதற்கான நியாயப்படுத்துகையுட்பட (ஏற்புடையற் பாலதாயின்), முடிபுக்கான மற்றும் விதிக்கப்பட்ட ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கான முழுக்காரனங்களையும் முடிபானது குறிப்பானமுறையில் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) முடிபானது, 74 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடன் விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, அல்லது அவரது அல்லது அவளது தேசியச் சம்மேளனத்திற்கு மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு இஊபபமு வினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) முடிபுக்கெதிராக 73 ஆம் விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மேன்முறையீடுசெய்யப்படலாம் என்பதுடன் அது 86 ஆம் விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகப் பகிரங்கமாக வெளிக்காட்டவும்படலாம்.

**மேன்முறையீடுசெய்வதற்கு உரித்துடைய ஆட்கள்**

74. (1) விதி 70 (2) இன்கீழான வழக்குகளில், பின்வரும் திறத்தவர்கள் விநநீக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபின் விடயமாகவுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள்:

(ஆ) எந்த வழக்கில் முடிபு அளிக்கப்பட்டதோ அந்த வழக்குக்கான மற்றைய திறத்தவர்

(இ) இயைபான சர்வதேசச் சம்மேளனம்

(ஈ) இஊபபமு மற்றும் அவ்வாள் வதிகின்ற நாட்டின் அல்லது அவ்வாள் நாட்டினத்தவராக அல்லது உரிமம் வைத்திருப்பவராக உள்ள நாடுகளின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு

(உ) ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான தகவுடைமையைப் பாதிக்கின்ற முடிபுகளுட்பட, அம்முடிபானது ஒலிம்பிக் விளையாட்டுகள் அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடர்பாகப் பயனொன்றைக் கொண்டிருக்கக்கூடியவிடத்து, ஏற்புடையற்பாலவாறு, சர்வதேச ஒலிம்பிக் குழு அல்லது சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு; அத்துடன்

(ஊ) உஊபபமு.

(2) விதி 70 (3) நின்கீழான வழக்குகளில், பின்வரும் திறத்தவர்கள், மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வெண்டும்:-

(அ) எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபின் விடயமாகவுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள்;

(ஆ) எந்த வழக்கில் முடிபு அளிக்கப்பட்டதோ அந்த வழக்குக்கான மற்றைய திறத்தவர்;

(இ) இயைபான சர்வதேசச் சம்ளேனம்;

(ஈ) இஊபபமு மற்றும் (வித்தியாசமாயின்) அந்த ஆள் வதிகின்ற நாட்டின் அல்லது அவ்வாள் ஒரு நாட்டினத்தவராகவுள்ள அல்லது உரிமம் வைத்திருப்பவராகவுள்ள நாடுகளின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு;

(உ) ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான தகவுடைமையைப் பாதிக்கின்ற முடிபுகளுட்பட, அம்முடிபானது ஒலிம்பிக் விளையாட்டுகள் அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடர்பாகப் பயனொன்றைக் கொண்டிருக்கக்கூடிய விடத்து, ஏற்புடையற்பாலவாறு, சர்வதேச ஒலிம்பிக் குழு அல்லது சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு; அத்துடன்

(ஊ) உஊபபமு.

(3) விதி 69 (3) நின்கீழான வழக்குகளுக்காக, உஊபபமு, சர்வதேச ஒலிம்பிக் குழு, சர்வதேச அங்கவீனமுற்ற

ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு மற்றும் இயைபான சர்வதேசச் சம்மேளனம், இஊபபமு வின் மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபு தொடர்பில் விநநீ க்கு மேன்முறையீடுசெய்வதற்கான உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஒரு மேன்முறையீட்டைக் கோப்பிடுகின்ற எவரேனும் திறத்தவர், எந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பிடமிருந்து இயைபான எல்லாத் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு விநநீயிடமிருந்து உதவிபெற உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் விநநீ அவ்வாறு பணித்தால் தகவலானது வழங்கப்படுதலும் வேண்டும்.

**அறிவிப்பதற்கான கடமை**

75. ஏதேனும் விநநீ மேன்முறையீட்டுக்கான எல்லாத் திறத்தவர்களும் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடன் உஊபபமு வுக்கும் வேறெல்லாத் திறத்தவர்களுக்கும் மேன்முறையீடு பற்றிய உரியநேரத்திலான அறிவித்தல் கொடுக்கப் பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**தற்காலிக இடைநிறுத்துகையின் விதிப்புக்கெதிரான மேன்முறையீடு**

76. இதன்கண்ணுள்ள வேறேதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒரு தற்காலிக இடைநிறுத்துகையின் விதிப்புக் கெதிராக மேன்முறையீடு செய்யக்கூடிய ஒரே ஆள், தற்காலிக இடைநிறுத்துகை எந்த விளையாட்டு வீரரின்மீது அல்லது வேறு ஆளின்மீது விதிக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரராக அல்லது வேறு ஆளாகவுள்ளார்.

**68 ஆம் விதியின்கீழான முடிபுகளுக்கெதிரான மேன்முறையீடு**

77. விதி 68 ஐப் பின்பற்றி இஊபபமு வினாலான ஏதேனும் முடிபுக்கெதிராக விநநீ க்கு அல்லது தேசியச் சம்மேளனத்துக்கு அல்லது வேறு குழுவுக்குப் புறநீங்கலானமுறையில் மேன்முறையீடு செய்யப்படலாம்.

**எதிர் மேன்முறையீடுகளும் வேறு அடுத்துப்பின்னரான மேன்முறையீடுகளும் அனுமதிக்கப்படுதல்**

78. சட்டக்கோவையின் கீழ் விநநீக்குக் கொணரப்பட்ட வழக்குகளில் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனும் பிரதிவாதியினாலான எதிர் மேன்முறையீடுகளும் வேறு அடுத்துப்பின்னரான மேன்முறையீடுகளும் குறிப்பானமுறையில் அனுமதிக்கப்படுகின்றன. விதி 69 இன் கீழ் மேன்முறையீடு செய்வதற்கான எவரேனும் திறத்தவர், மிகப்பிந்தியதாகத் திறத்தவரின் மறுமொழியுடன் ஓர் எதிர் மேன்முறையீட்டை அல்லது அடுத்துப்பின்னரான மேன்முறையீடொன்றைக் கோப்பிடுதல் வேண்டும்.

**இஊபபமு உரியநேரத்திலான முடிபை அளிப்பதற்குத் தவறுதல்**

79. குறிப்பிட்டவொரு வழக்கில், இஊபபமு ஆனது, உஊபபமு வினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான காலக்கெடுவினுள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டதாவென்பது தொடர்பில் முடிபொன்றை அளிப்பதற்குத் தவறுமிடத்து, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லையென இஊபபமு முடிபொன்றை அளித்துள்ளதென்றாற்போன்று நேரடியாக விநநீ க்கு மேன்முறையீடு செய்வதற்கு அது விருப்புத்தெரிவிக்கலாம். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டதென்றும் விநநீ க்கு நேரடியாக மேன்முறையீடு செய்வதற்கு விருப்புத்தெரிவித்ததில் உஊபபமு நியாயமானமுறையில் செயலாற்றியதென்றும் விநநீ கேட்புக்குழாம் தீர்மானித்தால், அப்போது, மேன்முறையீட்டை நடாத்துவதில் உஊபபமு வின் செலவுதொகைகளும் சட்டத்தரணியின் கட்டணங்கள் இஊபபமு வினால் உஊபபமு வுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

**நோபவி க்கள் தொடர்பான மேன்முறையீடுகள்**

80. நோபவி முடிபுகளுக்கெதிராக 17 முதல் 22 வரையிலான விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகப் புறநீங்கலான முறையில் மேன்முறையீடு செய்யப்படலாம்.

**மேன்முறையீட்டின் முடிபுகள்பற்றிய அறிவிப்பு**

81. இஊபபமு ஆனது, மேன்முறையீட்டின் முடிபை விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு மற்றும் 84 ஆம் விதியின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக 74 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கு உரித்துடையனவாக இருந்திருக்கக்கூடிய ஏனைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு முடிபை உடனடியாக வழங்குதலும் வேண்டும்.

**மேன்முறையீடுகளைக் கோப்பிடுவதற்கான காலம்**

*82. (1)* விநநீக்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கான காலம், ஏதேனும் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்கின்ற திறத்தவரினால் முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு (21) நாட்களாதல் வேண்டும்.

(2) மேன்முறையீடு செய்வதற்கு உரித்துடையவராகவுள்ள ஒரு திறத்தவரினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடுகள் சம்பந்தமாக விதி 82(1) ஏற்புடையதாதல் வேண்டுமென்பதுடன் எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபுக்கு இட்டுச்சென்ற வழக்குநடவடிக்கைகளுக்கான திறத்தவராக இராதவருக்கு ஏற்புடையதாதலுமாகாது:-

(அ) முடிபுபற்றிய அறிவித்தலிலிருந்து பதினைந்து (15) நாட்களினுள், அத்தகைய திறத்தவர்/ திறத்தவர்கள், பெறுபேறுகள் முகாமை அதிகாரத்தைக்கொண்டிருந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பிடமிருந்து முடிபுதொடர்பிலான முழு வழக்குக் கோப்பினதும் பிரதியொன்றைக் கோருவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகையவொரு கோரிக்கை பதினைந்து (15) நாட்காலப்பகுதியினுள் செய்யப்படின், அப்போது, அத்தகைய கோரிக்கையைச் செய்கின்ற திறத்தவர், விநநீ க்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கு, கோப்புப் பெறப்பட்டதிலிருந்து இருபத்தொரு (21) நாட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலேயுள்ளது எவ்வாறிருப்பினும், உஊபபமு வினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடொன்றுக்கான கோப்பிடுதற் காலக்கெடு மேன்முறையீடு செய்வதற்கு உரிமைகொண்டுள்ள வேறெவரேனும் திறத்தவர் எந்தக் கடைசி நாளன்று மேன்முறையீடு செய்திருக்கக்கூடுமோ அந்த நாளுக்குப்பின்னர் இருபத்தொரு (21) நாட்களுக்கு அல்லது முடிபு தொடர்பான பூரணமான கோப்பு உஊபபமு வினால் பெறப்பட்ட பின்னர் இருபத்தொரு (21) நாட்களுக்குப் பிந்தியதாகவிருத்தல் வேண்டும்.

***விதி 69 (3) றின்கீழான மேன்முறையீடுகள்***

*83. (1)* இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் மேன்முறையீட்டுக் குழாத்துககு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கான காலம், மேன்முறையீடுசெய்கின்ற திறத்தவரினால் அம்முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு (21) நாட்களாதல் வேண்டும்.

(2) மேன்முறையீடு செய்வதற்கு உரித்துடையவராகவுள்ள ஒரு திறத்தவரினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடுகள் சம்பந்தமாக விதி 83(1) ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால் மேன்முறையீட்டுக்கு அமைந்ததாகவுள்ள முடிபுக்கு இட்டுச்சென்ற வழக்கு நடவடித்தைகளுக்கு ஒரு திறத்தவராகவிராதவருக்கு ஏற்புடையதாதலாகாது:-

(அ) முடிபுபற்றிய அறிவித்தலிலிருந்து பதினைந்து (15) நாட்களினுள், அத்தகைய திறத்தவர்/ திறத்தவர்கள், பெறுபேறுகள் முகாமை அதிகாரத்தைக் கொண்டிருந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பிடமிருந்து முடிபுதொடர்பிலான முழு வழக்குக் கோப்பினதும் பிரதியொன்றைக் கோருவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்: அத்துடன்.

(ஆ) அத்தகையவொரு கோரிக்கை பதினைந்து (15) நாட்காலப்பகுதியினுள் செய்யப்படின், அப்போது, அத்தகைய கோரிக்கையைச் செய்கின்ற திறத்தவர், தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்குக் கோப்பு பெறப்பட்டதிலிருந்து இருபத்தொரு (21) நாட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலேயுள்ளது எவ்வாறிருப்பினும், உஊபபமு வினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடொன்றுக்கான கோப்பிடுதற் காலக்கெடு, மேன்முறையீடு செய்வதற்கு உரிமைகொண்டுள்ள வேறெவரேனும் திறத்தவர் எந்தக் கடைசி சான்று மேன்முறையீடு செய்திருக்கக்கூடுமோ அந்த நாளுக்குப்பின்னர் இருபத்தொரு (21) நாட்களுக்குப் பிந்தியதாக அல்லது முடிபு தொடர்பான பூரணமான கோப்பு உஊபபமு வினால் பெறப்பட்டபின்னர் இருபத்தொரு (21) நாட்களுக்குப் பின்னராகவிருத்தல் வேன்டும்.

**அந்தரங்கத்தன்மையும் அறிக்கையிடுதலும்**

*84. (1)* ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை விளையாட்டு வீரர்களுக்கு அல்லது வேறு ஆட்களுக்கெதிராத் துணிவுரைக்கப்படுகின்றதென்ற அவர்களுக்கான அறிவித்தல், 28 ஆம், 83 ஆம் விதிகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக இடம்பெறுதல் வேண்டும்.

(2) இஊபபமு விலிருந்தும், சர்வதேசச் சம்மேளனத்திலிருந்தும், உஊபபமு விலிருந்தும் வித்தியாசப்படின், விளையாட்டு வீரரின்அல்லது வேறு தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின்மீறுகையினது துணிவுரை பற்றிய அறிவித்தல், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆளுக்கான அறிவித்தல் கொடுக்கப்படும் அதேவேளையில், 28 ஆம், 83 ஆம் விதிகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவளறாக இடம்பெறுதல் வேண்டும்.

(3) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய அறிவிப்பு, விளையாட்டு வீரரின் அல்வது வேறு ஆளின் பெயர், நாடு, விளையாட்டு மற்றும் விளையாட்டினுள்ளான ஒழுக்காறு, விளையாட்டு வீரரின் போட்டி மட்டம், பரீட்சிப்பானது போட்டியின்போதோ அல்லது போட்டியில் இல்லாதபோதோ, மாதிரிச் சேகரிப்பின் தேதி, ஆய்வுகூடத்தினால் அறிக்கையிடப்பட்ட பகுப்பாய்வுசார் பெறுபேறு, மற்றும் பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தினாலும் பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தினாலும் தேவைப்படுத்தப்பட்டவாறான வேறு தகவல் மற்றும் மீறப்பட்ட விதி அத்துடன் துணிவுரைக்கப்பட்ட மீறுகையின் அடிப்படை என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) விதி 83 (1) றைப் பின்பற்றி ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய அறிவித்தலை விளைவித்திராத புலனாய்வுகள் தொடர்பிற்றவிர, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பானது, இஊபபமு, சர்வதேசச் சம்மேளனம் மற்றும் உஊபபமு விலிருந்து வித்தியாசப்படிண், 29, 38, 69 என்னும் விதிகளைப் பின்பற்றி நடாத்தப்பட்ட ஏதேனும் பரிசீலனையின் அல்லது வழக்கு நடவடிக்கைகளின் நிலைமை மற்றும் கண்டறிகைகள் தொடர்பில் கிரமமானமுறையில் நாளதுவரையாக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விடயத்தைத் தீர்த்துவைத்தமையை விளக்குகின்ற உடனடியான எழுத்திலான நியாயப்படுத்தப்பட்ட விளக்கம் அல்லது முடிபு ஒன்று அவற்றுக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

(5) பெறுகின்ற ஒழுங்கமைப்புகள், 86 ஆம் விதியினால் அனுமதிக்கப்பட்டவாறு இஊபபமு பகிரங்க வெளிவிடுகையைச் செய்யும்வரை, அறிவதற்கான தேவையுள்ள (ஏற்புடையதற்பாலதான தேசிய ஒலிம்பிக்குழு, தேசியச் சம்மேளனம் மற்றும் ஓர் ஆட்டக்குழு விளையாட்டில் ஆட்டக்குழுவிலுள்ள தோதான ஆளணியினர் என்போரை உள்ளடக்கவேண்டிய) அவ்வாட்கள்தவிர இத்தகவலை வேறெவரேனுமாளுக்கு வெளிவிடுதலாகாது.

(6) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகைகள், இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகைகள் மற்றும் வேறு துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பாதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் சம்பந்தமான தகவல், அத்தகைய தகவல் 85 ஆம் விதிக்கிணங்கப் பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படும்வரை அந்தரங்கமானதாக வைத்திருக்கப்படுவதனை இஊபபமு உறுதிப்படுத்துதல் வேண்டும். இஊபபமு வின் எவரேனும் ஊழியர்கள் (நிரந்தரமான அல்லது வேறுவகையான), ஒப்பந்தக்காரர்கள், முகவர்கள், ஆலோசகர்கள்மற்றும்கையளிக்கப்பட்டமூன்றாந்திறத்தவர்கள்அந்தரங்கத்தன்மைபற்றிமுழுமையாகவலுவுறுத்தப்படற்பாலதான ஒப்பந்தஞ்சார் கடமைக்கும் அத்தகைய அந்தரங்கமான தகவலின் முறையீனமான அத்துடன்/அல்லது அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகையைப் புலனாய்வு செய்வதற்காகவும் அது தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கையெடுப்பதற்காகவும், முழுமையாக வலுவுறுத்தப்படற்பாலனவான நடவடிக்கைமுறைகளுக்கும் அமைந்தவர்களாகவிருப்பதனை அது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை அல்லது தகவின்மை மீறுகைகள் அல்லது தற்காலிக இடைநிறுத்துகை முடிபுகள் பற்றிய அறிவித்தலும் கோப்புகளுக்கான கோரிக்கையும்.**

85. (1) விதி 36, 40, 48, 49, 51, 63 அல்லது 80 என்பவற்றைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான விதியின் மீறுகை பற்றிய முடிபுகள் அல்லது தகவின்மை அல்லது தற்காலிக இடைநிறுத்துகை மீறுகைகளுடன் தொடர்புபட்ட முடிபுகள், ஏற்புடையதற்பாலனவாயின், அதிகபட்ச இயல்திறத் தடைவிதிப்பு ஏன் விதிக்கப்படவில்லை என்பதற்கான நியாயப்படுத்துகையொன்று உட்பட, முடிபுக்கான முழுக் காரணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும். முடிபானது ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் இல்லாதவிடத்து, முடிபுபற்றி ஆங்கில அல்லது பிரெஞ்சு மொழிச் சுருக்கமொன்றையும் ஆதாரப்படுத்தும் காரணங்களையும் வழங்குதல் வேண்டும்.

(2) விதி 85 (1) றைப் பின்பற்றிப் பெறப்பட்ட முடிபொன்றுக்கெதிராக மேன்முறையீடுசெய்வதற்கான உரிமையொன்றைத் கொண்டுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, அதனைப் பெற்றதிலிருந்து பதினைந்து (15) நாட்களினுள், அம்முடிபுபற்றிய முழு வழக்குக்கோப்பினதும் பிரதியொன்றைக் கோரலாம்.

**பகிரங்க வெளிவிடுகை**

86. (1) உறுப்புரை 84 (2) டுக்கிணங்க விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்குப் பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க மற்றும் ஏற்புடையதற்பாலனவான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளபின்னர் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி, தடைசெய்யப்பட்ட

பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறைபற்றி மற்றும் சம்பந்தப்பட்ட மீறுகையின் தன்மைபற்றி அத்துடன் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒரு தற்காலிக இடைநிறுத்துகைக்கு அமைந்தவராகவுள்ளாராவென்பது பற்றி அறிவிக்கப்படும் எவரேனும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் ஆளடையாளம், இஊபபமு வினால் பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படலாம்.

(2) விதி 70 (2) அல்லது விதி 70 (3) என்பவற்றின்கீழான மேன்முழறயீட்டு முடிபில் தீர்மானிக்கப்பட்டபின்னர் அல்லது அத்தகைய மேன்முறையீடு விட்டுக்கொடுக்கப்பட்டபின்னர், அல்லது 37 ஆம் விதிக்திணங்கவுள்ள கேட்பொன்று விட்டுக்கொடுக்கப்பட்டபின்னர், அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய துணிவுரை உரியநேரத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டபின்னர், அல்லது விதி 52 இன்கீழ் அக்கருமம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளபின்னர், அல்லது விதி 63 இன்கீழ் புதியவொரு தகவின்மைக் காலப்பகுதி, அல்லது கடிந்துரை விதிக்கப்பட்டுள்ளபின்னர் இருபது (20) நாட்களுக்குப் பிந்தாமல் இஊபபமு ஆனது, விளையாட்டு, மீறப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி, மீறுகையைப் புரிகின்ற விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் பெயர், சம்பந்தப்படும் தடையெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை, மற்றும் விதிக்கப்பட்ட விளைவு என்பனவுட்பட, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கருமம் கையாண்டு தீர்க்கப்பட்டமையைப் பகிரங்கமானமுறையில் வெளிவிடுதல் வேண்டும். இஊபபமு, மேலே விபரிக்கப்பட்ட தகவலுட்பட, ஊக்கு கதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் சம்பந்தமான மேன்முறையீட்டு முடிபுகளின் பெறுபேறுகளைபும் இருபது (20) நாட்களினுள் பகிரங்கமானமுறையில் வெளிவிடுதலும் வேண்டும்.

(3) விதி 70 (2) அல்லது 70 (3) இன்கீழான மேன்முறையீட்டு முடிபொன்றில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றுபுரியப்பட்டுள்ளதெனத்தீர்மானிக்கப்பட்டபின்னர் அல்லது அத்தகையகேட்புவிட்டுக்கொடுக்கப்பட்டுள்ள விடத்து, விதி 8 இற்கிணங்கவுள்ள ஒரு கேட்பில், அல்லது ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய துணிவுரை உரியநேரத்தில் வேறுவகையாகச் சவாலுக்குட்படுத்தப்பட்டிராத பின்னர், அல்லது அக்கருமம் விதி 51 இன் கீழ் தீர்த்துவைக்கப்பட்டுள்ள பின்னர், இஊபபமு, அத்தகைய தீர்மானத்தை அல்லது முடிபைப் பதிரங்கப்படுத்தலாமென்பதுடன் அக்கருமம்பற்றிப் பகிரங்கமான முறையில் கருத்துரைக்கலாம்.

(4) வினையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரியவில்லையென ஒரு கேட்பின் அல்லது மேன்முறையீட்டின்பின்னர் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விடயத்தில், அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதென்ற நிகழ்வு பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படலாம். ஆயின், முடிபின் விடயமாகவுள்ள விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் சம்மதத்துடன் தவிர, முடிபும் அடிப்படை நிகழ்வுகளும் பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படுதலாகாது. அத்தகைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இஊபபமு நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். சம்மதம் பெற்றுக்கொள்ளப்படின், இஊபபமு அம்முடிபை அதன் முழுமையில் அல்லது விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட படிவத்தில் பகிரங்கமானமுறையில் வெளிவிடுதல் வேண்டும்.

(5) இஊபபமு வின் இணையத்தளதின்மீது தேவைப்பட்ட தகவலை இடுவதன்முலம் மற்றும் அத்தகவலை ஒரு (1) மாதத்தின் நீண்ட பகுதிக்கு அல்லது ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதியின்போது விட்டுவைப்பதன் மூலம் வெளியிடுகையானது குறைந்தப்பட்சத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(6) விதி 86(1) மற்றும் 86 (3) றில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, தேசியச் சம்மெளனம் அல்லது உஊபபமு தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடம் எதுவும் அல்லது அத்தகைய ஏதேனும் குழுவின் எவரேனும் அலுவலர், விளையாட்டு வீரருக்கு, வேறு ஆளுக்கு அல்லது அவர்களுடன் சேர்ந்து செல்வோருக்கு அல்லது வேறு பிரதிநிதிகளுக்கு ஏற்றிக்கூறப்பட்ட, அல்லது அவர்களினால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையின்மீதான பகிரங்கக் கருத்துரைகளுக்குப் பதிலிறுக்கும்வகையில்தவிர, (செய்முறை மற்றும் விஞ்ஞானத்தின் போது விவரணத்துக்கெதிராகவுள்ளவாறு முடிபுறாதுள்ள ஏதேனும் வழக்கின் குறித்த நிகழ்வுகளின்மீது பகிரங்கமானமுறையில் கருத்துரை தெரிவித்தலாகாது.

(7) விதி 86 (2) இல் தேவைப்படுத்தப்பட்டவாறான பணிப்பாணைமுறையிலான பகிரங்க வெளிவிடுகை, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளவரெனக் காணப்பட்டுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பராயடையாதவராக, பாதுகாக்கப்பட்ட ஆளாக அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரராக இருக்குமிடத்து,

தேவைப்படுத்தப்படுதலாகாது. ஒரு பராயமடையாதவரை, பாதுகாக்கப்பட்ட ஆளை அல்லது பொழுதுபோக்குசார் விளையாட்டு வீரரைச் சம்பந்தப்படுத்துகின்ற வழக்கொன்றில் ஏதேனும் விருப்புத்தெரிவுசார் பகிரங்க வெளிவிடுகை அவ்வழக்கின் நிகழ்வுகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் விகிதாசாரப்படியானதாகவிருத்தல் வேண்டும்.

***பள்ளி விபரஞ்சார் அறிக்கையிடுகை***

*87.* இஊபபமு ஆனது, உஊபபமு வுக்கு வழங்கப்படும் பிரதியொன்றுடன், அதன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் பற்றிய பொதுவான புள்ளிவிபரஞ்சார் அறிக்கையைக் குறைந்தபட்சம் வருடாந்தமேனும் பகிரங்கமான முறையில் வெளியிடுதல் வேண்டும். பரீட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விளையாட்டு வீரரினதும் பெயரையும் ஒவ்வொரு பரீட்சிப்பினதும் தேதியையும் காட்டுகின்ற அறிக்கைகளையும் இஊபபமு வெளியிடலாம்.

***ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுச் கட்டுப்பாட்டுத் தகவல் தரவுத்தளமும் இணங்கியொழுகுகையைக் கண்காணித்தலும்***

*88.(1)* உஊபபமு அதன் இணங்கியொழுகுகைக் கண்காணிப்பு வகிபங்கைப் புரிவதற்கும், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளிடையே வளங்களின் பயனுள்ள பயன்பாட்டையும் ஏற்புடையற்பாலதான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுத் தகவலைப் பகிர்வதனையும் உறுதிப்படுத்துவதற்கும், பின்வருவனவுட்பட, பின்வரும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாடு தொடர்பான தகவலை ஊபபநிமுமு வினூடாக உஊபபமு வுக்கு அறிக்கையடுதல் வேண்டும்:

(அ) சர்வதேசமட்ட விளையாட்டு வீரர்களுக்காகவும் தேசியமட்ட விளையாட்டு வீரர்களுக்காகவும் விளையாட்டு வீரர் உயிரியற்சார் நடைமுறைத் தரவு.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட பரீட்சிப்புக் குழுக்களிலுள்ளோருட்பட விளையாட்டு வீரர்களுக்காக எங்குள்ளாரென்பதுபற்றிய தகவல்,

(இ) நோபவி முடிபுகள், அத்துடன்

(ஈ) பெறுபேறுகள் முகாமை முடிபுகள்.

*(2)* ஒருங்கிணைக்கப்பட்ட பரீட்சிப்புப் பகிர்வுத்திட்டமிடுதலை வசதிப்படுத்துவதற்கும், பல்வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளினால் பரீட்சித்தலில் அவசியமற்ற இரட்டிப்பைத் தவிர்ப்பதற்கும், விளையாட்டு வீரர் உயிரியற்சார் நடைமுறைத் தோற்றுருவங்கள் நாளதுவரையாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும், இஊபபமு, பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்தில் அடங்கியுள்ள தேவைப்பாடுகளுக்கும் காலக்கெடுக்களுக்கும் இணங்க ஊப்பநிமுமு வினுள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுப் படிவங்களைப் பதிவதன்மூலம் உஊபபமு வுக்குப் போட்டியின்போதான மற்றும் போட்டியில் இல்லாதபோதான எல்லாப் பரீட்சிப்புகளையும் அறிக்கையிடுதல் வேண்டும்.

*(3)* நோபவி களுக்கான உஊபபமு வின் மேற்பார்வை மற்றும் மேன்முறையீட்டு உரிமைகளை வசதிப்படுத்துவதற்கு, இஊபபமு ஆனது, நோய்தீர்க்கும் பயன்பாட்டு விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் அடங்கியுள்ள தேவைப்பாடுகளுக்கும் காலக்கெடுக்களுக்கும் இணங்க ஊபபநிமுமு வைப் பயன்படுத்தி எல்லா நோபவி விண்ணப்பங்களையும், முடிபுகளையும், ஆதாரப்படுத்தும் ஆவணப்படுத்துகையையும் அறிக்கையிடுதல் வேண்டும்.

*(4)* பெறுபேறுகள் முகாமைக்கான உஊபபமு வின் மேற்பார்வை மற்றும் மேன்முறையீட்டு உரிமைகளை வசதிப்படுத்துவதற்கு, இஊபபமு ஆனது, பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தில் உருவரையப்பட்ட தேவைப்பாடு களுக்கும் காலக்கெடுக்களுக்கும் இணங்கப் பின்வரும் தகவலை ஊபபநிமுமு வினுள் அறிக்கையிடுதல் வேண்டும்.

(அ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள்பற்றிய அறிவிப்புகளும் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகைகளுக்கான தொடர்புபட்ட முடிபுகளும்:

(ஆ) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிக்கைகள் அல்லாத வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளுக்கான அறிவிப்புகளும் தொடர்புபட்ட முடிபுகளும்:

(இ) எங்குள்ளாரென்பது பற்றிய தவறுதல்கள்: அத்துடன்

(ஈ) ஒரு தற்காலிக இடைநிறுத்துகையை விதிக்கின்ற, நீக்குகின்ற அல்லது மீள இடுகின்ற ஏனும் முடிபு.

(5) இவ்விதியில் விவரிக்கப்பட்ட தகவல், தோதானவிடத்தும், ஏற்புடையற்காலனவான விதிகளுக்கிணங்கவும், விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கும் மற்றும் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் அத்துடன் விளையாட்டு வீரர்மீது பரீட்சித்தல் அதிகாரங்கொண்ட வேறெவையேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கும் கிடைக்கத்தக்கதாக்கப்படும்.

**தரவின் அந்தரங்கத்தன்மை**

89. (1) இஊபபமு ஆனது, விளையாட்டு வீரர்களும் வேறு ஆட்களும் தொடர்பான சொந்தத் தகவலை, சட்டக்கோவையின் கீழும், அதன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான செயற்பாடுகளை, (குறிப்பானமுறையில் அந்தரங்கத்தன்மையையும் சொந்தத் தகவலையும் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமமுட்பட) சர்வதேச நியமங்களின்கீழும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழும் ஏற்புடையற்பாலதான சட்டத்துக்கு இணங்கியொழுகவும் நடாத்துவதற்கு அவசியமான விடத்தும் தோதானவிடத்தும் சேகரிக்கலாம், தேக்கிவைக்கலாம், செய்முறைப்படுத்தலாம் அல்லது வெளிவிடலாம்.

(2) மேற்போந்தவற்றை வரையறுக்காமல், இஊபபமு ஆனது:-

(அ) ஒரு செல்லுபடியான சட்ட ஏதுக்கிணங்கச் சொந்தத் தகவலை மட்டுமே செய்முறைப்படுத்துதல் வேண்டும்:

(ஆ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கமைந்த எவரேனும் பங்குபற்றுனருக்கு அல்லது ஆளுக்கு, ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கும் அந்தரங்கத்தன்மையையும் சொந்தத் தகவலையும் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமத்துக்கும் இணங்கியொழுகுகின்ற ஒரு முறையிலும் படிவத்திலும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பட்டிற்கெதிரான விதிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக அவர்களின் சொந்த தகவல் இஊபபமு வினாலும் வேறு ஆட்களினாலும் செய்முறைப்படுத்தப்படலாமென அறிவித்தல் வேண்டும்.

(இ) எவரேனும் பங்குபற்றுநரின் அல்லது ஆளின் சொந்தத் தகவலை இஊபபமு ( எவரேனும் கையளிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவருட்பட) எந்த மூன்றாந்திறத்தவரான முகவர்களுடன் பகிர்கின்றதோ அந்த எவரேனும் மூன்றாந்திறத்தவரான முகவர்களுடன் பகிர்கின்றதோ அந்த எவரேனும் மூன்றாந்திறத்தவரான முகவர்கள், அத்தகைய தகவலின் தனிப்பட்டதன்மையையும் அந்தரங்கத்தன்மையையும் பாதுகாப்பதற்குத் தோதான தொழிநுட்ப மற்றும் ஒப்பந்தஞ்சார் கட்டுப்பாடுகளுக்கு அமைந்தவர்களாகவுள்ளதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**முடிபுகளை நடைமுறைப்படுத்துதல்**

90. (1) கையொப்பமிடுநரான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால், ஒரு மேன்முறையீட்டுக் குழுவினால் (சட்டக்கோவையின் உறுப்புரை 13.2.2) அல்லது விநீயினால் செய்யப்பட்ட ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய முடிபொன்று, வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவர்களுக்கப்பால் கீழே விவரிக்கப்பட்ட விளைவுகளுடன் இஊபபமு வையும் இலங்கையிலுள்ள ஏதேனும் தேசியச் சம்மேளனத்தையும், ஒவ்வொரு விளையாட்டிலும் ஒவ்வொரு கையொப்பமிடுநரையும் தன்னியக்கமாகவே பிணிப்பதாதல் வேண்டும்.

(அ) ஒரு தற்காலிக இடைநிறுத்துகையை விதிக்கின்ற மேலே விபரிக்கப்பட்ட குழுக்களுள் எவற்றினாலும் எடுக்கப்பட்ட முடிபு (தற்காலிகக் கேட்பு இடம் பெற்றுள்ள பின்னர் அல்லது விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒன்றில் தற்காலிக இடைநிறுத்துகையை ஏற்றுக்கொண்ட பின்னர் அல்லது விதி 33 (1) றுக்கிணங்க முனையப்பட்ட ஒரு தற்காலிகக்கேட்புக்கான, துரிதப்படுத்தப்பட்ட கேட்புக்கான அல்லது துரிதப்படுத்தப்பட்ட மேன்முறையீட்டுக்கான உரிமையை விட்டுக்கொடுத்தபின்னர்) தற்காலிக இடைநிறுத்துகையின்போது எவரேனும் கையொப்பமிடுநரின் அதிகாரத்தினுள்ளான எல்லா விளையாட்டுகளிலும் (விதி 61(1) றில் விபரிக்கப்பட்டவாறு) விளையாட்டு வீரரை அல்லது வேறு ஆளைப் பங்குபற்றுவதிலிருந்து தன்னியக்கமாகவே தடைசெய்கின்றது.

(ஆ) (ஒரு கேட்பு இடம் பெற்றுள்ள பின்னர் அல்லது விட்டுக்கொடுக்கப்பட்ட பின்னர்) ஒரு தகவின்மைக் காலப்பகுதியை விதித்து மேலே விவரிக்கப்பட்ட குழுக்களுள் எவற்றினாலும் செய்யப்பட்ட முடிபு, (விதி 61(1) றில்

விவரிக்கப்பட்டவாறு) தகவின்மைக் காலப்பகுதிக்காக எவரேனும் கையொப்பமிடுநரின் அதிகாரத்தினுள்ளான எல்லா விளையாட்டுகளிலும் பங்குபற்றுவதிலிருந்து விளையாட்டு வீரரை அல்லது வேறு ஆளைத் தன்னியக்கமாகவே தடைசெய்கின்றது.

(இ) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை ஏற்று மேலே விவரிக்கப்பட்ட குழுக்களுள் எவற்றினாலும் செய்யப்பட்ட முடிபு எல்லாக் கையொப்பமிடுநர்களையும் தன்னியக்கமாகவே பிணிக்கின்றது.

(ஈ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக விதி 55 இன்கீழ் பெறுபேறுகளைத் தகைமையற்றனவாக்குவதற்கு மேலே விவரிக்கப்பட்ட குழுக்களுள் எவற்றினாலும் செய்யப்பட்ட முடிபு, அக்குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின்போது எவரேனும் கையொப்பமிடுநரின் அதிகாரத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பெறுபேறுகளையும் தன்னியக்கமாகவே தகைமையற்றதாக்குகின்றது.

(2) இஊபபமு வும் இலங்கையிலுள்ள ஏதேனும் தேசியச் சம்மேளனமும், முடிபுபற்றிய உண்மையான அறிவித்தலை இஊபபமு பெறுகின்ற முன்னைய தேதியன்று அல்லது ஒரு முடிபானது ஊபபநிமுமு வினுள் இடப்படுகின்ற தேதியன்று, ஏதேனும் மேலதிக நடவடிக்கை தேவைப்படாமல், விதி 90 (1) றினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அம்முடிபையும் அதன் விளைவுகளையும் ஏற்றங்கீகரித்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(3) விளைவுகளை இடைநிறுத்துவதற்கு, அல்லது நீக்குவதற்கு ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால், மேன்முறையீட்டுக் குழுவினால் அல்லது விநநீயினால் எடுக்கப்பட்ட முடிபு, முடிபுபற்றிய உண்மையான் அறிவித்தலை இஊபபமு பெறுகின்ற முன்னைய தேதியன்று அல்லது ஒரு முடிபானது ஊபபநிமுமு வினுள் இடப்படுகின்ற தேதியன்று, ஏதேனும் மேலதிக நடவடிக்கை தேவைப்படாமல், இஊபபமு வையும் இலங்கையிலுள்ள ஏதேனும் தேசியச் சம்மேளனத்தையும் பிணிப்பதாதல் வேண்டும்.

(4) எவ்வாறாயினும், விதி 90 (1) இலுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒரு நிகழ்ச்சியின்போது துரிதப்படுத்தப் பட்ட செய்முறையொன்றில் செய்யப்பட்ட பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினாலான ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான் விதியின் மீறுகைபற்றிய முடிபு, பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பின் விதிகள் துரிதப்படுத்தப்படாத நடவடிக்கை முறைகளின் கீழான மேன்முறையீடொன்றுக்கான வாய்ப்பை விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு வழங்கினாலொழிய, இஊபபமு வை அல்லது இலங்கையிலுள்ள தேசியச் சம்மேளனங்களைப் பிணிப்பதாதலாகாது.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளினாலான வேறு முடிபுகளை நடைமுறைப்படுத்துதல்**

91. இஊபபமுவும் இலங்கையிலுள்ள ஏதேனும் தேசியச் சம்மேளனமும், ஒரு தற்காலிகக் கேட்புக்குமுன்னரான ஒரு தற்காலிக இடைநிறுத்துகை அல்லது விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் ஆன ஏற்றுக்கொள்கைபோன்ற, மேலே விதி 90 (1) இல் விவரிக்கப்படாத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளினால் அளிக்கப்பட்ட வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முடிபுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முடிபுசெய்யலாம்.

**ஒரு கையொப்பமிடுநராகவிராத குழுவினால் முடிபுகள் நடைமுறைப்படுத்தப்படுதல்**

92. சட்டக்கோவைக்கான கையொப்பமிடுநராகவிராத குழுவினாலான ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முடிபு, இஊபபமு வினாலும் இலங்கையிலுள்ள ஏதேனும் தேசியச் சம்மேளனத்தினாலும், முடிபானது அக்குழுவின் அதிகாரத்தினுள்ளானதெனக் கொள்ளப்படுகின்றதாகவும் அக்குழுவின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் வேறுவகையாகச் சட்டக்கோவையை ஒத்திருக்கின்றனவாகவும் இஊபபமு கண்டால், நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**வரையறைகள்பற்றிய நியதிச்சட்டம்**

93. ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆளுக்கெதிரான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய வழக்குநடவடிக்கையெதுவும், விதி 28 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி அவருக்கு அல்லது அவளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது அம்மீறுகை ஏற்பட்டதெனத் துணிவுரைக்கப்படும் தேதியிலிருந்து பத்து (10) ஆண்டுகளினுள் அறிவிப்பு வழங்குவதற்கு நியாயமானமுறையில் எத்தனிக்கப் பட்டிருந்தாலொழிய, தொடங்கப்படுதலாகாது.

**கல்வி**

*94. சட்டக்கோவையின் உறுப்புரை 18.2 இனதும் கல்விக்கான சர்வதேச நியமத்தினதும் தேவைப்பாடுகளுக்கிசைய இஊபபமு ஆனது, கல்வியைத் திட்டமிடுதலும், நடைமுறைப்படுத்துதலும் மதிப்பீடுசெய்தலும், மேம்படுத்துதலும் வேண்டும்.*

**தேசியச் சம்மேளனங்களின் மேலதிக வகிபங்குகளும் பொறுப்புகளும்**

*95. (1) இலங்கையின் எல்லாத தேசியச் சம்மெளனங்களும் அவற்றின் உறுப்பினர்களும், சட்டக்கோவைக்கும், சர்வதேச நியமங்களுக்கும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும். இலங்கையின் எல்லாத் தேசிய சம்மேளனங்களும் ஏனைய உறுப்பினர்களும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கான அறிமுகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு இஊபபமு வின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான அதிகாரத்தின்கீழுள்ள விளையாட்டு வீரர்களும் வேறு ஆட்களும் தொடர்பில் (பரீட்சித்தலை நிறைவேற்றுதல் உட்பட) இலங்கையின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை வலுவுறுத்துவதற்காகவும் அவற்றின் அதிகாரத்தையும் பொறுப்பையும் ஏற்றங்கீகரிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை அவற்றின் கொள்கைகளிலும், விதிகளிலும், நிகழ்ச்சித்திட்டங்களிலும் உள்ளடக்குதல் வேண்டும்.*

*(2) இலங்கையின் ஒவ்வொரு தேசியச் சம்மேளனமும், இலங்கை அரசாங்கத்திடமிருந்து அத்துடன்/அல்லது இலங்கைத் தேசிய ஒலிம்பிக் குழுவிடமிருந்து நிதிசார் அத்துடன்/அல்லது வேறு உதவியைப் பெறுகின்ற நிபந்தனையொன்றாக இலங்கையின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் பொது இயல்பை மற்றும் நியதிகளை ஏற்று அவற்றுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.*

*(3) இலங்கையின் ஒவ்வொரு தேசியச் சம்மேளனமும், அவர்களின் உறுப்பினர்களைப் பிணிக்கின்ற விளையாட்டு விதிகளின் பாகமாக ஒன்றில் நேரடியாக அல்லது அதன் ஆளும் ஆவணங்கள், அமைப்புவிதி அத்துடன்/அல்லது விதிகளைக் குறிப்பீடுசெய்வதன்மூலம் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைக் கூட்டிணைத்தல் வேண்டும். தேசியச் சம்மேளனம், அதன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான அதிகாரத்தின்கீழுள்ள விளையாட்டு வீரர்களும் வேறு ஆட்களும் தொடர்பில் அத்தகைய விதிகளை நேரடியாக வலுவுறுத்தலாம்.*

*(4) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் அவற்றின் ஆளும் ஆவணங்களினுள்ளும் விளையாட்டு விதிகளினுள்ளும் கூட்டிணைப்பதன் மூலமும் தேசியச் சம்மேளனங்கள் அப்பணியில் இஊபபமு வுடன் ஒத்துழைத்தலும் அதற்கு ஆதரவளித்தலும் வேண்டும். அவற்றின் அதிகாரத்தின்கீழுள்ள ஆட்களின்மீது தடைவிதிப்புகளை விதிக்கின்ற முடிபுகளுட்பட, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைப் பின்பற்றிச் செய்யப்பட்ட முடிபுகளை அவை ஏற்றங்கீகரித்தலும், அவற்றுக்கு அமைந்தொழுகுதலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் வேண்டும்.*

*(5) இலங்கையின் தேசியச் சம்மேளனங்கள் எல்லாம் மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றின் மூலம் சட்டக்கோவைக்கும், சர்வதேச நியதங்களுக்கும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கும் இணங்கியொழுகுவதனை வலுவுறுத்துவதற்கு நேரடியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

*(அ) அவற்றின் சர்வதேசச் சம்மேளனத்தின் ஆவணப்படுத்தப்பட்ட அதிகாரத்தின்கீழும் பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்துக்கு இணங்கியொழுக மாதிரிகளைச் சேகரிப்பதற்கு இஊபபமு வை அல்லது வேறு மாதிரிச் சேகரிப்பு அதிகாரியைப் பயன்படுத்தியும் மட்டுமே பரீட்சித்தலை நடாத்துதல் :*

*(ஆ) சட்டக்கோவையின் உறுப்புரை 5.2.1 றுக்கிணங்க இஊபபமு வின் அதிகாரத்தை ஏற்றங்கீகரித்தல் மற்றும் அவற்றின் விளையாட்டுக்காகத் தேசியப் பரீட்சித்தல் நிகழ்ச்சித்திட்டத்தை இஊபபமு நடைமுறைப்படுத்துவதற்குத் தோதானவாறு உதவுதல் :*

*(இ) விதி 28(1) றுக்கிணங்க உஊபபமு தராதர அங்கீகாரம்பெற்ற அல்லது உஊபபமு அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடத்தைப் பயன்படுத்திச் சேகரிக்கப்பட்ட எல்லா மாதிரிகளையும் பகுப்பாய்வுசெய்தல்;*

(ஈ) தேசியச்சம்மேளனங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட எனவயேனும் தேசியமட்ட ஊக்குபதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை விடயங்களுக்கு விதி 38(2) டுக்கும் பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்துக்கும் இணங்கத் தொழிற்பாட்டுரீதியில் சுயேச்சையான கேட்புக் குழாத்தினால் நீதித்தீர்ப்பளிக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்துதல்.

(6) ஒரு தேசியச் சம்மேளனத்தினால் அல்லது அதன் உறுப்பு ஒழுங்கமைப்புகளுள் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு போட்டிக்கு அல்லது செய்ற்பாட்டிற்குத் தயாராகின்ற அல்லது அதில் பங்குபற்றுகின்ற எல்லா விளையாட்டு வீரர்களும், அத்தகைய விளையாட்டு வீரர்களுடன் இணைந்துள்ள எல்லா ஆதரிப்பு ஆளணியினரும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுவதற்கும் அத்தகைய பங்குபற்றுகையின் நிபந்தனையொன்றாகச் ச்ட்டக்கோவைக்கு இசைந்தொழுக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பெறுபேறுகள் முகாமை அதிகாரத்துக்கு உட்படுவதற்கும் எல்லா விளையாட்டு வீரர்களையும் தேவைப்படுத்துகின்ற விதிகளைத் தேசியச் சம்மேளனங்கள் எல்லாம் நிலைநாட்டுதல் வேண்டும்.

(7) எல்லாத் தேசியச் சம்மேளனங்களும் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை முன்வைக்கின்ற அல்லது அதுதொடர்பான ஏதேனும் தகவலை இஊபபமு வுக்கும் அவற்றின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் புலனாய்வை நடாத்துவதற்கான அதிகாரத்துடன் ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் நடாத்தப்பட்ட புலனாய்வுகளுடன் ஒத்துழைத்தலும் வேண்டும்.

(8) செல்லுபடியான நியாயப்படுத்துகையின்றித் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அல்லது தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்துகின்ற விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர் இஊபபமு வின் அல்லது தேசியச் சம்மேளனத்தின் அதிகாரத்தின்கீழுள்ள விளையாட்டு வீரர்களுக்கு ஆதரவளிப்பதனைத் தடுப்பதற்கு எல்லாத் தேசியச் சம்மேளனங்களும் ஒழுக்காற்று விதிகளை நிலைநிறுத்திவைத்தல் வேண்டும்.

(9) எல்லாத் தேசியச் சம்மேளனங்களும் இஊபபமு வின் ஒருங்கிணைப்புடன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கல்வியை நடாத்துதல் வேண்டும்.

**இஊபபமு வின் மேலதிக வகிபங்குகளும் பொறுப்புக்களும்**

96. (1) தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் உறுப்புரை 20.5 இல் விபரிக்கப்பட்ட வகிபங்குகளுக்கும் பொறுப்புகளுக்கும் மேலதிகமாக, இஊபபமு ஆனது, சட்டக்கோவையின் உறுப்புரை 24.1.2 டுக்கிணிங்கச் சட்டக் கோவைக்கும் சர்வதேச நியமங்களுக்கும் இஊபபமு வின் இணங்கியொழுகுகைபற்றி உஊபபமு வுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஏற்புடையற்பாலதான சட்டத்துக்கமையவும், சட்டக்கோவையின் உறுப்புரை 20.5.10 துக்கிணங்கவும், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும் அம்சத்தில் சம்பந்தப்பட்டுள்ள இஊபபமு வின் (அத்துடன் நியமிக்கப்படும் கையளிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர்களன்) சபையுறுப்பினர்கள், பணிப்பாளர்கள், அலுவலர்கள், மற்றும் அவ்வூழியர்கள், நேரடியான மற்றும் வேண்டுமென்ற துர்நடத்தைக்காகச் சட்டக்கோவைக்கு இசைந்தொழுகுகின்ற ஆட்களாக இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்பட்டு, இஊபபமு வினால் வழங்கப்பட்ட படிவமொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) ஏற்புடையற்பாலதான சட்டத்துக்கமையவும், சட்டக்கோவையின் உறுப்புரை 20.5.11 றுக்கிணங்கவும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள (அதிகாரமளிக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கல்வி அல்லது புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள்தவிர) எவரேனும் இஊபபமு ஊழியர், அவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவில்லை அல்லது தகவின்மைக் காலப்பகுதிக்கு உட்பட்டிருக்கவில்லை என்றும், சட்டக்கோவைக்கு இணங்கியொழுகவேண்டிய விதிகள் அவருக்கு ஏற்புடையற்பாலனவாக இருந்திருப்பின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையொன்றாக அமைந்திருக்கும் நடத்தையில் முன்னைய ஆறு(6) ஆண்டுகளினுள் நேரடியாக அல்லது வேண்டுமென்று ஈடுபட்டிருக்கவில்லை என்றும் உறுதிப்படுத்தி இஊபபமு வினால் வழங்கப்பட்ட கூற்றொன்றில் கையொப்பமிடல் வேண்டும்.

**விளையாட்டு வீரர்களின் மேலதிக வகிபங்குகளும் பொறுப்புக்களும்**

97. விளையாட்டு வீரர்களின் மேலதிக வகிபங்குகளும் பொறுப்புகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை அறிந்திருத்தலும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும்

(ஆ) எல்லா நேரங்களிலும் மாதிரிச் சேகரிப்புக்காகக் கிடைக்கக்கூடியவர்களாகவிருத்தல் ;

(இ) அவர்கள் உட்செலுத்திப் பயன்படுத்துகின்றவைக்காக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சந்தர்ப்பத்தில் பொறுப்புகளை ஏற்றல் ;

(ஈ) தடைசெய்யப்பட்ட பதார்தங்களையும் தடைசெய்யப்பட்ட முறைகளையும் பயன்படுத்தாதிருப்பதற்கான அவர்களின் கடப்பாட்டையும் பெறப்பட்ட ஏதேனும் மருத்துவச் சிகிச்சை இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை மீறாதிருப்பதனை நிச்சயிப்பதற்கான பொறுப்பெடுப்பதனையும் மருத்துவ ஆளணியினருக்கு அறிவித்தல்;

(உ) விளையாட்டு வீரர் முன்னைய பத்து (10) ஆண்டுகளினுள் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தாரெனக் கையொப்பமிடுநராகவிராத ஒருவரினாலான கண்டறிகையின்மூலமான ஏதேனும் முடிபை இஊபபமு வுக்கும் அவர்களின் சர்வதேசச் சம்மெளனத்துக்கும் வெளிவிடுதல் ;

(ஊ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைப் புலனாய்வுசெய்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தல். எவரேனும் விளையாட்டு வீரர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைப் புலனாய்வு செய்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைப் புலனாய்வு செய்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடன் முழுமையாக ஒத்துழைப்பதற்குத் தவறுதல் இஊபபமு வின் நடத்தைக் கோவையின்கீழ் மீறுகையொன்றை விளைவிக்கலாம்

(எ) இஊபபமு வினாலான அல்லது ஒரு தேசியச் சம்மேளனத்தினாலான அல்லது விளையாட்டு வீரரின்மீது அதிகாரங்கொண்ட வேறேதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினாலான கோரிக்கையின்மேல் அவர்களின் விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரின் ஆளடையாளத்தை வெளிவிடுதல் அத்துடன்

(ஏ) வேறுவகையில் குறுக்கிடுதலாக அமையாத, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கட்டுப்பாட்டு அலுவலர் அலுவலர் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கட்டுப்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள வேறு ஆள் தொடர்பில் விளையாட்டு வீரரினாலான தீங்குவிளைவிளைவிக்கும் நடத்தை, இஊபபமு வின் நடத்தைக் கோவையின்கீழ் துர்நடத்தைக் குற்றச்சாட்டொன்றை விளைவிக்கலாம்.

**விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரின் மேலதிக வகிபங்குகளும் பொறுப்புகளும்**

98. பின்வருவன ஒவ்வொரு விளையாட்டு ஆதரிப்பு ஆளணியினரினதும் வகிபங்கும் பொறுப்புமாதல் வேண்டும்:-

(அ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை அறிந்திருத்தலும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும்

(ஆ) விளையாட்டு வீரர் பரீட்சித்தல் நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒத்துழைத்தல்

(இ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மனப்பாங்குகளை வளர்ப்பதற்கு விளையாட்டு வீரர் விழுமியங்களும் நடத்தையும்மீது அவர்களின் செல்வாக்கைப் பயன்படுத்துதல்

(ஈ) அவர்கள் முன்னைய பத்து (10) ஆண்டுகளினுள் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தனரெனக் கையொப்பமிடுநர் அல்லாதவரொருவரின் கண்டறிகையினாலான ஏதேனும் முடிபை இஊபபமு வுக்கும் அவர்களின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் வெளிவிடுதல்

(உ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைப் புலனாய்வுசெய்கின்ற ஊக்கு பதார்ததப் பயன்பாடிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தல் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான

விதியின் மீறுககளைப் புலனாய்வு செய்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடன் முழுமையாக ஒத்துழைப்பதற்கு எவரேனும் விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரினாலான தவறுதல், இஊபபமு வின் நடத்தைக் கோவையின்கீழ் துர்நடத்தைக் குற்றச்சாட்டொன்றை விளைவிக்கலாம்

(ஊ) செல்லுபடியான நியாயப்படுத்துகையின்றி ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட முறையைப் பயன்படுத்துவதனை அல்லது உடைமையில் வைத்திருப்பதனைத் தவிர்த்தல். அத்தகைய ஏதேனும் பாவனை அல்லது உடைமை, இஊபபமு வின் நடத்தைக் கோவையின்கீழ் துர்நடத்தைக் குற்றச்சாட்டொன்றை விளைவிக்கலாம் அத்துடன்

(எ) வேறுவகையில் குறுக்கிடுதலாக அமையாத, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டு அலுவலர் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டில் சம்பந்தப்பட்ட வேறு ஆள் தொடர்பில் விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரினால் ஏதேனும் தீங்குவிளைவிக்கும் நடத்தையைத் தவிர்தல் அத்தகைய தீங்குவிளைவிக்கும் நடத்தை இஊபபமு வின் நடத்தைக் கோவையின்கீழ் துர்நடத்தைக் குற்றச்சாட்டை விளைவிக்கலாம்.

**இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கமைந்த வேறு ஆட்களின் மேலதிக வகிபங்குகளும் பொறுப்புக்களும்**

99. ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கு அமைந்த வேறு ஆட்களின் வகிபங்குகளும் பொறுப்புக்களும் பின்வருவனவாதல் வேண்டும்

(அ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள்பற்றி அறிந்திருத்தலும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும்

(ஆ) அவர்கள் முன்னைய பத்து (10) ஆண்டுகளினுள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தனரெனக் கையொப்பமிடுநர் அல்லாதவரொருவரின் கண்டறிகையினாலான ஏதேறும் முடிபை இஊபபமு வுக்கும் அவர்களின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் வெளிவிடுதல்

(இ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைப் புலனாய்வுசெய்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தல் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கமைந்த வேறெவரேனுமாள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைப் புலனாய்வுசெய்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடன் முழுமையாக ஒத்துழைக்கத் தவறுதல் இஊபபமு வின் நடத்தைக் கோவையின்கீழ் துர்நடத்தைக் குற்றச்சாட்டை விளைவிக்கலாம்

(ஈ) செல்லுபடியான நியாயப்படுத்துகையின்றி ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையைப் பயன்படுத்தாதிருத்தல் அல்லது உடைமையில் வைத்திராதிருத்தல் அத்துடன்

(உ) வேறுவகையில் குறுக்கிடுதலாக அமையாத, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கட்டுப்பாட்டு அலுவலர் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கட்டுப்பாட்டில் சம்பந்தப்பட்ட வேறு ஆள் தொடர்பில் ஆளொருவரினாலான ஏதேனும் தீங்குவிளைவிக்கும் நடத்தையைத் தவிர்த்தல்

100. இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள், (இதனகத்துப்பின்னர் "பயனுறும் தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ............................ ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும். பயனுறும் தேதிக்கு முன்னர் முடிவுறாதுள்ள கருமங்களுக்கு அவை எதிர்ச்செயலாற்றமுறையில் ஏற்புடையனவாதகாது ஆயின், எவ்வாறாயினும்,

(அ) பயனுறும் தேதிக்குமுன்னர் இடம்பெறுகின்ற ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை, பயனுறும் தேதிக்குப்பின்னர் இடம்பெறுகின்ற மீறுகைகளுக்காக 44 முதல் 64 வரையிலான விதிகளின்கீழான ஏதேனும் தடைவிதிப்பைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக "முதலாவது மீறுகைகளாக" அல்லது "இரண்டாவது மீறுகைகளாக" க் கணிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பயனுறும் தேதியன்றுள்ளவாறு முடிவுறாதுள்ள ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வழக்கும், பயனுறும் தேதிக்கு முன்னர் இடம்பெற்ற ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது அடிப்படையின்மீது பயனுறும் தேதிக்குப்பின்னர் கொணரப்பட்ட ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வழக்கும், வழக்கின் சூழ்நிலைகளின்கீழ் குறைந்த தண்டனைக்கான சட்டத்தின் நெறி தோதானமுறையில் ஏற்புடையதாகின்றதென வழக்கைக் கேட்கின்ற குழாம் தீர்மானித்தாலொழிய, இந்த ஊக்கு

பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில் தரப்பட்டுள்ள நிலையான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்மூலமாகவல்லாது, சார்த்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை இடம்பெற்ற நேரத்தில் பயனிலிருந்த நிலையான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் ஆளப்படுதல் வேண்டும். இந்நோக்கங்களுக்காக, முன்னைய மீறுகைகள் இடம்பெற்ற கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் காலப்பகுதிகள், விதி 53(6)(ஈ) இன்கீழ் பன்மடங்கு மீறுகைகளின் நோக்கங்களுக்காகக் கவனத்துட்கொள்ளப்படமுடியும் என்பதுடன் 93 ஆம் விதியில் எடுத்துக்கூறப்பட்ட வரையறைகள் பற்றிய நியதிச்சட்டம் நடவடிக்கைமுறைசார் விதிகளாகவுள்ளன, நிலையான விதிகளல்ல அத்துடன் இவை, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில் உள்ள மற்றெல்லா நடவடிக்கைமுறைசார் விதிகளுடன் சேர்த்து எதிர்ச்செயலாற்றமுறையில் ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும் (ஆயின், எவ்வாறாயினும், பயனுறும் தேதிக்குமுன்னர் வரையறைகள் பற்றிய நியதிச்சட்டக் காலப்பகுதி ஏலவே முடிவுறாதிருப்பின், அந்த 93 ஆம் விதி எதிர்ச்செயலாற்றமுறையில் மட்டுமே ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்.

(இ) பயனுறும் தேதிக்குமுன்னர் எங்குள்ளாரென்பது பற்றிய ஏதேனும் தவறுதல் (அப்பதங்கள் பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, ஒரு கோப்பிடுதல் தவறுதலாகவிருப்பினுஞ்சரி, அல்லது ஒரு தவறிய பரீட்சிப்பாகவிருப்பினுஞ்சரி) முன்கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் பெறுபேறுகள் முகாமைககான சர்வதேச நியமத்துக்கிணங்க, முடிவுறுமுன்னர், அதன்மீது நம்பவும்படலாம்; ஆனால் இடம்பெற்றதிலிருந்து பன்னிரெண்டு (12) மாதங்களுக்கப் பின்னர் முடிவுற்றதாக அது கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைக் கண்டறிந்து பயனுறும் தேதிக்குமுன்னர் இறுதி முடிபு அளிக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில், ஆனால் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பயனுறும் தேதியன்றுள்ளவாறு தகவின்மைக் காலப்பகுதிக்கு இன்னமும் உட்பட்டுக்கொண்டிருக்குமிடத்து, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் நோக்கில் தகவின்மைக் காலப்பகுதியில் குறைப்பொன்றைக கவனததுட்கொள்வதற்கு இஊபபமு வுக்கு அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்குப் பெறுபேறுகள் முகாமைப் பொறுப்பைக் கொண்டிருந்த வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம் தகவின்மைக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் செய்யப்படுதல் வேண்டும். விதி 70 ஐப் பின்பற்றி அளிக்கப்பட்ட முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம். இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள், ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றைக் கண்டறிந்து இறுதி முடிபு அளிக்கப்பட்டு தகவின்மைக் காலப்பகுதி முடிவுற்றிருக்குமிடத்து எவ்வழக்குக்கும் ஏற்புடையனவாதலாகாது.

(உ) விதி 53(1) இன்கீழ் ஓர் இரண்டாவது மீறுகைக்காகத் தகவின்மைக் காலப்பகுதியை மதிப்பீடுசெய்யும் நோக்கங்களுக்காகப் பயனுறும் தேதிக்கு முன்னர் வலுவிலிருந்த விதிகளின் அடிப்படையின்மீது முதலாவது மீறுகைக்கான தடைவிதிப்பு தீர்மானிக்கப்பட்டவிடத்து, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் ஏற்புடையற்பாலவையாக இருந்திருப்பின் அந்த முதலாவது மீறுகைக்காக மதிப்பிடப்பட்டிருந்திருக்கக்கூடிய தகவின்மைக் காலப்பகுதி ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) தடைசெய்யப்பட்ட நிரலிற்கான மாற்றங்களும் தடைசெய்யப்பட்ட நிரலின்மீதான பதார்த்தங்கள் அல்லது முறைகள் தொடர்பான தொழினுட்ப ஆவணங்களும், அவை குறிப்பாக வேறுவகையில் ஏற்பாடுசெய்தாலொழிய எதிர்ச்செயலாற்றமுறையில் ஏற்புடையனவாக்கப்படுதலாகாது. எவ்வாறாயினும், ஒரு விதிவிலக்காக, தடைசெய்யப்பட்டவொரு பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்டவொரு முறை தடைசெய்யப்பட்ட நிரலிலிருந்து அகற்றப்பட்டுள்ளபோது முன்னர் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் காரணமாகத் தகவின்மைக் காலப்பகுதிக்குத் தற்போது உட்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், தடைசெய்யப்பட்ட நிரலிலிருந்து அப்பதார்த்தத்தை அல்லது அம்முறையை அகற்றுகின்றமையின் நோக்கில் தகவின்மைக் காலப்பகுதியிலான குறைப்பொன்றைக் கவனத்துட்கொள்வதற்கு இஊபபமு வுக்கு அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்குப் பெறுபேறுகள் முகாமைப் பொறுப்பைக் கொண்டிருந்த வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

**பொருள்கோடல்:-**

101. இவ்விதிகளின் நோக்கத்துக்காக -

"ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிருவாக மற்றும் முகாமை முறைமை (ஊபபநிமுமு)" என்பது, தரவுப் பாதுகாப்புச் சட்டவாக்கத்துடன் இணைந்து அக்கறைகொண்டுள்ளோரையும் உஊபபமு வையும் உதவுவதற்கு வடிவமைக்கப்பட்ட தரவுப்பதிவு, தேக்கிவைத்தல், பகிர்தல் மற்றும் அறிக்கையிடுதலுக்கான இணைய அடிப்படையிலான தரவுத்தள முகாமைக் கருவி என்று பொருளாகும்;

"நிருவாகம்" என்பது, ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை அளித்தல், வழங்குதல், மேற்பார்வை செய்தல், வசதிப்படுத்துதல் அல்லது வேறோராள் பயன்படுத்துவதில் அல்லது பயன்படுத்துவதற்கு எத்தனிப்பதில் வேறுவகையாகப் பங்குபற்றுதல் என்று பொருளாகும்;

"பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகை" என்பது, அகத்தோற்றப் பதார்த்தங்களின் அதிகரித்த அளவுகள் அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாடுபற்றிய சான்று உட்பட, ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமையை ஒரு மாதிரியில் அடையாளங்காண்கின்ற, ஆய்வுகூடங்களுக்கும் தொடர்புபட்ட தொழிநுட்ப ஆவணங்களுக்குமான சர்வதேச நியமத்துடன் ஒத்திருக்கின்ற உஊபபமு வினால் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட ஆய்வுகூடத்திலிருந்தான அல்லது உஊபபமு வினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆய்வுகூடத்திலிருந்தான ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

"பாதகமான நடைமுறைக் கண்டறிகை" என்பது, ஏற்புடையற்பாலனவான சர்வதேச நியமங்களில் விவரிக்கப்பட்டவாறு ஒரு பாதகமான நடைமுறைக் கண்டறிகையாக அடையாளங்காணப்பட்ட ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

"தீங்குபெருக்கின்ற சூழ்நிலைகள்" என்பது, நியமத் தடைவிதிப்புக்கு அதிகமான தகவின்மைக் காலப்பகுதி விதிக்கப்படுவதனை நியாயப்படுத்தக்கூடிய, ஒரு விளையாட்டு வீரரை அல்லது வேறு ஆளைச் சம்பந்தப்படுத்துகின்ற சூழ்நிலைகள் அல்லது அவர்களினாலான நடவடிக்கைகள் என்று பொருளாகும். அத்தகைய சூழ்நிலைகளும் நடவடிக்கைகளும் பின்வருவனவற்றை உள்ளடகுதல் வேண்டும், ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுவனவல்ல: விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பன்மடங்கு தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அல்லது தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தினார் அல்லது உடைமையில் வைத்திருந்தார், ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையைப் பன்மடங்கான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தினார் அல்லது உடைமையில் வைத்திருந்தார் அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் பன்மடங்கான மீறுகைகளைப் புரிந்தார் என்பனவாகும்;

"ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான செயற்பாடுகள்" என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கல்வி மற்றும் தகவல், பரீட்சிப்புப் பகிர்வுத்திட்டமிடுதல், பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தல் குழுவைப் பேணுதல், விளையாட்டு வீரா உயிரியற்சார் நடைமுறைகளை மதாமை செய்தல், பரீட்சித்தலை நடாத்துதல், மாதிரிகளின் பகுப்பாய்வை ஒழுங்குபடுத்துதல், உளவறிதலைச் சேகரித்தலும் புலனாய்வுகளை நடாத்துதலும், நோபவிவிண்ணப்பங்களைச் செய்முறைப்படுத்துதல், பெறுபேறுகள் முகாமை, விதிக்கப்பட்ட எவையேனும் விளைவுகளைக் கண்காணித்தலும், அவற்றுடன் இணங்கியொழுகுதலை வலுவுறுத்துதலும், சட்டக்கோவையில் அத்துடன்/அல்லது சர்வதேச நியமங்களில் தரப்பட்டுள்ளவாறு, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் அல்லது அதன்சார்பில் நிறைவேற்றப்படவுள்ள ஊக்கு பதார்த்த பயன்பாட்டிற்கெதிராகத் தொடர்புபட்ட வேறெல்லாச் செயற்பாடுகளும் என்பவற்றை உள்ளடக்கும்;

"ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு" என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாடுச் செய்முறையின் ஏதேனும் பாகத்தைத் தொடக்கிவைப்பதற்கான, நடைமுறைப்படுத்துவதற்கான அல்லது வலுவுறுத்துவதற்கான விதிகளைக் கடைப்பிடிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளவொரு கையொப்பமிடுநர் என்று பொருளாகும். இது, சர்வதேச ஒலிம்பிக் குழுவையும், சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழுவையும், தமது நிகழ்ச்சிகளில் பரீட்சித்தலை நடாத்துகின்ற வேறு பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்புகளையும், உஊபபமு வையும், சர்வதேசச் சம்மேளனங்களையும், தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளையும் உள்ளடக்கும்;

"விளையாட்டு வீரர்" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதேபொருளையுடையது;

"விளையாட்டு வீரர் உயிரியற்சார் நடைமுறை" என்பது, பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலும், ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலும் விவரிக்கப்பட்டவாறு தரவுகளைச் சேகரித்து சரிபார்க்கின்ற நிகழ்ச்சித்திட்டமும் முறைகளும் என்று பொருளாகும்;

"விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர்" என்பது, விளையாட்டுகள் போட்டியில் பங்குபற்றுகின்ற அல்லது அதற்கு ஆயத்தமாகின்ற விளையாட்டு வீரரொருவருடன் செயலாற்றுகின்ற, அவருக்குச் சிகிச்சையளிக்கின்ற அல்லது உதவுகின்ற எவரேனும் பயிற்றுநர், பயிற்சியளிப்பவர், முகாமையாளர், முகவர், ஆட்டக்குழுப் பணியாட்டொகுதியினர், அலுவலர், மருத்துவப்பயிற்சி ஆளணியினர், பெற்றோர் அல்லது வேறெவரேனுமாள் என்று பொருளாகும்;

"எத்தனிப்பு" என்பது, ஓர் ஊக்கு பதர்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிவதனை இறுதியாக விளைவிப்பதற்குத் திட்டமிடப்பட்ட நடத்தை நெறியில் கணிசமானளவிலான நடவடிக்கையாக அமைகின்ற

நடத்தையில் வேண்டுமென்று ஈடுபடுதல் என்று பொருளாகும். ஆயின், எவ்வாறாயினும், எத்தனிப்பில் சம்பந்தப்படாத ஒரு மூன்றாந்திறத்தவரினால் எத்தனிப்பு கண்டுபிடிக்கப்படுமுன்னர் ஆளொருவர் அவ்வெத்தனிப்பைக் கைதுறந்தால், ஒரு மீறுகையைப் புரிவதற்கான எத்தனிப்பின் அடிப்படையின்மீது மட்டுமே ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையெதுவும் இருத்தலாகாது;

"இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகை" என்பது, ஒரு பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையைத் தீர்மானிக்குமுன்னர் ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தினால் அல்லது தொடர்புபட்ட தொழினுட்ப ஆவணங்களினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மேலதிகப் புலனாய்வைத் தேவைப்படுத்துகின்ற ஓர் உஊபபமு தராதர அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடத்திலிருந்தான அல்லது வேறு உஊபபமு அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடத்திலிருந்தான அறிக்கை என்று பொருளாகும்;

"இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகை" என்பது, ஏற்புடையற்பாலனவான சர்வதேச நியமங்களில் விவரிக்கப்பட்டவாறு இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகை என விவரிக்கப்பட்ட ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

"விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றம்(விநநீ)" என்பது, 2013ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, விளையாட்டுகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளையுடையது;

"சட்டக்கோவை" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

"போட்டி" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

"மாசுபடுத்தப்பட்ட தயாரிப்பு" என்பது, தயாரிப்புச் சுட்டுத்துண்டில் அல்லது ஒரு நியாயமான இணையத்தளத் தேடுகையில் கிடைக்கக்கூடிய தகவலில் வெளிக்காட்டப்படாத தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்றைக் கொண்டுள்ள ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

"முடிபின் வரையறை" என்பது, ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, ஒரு மாதிரியில் எந்தத் தொடக்கப் பதார்த்தத்திற்கான பெறுபேறின் பெறுமதிக்குமேல் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையொன்று அறிக்கையிடப்படவேண்டுமோ அந்தத் தொடக்கப் பதார்த்தத்திற்கான பெறுபேறின் பெறுமதி என்று பொருளாகும்;

"கையளிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர்" என்பது, இஊபபமு வுக்காக மாதிரிச் சேகரிப்பை அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுச் சேவைகளை அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்ற மூன்றாந்திறத்தவர்கள் அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகள் அல்லது இஊபபமு வுக்காக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுச் சேவைகளைப் புரிகின்ற சுயேச்சையான ஒப்பந்தக்காரர்களாக சேவையாற்றுகின்ற தனியாட்கள் என்போருட்பட, ஆனால் அவர்களுக்கு வரையருக்கப்படாமல், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும் அம்சத்தை அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை இஊபபமு எந்த ஆளுக்குக் கையளிக்கின்றதோ அந்த எவரேனுமாள் என்று பொருளாகும்;

"தகைமையீனம்" என்பது, எவையேனும் பதக்கங்களை, புள்ளிகளை மற்றும் பரிசில்களை இழப்பித்தலுட்பட, விளைகின்ற எல்லா விளைவுகளுடனும். குறிப்பிட்ட ஒரு போட்டியில் அல்லது நிகழ்ச்சியில் விளையாட்டு வீரரின் பெறுபேறுகள் செல்லுபடியற்றனவாக்கப்படுகின்றமை என்று பொருளாகும்;

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாடு: பரீட்சித்தல், புலனாய்வுகள், எங்குள்ளாரென்பது, நோபவி க்கள், மாதிரிச்சேகரிப்பு மற்றும் கையாமளுதல், ஆய்வுகூடப் பகுப்பாய்வு, பெறுபேறுகள் முகாமை மற்றும் விதி 6 இன் மீறுகைகள் தொடர்பான புலனாய்வுகள் அல்லது வழங்குநடவடிக்கைகள் (தகவின்மை அல்லது தற்காலிக இடைநிறுத்துகையின்போதான நிலைமை) என்பன உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், இடையிலுள்ள எல்லா உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்,இடையிலுள்ள எல்லா நடவடிக்கைகளும் செய்முறைகளும் உட்பட,பரீட்சிப்புப் பகிர்வுத்திட்டமிடுதலிலிருந்து ஏதேனும் மேன்முறையீட்டை இறுதியாகக் கையாண்டு தீர்த்தல் மற்றும் விளைவுகளை வலுவுறுத்துதல் வரையான எல்லா நடவடிக்கைகளும் செய்முறைகளும் :

"கல்வி" என்பது, விளையாட்டின் பொது இயல்பை வளர்த்துப் பாதுக்கின்ற விழுமியங்களைப் புகட்டுவதற்கும் நடத்தைகளை அபிவிருத்தி செய்வதற்கும், வேண்டுமென்ற அல்லது வேண்டுமென்றல்லாத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டைத் தடுப்பதற்கும் ஆன கற்றல் செய்முறை என்று பொருளாகும் :

"நிகழ்ச்சி" என்பது, ஒலிம்பிக் விளையாட்டுகள், பீனா உலகத் திறப்பாட்டு முதன்மைகள், அல்லது பான் அமெரிக்க விளையாட்டுகள் உட்பட, ஓர் ஆட்சிக் குழுவின்கீழ் ஒன்றாக நடாத்தப்படும் தனிப்பட்ட போட்டிகளின் தொடர் என்று பொருளாகும்:

"நிகழ்ச்சிக் காலப்பகுதி" என்பது, நிகழ்ச்சியின் ஆட்சிக்குழுவினால் நிலைநாட்டப்பட்டவாறு, ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பத்துக்கும் முடிவுக்குமிடையேயான நேரம் என்று பொருளாகும் :

"நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள்" என்பது, ஏதேனும் நிகழ்ச்சிக்காக ஆட்சிக் குழுவினால் அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட இடங்கள் என்று பொருளாகும் :

"தவறு" என்பது, குறிப்பிட்டவொரு நிலைமைக்குத் தோதானதாகவுள்ள கடமையின் ஏதேனும் மீறுகையிலான அல்லது ஏதேனும் கவனமின்மையிலான தவறு என்று பொருளாகும். ஒரு விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறினது அளவை மதிப்பீடுசெய்வதில் கவளத்துக்கெடுக்கப்படவேண்டிய காரணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: உதாரணமாக, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் அனுபவம், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பாதுகாக்கப்பட்ட ஆளாவென்பது, ஆற்றல்குறைவு போன்ற விசேட கரிசனைகள், விளையாட்டு வீரரினால் புலனுணரப்பட்டிருக்கக்கூடியது அபாயத்தின் அளவு மற்றும் புலனுணரப்பட்ட அபாயமட்டமாக இருந்திருக்கவேண்டியது தொடர்பாக விளையாட்டு வீரரினால் பிரயோகிக்கப்பட்ட கவனத்தினதும் புலனாய்வினதும் மட்டம் என்று பொருளாகும் :

"நிதிசார் விளைவுகள்" என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையுடன் இணைந்த செலவுதொகைகளை அறவிடுவதற்கு விதிக்கப்பட்ட நிதிசார் தடைவிதிப்பு என்று பொருளாகும் :

"போட்டியின்போது" என்பது விளையாட்டு வீரர் எந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளாரோ அந்தப் போட்டிக்குமுன்னரான நாளன்று பி.ப 11.59 மணிக்குத் தொடங்கி அத்தகைய போட்டியின் முடிவுவரையான காலப்பகுதி மற்றும் அத்தகைய போட்டியுடன் தொடர்புபட்ட மாதிரிச் சேகரிப்புச் செய்முறை என்று பொருளாகும், ஆயின், எவ்வாறாயினும், ஒரு சர்வதேசச் சம்மேளனம், அதன் விளையாட்டுக்காக வித்தியாசமான வரைவிலக்கணம் அவசியமாகவுள்ளதெனக் கட்டாயப்படுத்தும் நியாயப்படுத்துகையொன்றை வழங்கினால், உஊபபமு குறிப்பிட்டவொரு விளையாட்டுக்காக மாற்று வரைவிலக்கணமொன்றை அங்கீகரிக்கலாம் :

"சுயேச்சையான அவதானிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம்" என்பது, குறித்துசில நிகழ்ச்சிகளுக்கு முன்னர் அல்லது அவற்றின்போது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டுச் செய்முறையை அவதானித்து அதுபற்றிய வழிகாட்டுகையை வழங்குகின்றவர்களும், உஊபபமு வின் மேற்பார்வையின் கீழுள்ளவர்களுமான அவதானிப்பாளர் அத்துடன்/அல்லது கணக்காய்வாளர்கள் குழு என்று பொருளாகும் :

"தனிப்பட்ட விளையாட்டு" என்பது, ஓர் ஆட்டக்குழு விளையாட்டாகவிராத ஏதேனும் விளையாட்டு என்று பொருளாகும்:

"தகவின்மை" என்பது, ஏதேனும் போட்டியில் அல்லது வேறு செயற்பாட்டில் பங்குபற்றுவதிலிருந்து அல்லது நிதியளிக்கப்படுவதிலிருந்து குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு ஓர் ஊக்கு பதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை காரணமாக ஒரு விளையாட்டு வீரரின் மீது அல்லது வேறு ஆளின்மீது விதிக்கப்பட்ட தடை என்று பொருளாகும் :

"சர்வதேச நிகழிச்சி என்பது, சர்வதேச ஒலிம்பிக்குழு, சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு, ஒரு சர்வதேசச் சம்மேளனம், ஒரு பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, அல்லது வேறொரு சர்வதேச விளையாட்டு ஒழுங்கமைப்பு நிகழ்ச்சிக்கான ஆட்சிக் குழுவாகவுள்ளவிடத்தான அல்லது நிகழ்ச்சிக்கான தொழிநுட்ப அலுவலர்களை நியமிக்கின்றவிடத்தான ஒரு நிகழ்ச்சி அல்லது போட்டி என்று பொருளாகும் :

"சர்வதேசமட்ட விளையாட்டு வீரர்" என்பது, பரீட்சித்தல் மற்றும் புலனாய்வுகளுக்கான சர்வதேச நியமத்துக்கு ஒத்ததாகவுள்ள, ஒவ்வொரு சர்வதேசச் சம்மேளனத்தினாலும் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, சர்வதேச மட்டத்திலான விளையாட்டில் போட்டியிடுகின்ற ஒரு விளையாட்டு வீரர் என்று பொருளாகும் :

"சர்வதேச நியமம்" என்பது, சர்வதேச நியமங்கள் சட்டக்கோவைக்கு ஆதரவாக உஊபபமு வினால் கடைப்பிடிக்கப்பட்ட வொரு நியமம் என்று பொருளாகும் என்று பொருளாகும் என்பதுடன் அந்தச் சர்வதேச நியமத்தைப் பின்பற்றி வழங்கப்பட்ட எனவயேனும் தொழிநுட்ப ஆவணங்களை உள்ளடக்குதலும் வேண்டும் :

"பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்புகள்" என்பது, ஏதேனும் கண்டஞ்சார், பிராந்திய அல்லது வேறு சர்வதேச நிகழ்ச்சிக்கான ஆட்சிக் குழுவாகப் பணியாற்றுகின்ற தேசிய ஒலிம்பிக் குழுக்களின் கண்டஞ்சார் கழகங்களும் வேறு சர்வதேசப் பன்மடங்கான விளையாட்டு ஒழுங்கமைப்புகளும் என்று பொருளாகும் :

“குறியீடு” என்பது, ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்ற ஒரு கலவை, கலவைகளின் தொகுதி அல்லது உயிரியற்சார் வேறுபடுத்தி (வேறுபடுத்திகள்) என்று பொருளாகும்:

“ஊன்மச்சிதைவு” என்பது, ஓர் உயிரிஉருமாற்றச் செய்முறைமூலம் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் என்று பொருளாகும் :

“குறைந்தபட்ச அறிக்கையிடுதல் மட்டம்” என்பது, எந்தவொரு மாதிரிக்குக் குறைவாக உஊபபமு அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடங்கள் அம்மாதிரியைப் பாதகமான பகுப்பாய்வுார் கண்டறிகையாக அறிக்கையிடலாகாதோ அந்தவொரு மாதிரியில் தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்றின் அல்லது அதன் ஊன்மச்சிதைவின் (ஊன்மச்சிதைவுகளின்) அல்லது குறியீட்டின் (குறியீடுகளின்) மதிப்பிடப்பட்ட செறிவு என்று பொருளாகும் :

“பராயமடையாதவர்” என்பது, பதினெட்டு (18) வயதை அடைந்திராத ஓர் இயற்கை ஆள் என்று பொருளாகும் :

“தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு” என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைக் கடைப்பிடிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும், மாதிரிகளின் சேகரிப்பைப் பணிப்பதற்கும், பரீட்சிப்புப் பெறுபேறுகளை முகாமைசெய்வதற்கும், தேசியமட்டத்தில் கேட்புகளை நடாத்துவதற்கும் முதனிலை அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளதென ஒவ்வொரு நாட்டினாலும் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் உருவகம் என்று பொருளாகும். ஏதேனும் தகுதிவாய்ந்த பகிரங்க அதிரசபையினால் இப்பெயர்குறித்தல் செய்யப்பட்டிராதவிடத்து, உருவகமானது, நாட்டின் தேசிய ஒலிம்பிக் குழுவாக அல்லது அதன் பெயர்குறிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் :

“தேசிய நிகழ்ச்சி” என்பது, ஒரு சர்வதேச நிகழ்ச்சியாகவிராத சர்வதேச அல்லது தேசியமட்ட விளையாட்டு வீரர்களை உட்படுத்துகின்றவொரு விளையாட்டு நிகழ்ச்சி அல்லது போட்டி என்று பொருளாகும் :

“தேசியச் சம்மேளனம்” என்பது, இலங்கையில் அந்நாட்டில் அல்லது பிராந்தியத்தில் சர்வதேசச் சம்மேளனத்தினது விளையாட்டை ஆளுகின்ற உருவகமாக ஒரு சர்வதேசச் சம்மேளனத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது அதனால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஒரு தேசிய அல்லது பிராந்திய உருவகம் என்று பொருளாகும் :

“தேசியமட்ட விளையாட்டு வீரர்” என்பது,

(அ) முறையான விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால் அல்லது விளையாட்டுகள் அமைச்சின் விளையாட்டுகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தேசியமட்டப்போட்டியின் ஏதேனும் விளையாட்டில் பங்குபற்றுகின்ற ஒரு விளையாட்டு வீரர் :

(ஆ) ஏதேனும் விளையாட்டில் தேசியப் போட்டியின் அதியுச்ச மட்டத்தில் போட்டியிடுகின்ற ஒரு விளையாட்டு வீரர்:

(இ) சர்வதேசச் சம்மேளனத்தினாலான சர்வதேசமட்ட விளையாட்டு வீரராகத் தேசியமட்டத்தில் அல்லது சர்வதேச நிகழ்ச்சிகளில் அலல்து சர்வதேச நிகழ்ச்சிகளில் போட்டியிடுகின்ற ஒரு விளையாட்டு வீரர்,

என்று பொருளாகும்:

ஆயின், எவரேனும் விளையாட்டு வீரர் ஒரு சர்வதேசமட்ட விளையாட்டு வீரராக அவரது முறையான சர்வதேசச் சம்மேளனத்தினால் வகுப்பாக்கஞ்செய்யப்படுமிடத்து, அத்தகைய விளையாட்டு வீரர், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் நோக்கங்களுக்காக ஒரு சர்வதேச மட்ட விளையாட்டு வீரராகக் கருதப்படுதல் வேண்டும்: ஒரு தேசியமட்ட விளையாட்டு வீரராக அல்ல:

"தேசிய ஒலிம்பிக் குழு" என்பது, சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு என்று பொருளாகும். இலங்கையில், தேசிய ஒலிம்பிக் குழுவானது இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவாகவுள்ளது:

"தவறு அல்லது அசட்டை எதுவுமில்லை" என்பது, தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை விளையாட்டு வீரர் பயன்படுத்தியிருந்தாரென அல்லது அது அவருத்கு ஊட்டப்பட்டதென விளையாட்டு வீரர் அறிந்திருக்கவில்லை அல்லது சந்தேகித்திருக்கவில்லை மற்றும் அதியுச்ச முற்காப்பைப் பிரயோகித்திருந்தும்கூட நியாயமானமுறையில் அறிந்திருக்கமுடியாது அல்லது சந்தேகித்திருக்கமுடியாது அல்லது வேறுவகையாக ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியை மீறியிருக்கமுடியாது என்று பொருளாகும்:

"தொழிற்பாடுசார் சுதந்திரம்" என்பது, பெறுபேறுகள் முகாமைக்கான பொறுப்பைக் கொண்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் சபையுறுப்பினர்கள், பணியாட்டொகுதியுறுப்பினர்கள், ஆணைக்குழுவுறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்கள் அல்லது அதன் துணைநிறுவனங்கள் அத்துடன் கருமத்தின் புலனாய்விலும் முன்நீதித்தீர்ப்பிலும் சம்பந்தப்பட்ட எவரேனுமாள், பெறுபேறுகள் முகாமைக்கான பொறுப்புடனான அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் கேட்புக் குழாங்களின் உறுப்பினர்களாக அத்துடன்/அல்லது எழுதுவினைஞர்களாக நியமிக்கப்படமுடியாது என்று பொருளாகும். (கேட்புக் குழாங்கள், ஊக்கு கதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பிடமிருந்தான அல்லது எவரேனும் மூன்றாந்திறத்தவரிடமிருந்தான கேட்பு மற்றும் முடிபுசெய்தல் செய்முறையை நடாத்துவதற்கான நிலைமையிலிருத்தல் வேண்டும். குறிக்கோளானது, கேட்புக் குழாத்தின் உறுப்பினர்கள் அல்லது கேட்புக் குழாத்தின் முடிபில் வேறுவகையாகச் சம்பந்தப்பட்ட தனியாட்கள், வழக்கின் புலனாய்வில் அல்லது வழக்கை மேற்கொண்டு நடாத்துவதற்கான முடிபுகளில் சம்பந்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதாகவுள்ளது):

"போட்டியில் இல்லாதபோது" என்பது, போட்டியின்போதாகவிராத ஏதேனும் காலப்பகுதி என்று பொருளாகும்:

"பங்குபற்றுநர்" என்பது, எவரேனும் விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆள் என்று பொருளாகும்:

"ஆள்" என்பது, ஓர் இயற்கை ஆள் அல்லது ஓர் ஒழுங்கமைப்பு அல்லது வேறு உருவகம் என்று பொருளாகும்:

"உடைமை" என்பது, உள்ளபடியான, பௌதீக உடைமை, அல்லது ஆக்க உடைமை என்று பொருளாகும்:

"தடைசெய்யப்பட்ட நிரல்" என்பது, உகை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் வெளியிடப்பட்டவாறான பதார்த்தங்களின் மற்றும் முறைகளின் நிரல் என்று பொருளாகும்:

"தடைசெய்யப்பட்ட முறை" என்பது, தடைசெய்யப்பட்ட நிரலின்மீது அவ்வாறு விவரிக்கப்பட்ட ஏதேனும் முறை என்று பொருளாகும்:

"தடைசெய்யப்பட்ட பதார்த்தம்" என்பது, தடைசெய்யப்பட்ட நிரலின்மீது அவ்வாறு விவரிக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் அல்லது பதார்த்தங்களின் வகுப்பு என்று பொருளாகும்:

"பாதுகாக்கப்பட்ட ஆள்" என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை ஏற்பட்ட நோத்தில்

(அ) பதினாறு (16) வயதை அடைந்திராத:

(ஆ) பதினெட்டு (18) வயதை அடைந்திராத மற்றும் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட பரீட்சிப்புக் குழுவில் உள்ளடக்கப்படாத: அத்துடன்

(இ) வயது தவிர்ந்த வேறு காரணங்களுக்காக ஏற்புடையற்பாலதான தேசியச் சட்டவாக்கத்தின் கீழ் சட்ட ஆற்றல் இல்லாதவரெனத் தீர்மானிக்கப்பட்டுள்ள,

ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு இயற்கை ஆள் என்று பொருளாகும்:

"தற்காலிகக் கேட்பு" என்பது, விளையாட்டு வீரருக்கு அறிவித்தலையும் ஒன்றில் எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான படிவத்தில் கேட்கப்படுவதற்கானவொரு சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றதும் 38 ஆம் விதியின் கீழான கேட்புக்கு முன்னர் இடம்பெறுகின்றதுமான துரிதப்படுத்தப்பட்டு சுருக்கீடு செய்யப்பட்ட கேட்பு என்று பொருளாகும்:

“தற்காலிக இடைநிறுத்துகை” என்பது, நடாத்தப்பட்டவொரு கேட்பிலான இறுதி முடிபுக்குமுன்னர் ஏதேனும் போட்டியில் அல்லது செயற்பாட்டில் பங்குபற்றுவதிலிருந்து தற்காலிகமாகத் தடைசெய்யப்படுகின்ற விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் என்று பொருளாகும்:

“பகிரங்கமானமுறையில் வெளிக்காட்டுதல்” என்பது, பொதுமக்களுக்கு அல்லது 84 ஆம் விதிக்கிணங்க முன்னைய அறிவிப்புக்கு உரித்துள்ள அவ்வாட்களுக்கப்பாலான ஆட்களுக்குத் தகவலைப் பரப்புதல் அல்லது பகிர்தல் என்று பொருளாகும்:

“பிராந்திய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு” என்பது, உறுப்பு நாடுகளின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிகழ்ச்சித்திட்டங்களின் கையளிக்கப்பட்ட துறைகளை ஒருங்கிணைப்பதற்கும் முகாமைசெய்வதற்கும் அவற்றினால் பெயர்குறிக்கப்பட்டவொரு பிராந்திய உருவகம் என்று பொருளாகும்: இது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைக் கடைப்பிடித்தலும் நடைமுறைப்படுத்தலும், மாதிரிகளைத் திட்டமிடுதலும் சேகரித்தலும், பெறுபேறுகளை முகாமைசெய்தலும், நோபவி க்களைப் பரிசீலனை செய்தலும், கேட்புகளை நடாத்துதலும், ஒரு பிராந்திய மட்டத்தில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் என்று பொருளாகும்:

“பதிவுசெய்யப்பட்ட பரீட்சித்தற் குழு” என்பது, சர்வதேசச் சம்மேளனங்களின் அல்லது தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளின் பரீட்சிப்புப் பகிர்தல் திட்டத்தின் பாகமாக நோக்கப்பட்ட போட்டியில் உள்ளபோதான மற்றும் போட்டியில் இல்லாதபோதான பரீட்சித்தலுக்கு அமைந்தோராகவுள்ள அச்சர்வதேசச் சம்மேளனங்களினால் சர்வதேசமட்டத்திலும், தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளினால் தேசியமட்டத்திலும் அதியுச்ச முனனுரிமைகொண்ட விளையாட்டு வீரர்களின் குழு என்று பொருளாகும்:

“பெறுபேறுகள் முகாமை” என்பது, முதற்சந்தர்ப்பத்தில் அல்லது மேன்முறையீட்டின் மீது கேட்புச் செய்முறையின் முடிவுட்பட, குற்றச்சாட்டுத் தொடக்கம் கருமத்தின் இறுதித் தீர்மானம்வரை, பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் உறுப்புரை 5 தின்படியான அறிவிப்புக்கும், அல்லது குறித்தசில விடயங்களில், பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச நியமத்தின் உறுப்புரை 5 தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய முன்னறிவிப்பு நடவடிக்கைகளுக்குமிடையேயான காலஎல்லையை அடக்குகின்ற செய்முறை என்று பொருளாகும்:

“மாதிரி அல்லது வகைமாதிரி” என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் உயிரியற்சார் பொருள் என்று பொருளாகும்:

“இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (இஊபபமு)” என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை என்று பொருளாகும்:

“தொழிநுட்ப ஆவணம்” என்பது, ஒரு சர்வதேச நியமத்தில் எடுத்துக்கூறப்பட்டவாறு குறிப்பிட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விடயங்கள்மீது கட்டாயத் தொழிநுட்பத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளதுக்குக் காலம் உஊபபமு வினால் கடைப்பிடிக்கப்பட்டு வெளியிட்டதுமானவோர் ஆவணம் என்று பொருளாகும் :

“பரீட்சித்தற் குழு” என்பது, போட்டியில் இல்லாதபோது விளையாட்டு வீரர்களிடமிருந்து எங்குள்ளாரென்பது பற்றிய ஏதேனும் தகவல் தேவைப்படுகின்ற பதிவுசெய்யப்பட்ட பரீட்சிப்புக் குழுவுக்குக்கீழான வரிசை என்று பொருளாகும்;

“விலைப்படுத்தல்” என்பது எவரேனும் முன்றாந்திறத்தவருக்கு ஒரு விளையாட்டு வீரரினால் விளையாட்டு வீரரின் ஆதரிப்பு ஆளினால் ஆல்லது ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாடிற்கெதிரான ஒழுங்கமைப்பின் அதிகாரத்துக்கமைந்த வேறெவரேனுமாளினால் (ஒன்றில் உருப்படியாக அல்லது எவையேனும் இலத்திரனியல் அல்லது வேறு வழிவகைகள்முலம்) ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையை விற்பனைசெய்தல், இடம்பெயர்த்தல் அனுப்புதல், வழங்குதல் அல்லது விநியோகித்தல் (அல்லது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காக உடைமையில் வைத்திருத்தல்) என்று பொருளாகும் ; ஆயின், எவ்வாறாயினும், இவ்வரைவிலக்கணம்,உண்மையான மற்றும் சட்டப்படியான நோய்தீர்க்கும் நோக்கங்களுக்காக அல்லது வேறு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயப்படுத்துகைக்காகப் பயன்படுத்தப்பட்டவொரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்துடன் சம்பந்தப்பட்ட நலலெண்ணத்துடனான மருத்துவ ஆளணியினரின் வழக்குகளை உள்ளடக்குதலாகாது என்பதுடன் அத்தகைய தடை செய்யப்பட்ட பதார்த்தங்கள் உண்மையான மற்றும் சட்டப்படியான நோய்தீர்க்கும் நோக்கங்களுக்காக உட்கருதப்படுவதில்லையென அல்லது விளையாட்டுச் செயல்நிறைவேற்றுகையை அதிகரிப்பதற்கு உட்கருதப்படுகின்றனவெனச் சூழ்நிலைகள் முழுமையாக எடுத்துக்காட்டினாலொழிய, போட்டியில் இல்லாதபோது தடைசெய்யப்படாத,தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் சம்பந்தமான வழக்குகளை உள்ளடக்குதலுமாகாது;

"பரீட்சித்தல்" என்பது, 2013 ஆம் ஆண்டிள் 33 ஆம் இலக்க, விளையாட்டுகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

"நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கெதிரான விலக்களிப்புகள் (நோபவி)" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டுகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளித்தப்படுகின்றவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

"பாவனை" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டுகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது ;

"உலக ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (உஊபபமு)" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டுகளில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது ;

102. இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு பெப்ருவரி 19 ஆந்தேதிய 2163/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள், அவற்றின்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழித்தப்படுகின்றன.

EOG 04 - 0088

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.